என் தலை வைத்து உன் இணையடி காக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனித வேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணிணைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திரு பல் முனை வேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என் இளங் கழுத்தை இனிய வேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம் பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழு பதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க

சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில் வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன் கை இரண்டும் முரண்வேல் காக்க
பின் கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும் பகல் தன்னில் வச்ரவேல் காக்க
அரை இருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் மன்னரும்
கன பூஜை கொள்ளும் காளியோடு அனைவரும்

விட்டாங் காரரும் மிகு பல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பல கலசத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதர்கள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கை கால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர் வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு

குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீ எனக்கு அருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவண பவனே! சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளிபவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரி திரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனிய வேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப்பதி வாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில் மாமலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத்தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நா இருக்க யான் உனைப் பாட
எனைத் தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவிநன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளை என்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என்மீது உன்மனம் மகிழ்ந்து அருளித்
தஞ்சம் என்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்த சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அஷ்ட திக்குள்ளோர் அடங்கலும் வசமாய்
திசை மன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றவர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவ மதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர் கைவேலாம் கவசத் தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி
அறிந்து என் உள்ளம் அஷ்ட லக்சுமிகளில்

வீர லட்சுமிக்கு விருந் துணவாகச்
சூர பத்மாவைத் துணித்தகை அதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுது அளித்த
குருபரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத் தடுத்தாள் கொள என்றனது உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
கடம்பா! போற்றி! கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர் திரு கனக சபைக்கோர் அரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



# அபிராமியம்மை பதிகம்
## (திருக்கடவூர்)



கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்;
அலை ஆழி அறிதுயிலும் மாயனது தங்கையே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

பல் குஞ்சரம் தொட்(டு) எறும்பு கடையானதொரு
பல்லுயிர்க்கும் கல்லிடைப்
பட்ட தேரைக்கும் அன்று உற்பவித்திடு
கருப்பையுறு சீவனுக்கும்
மல்கும் சராசரப் பொருளுக்கும் இமையாத
வானவர் குழாத்தினுக்கும்
மற்றுமொரு மூவர்க்கும் யாவர்க்கும் அவரவர்
மனச் சலிப்பில்லாமலே
நல்கும் தொழிற்பெருமை உண்டாயிருந்து மிகும்
நவநிதி உனக்கிருந்தும்
நானொருவன் வறுமையில் சிறியனானால் அந்
நகைப்புனக்கே அல்லவோ
அல்கலந்(து) உம்பர் நாடளவெடுக்கும் சோலை
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

சலதி உலகத்தில் சராசரங்களை ஈன்ற
தாயாகினால் எனக்குத்
தாயல்லவோ யான் உன் மைந்தனன்றோ எனது
சஞ்சலம் தீர்த்து நின்றன்
முலை சுரந்(து) ஒழுகு பாலூட்டி என் முகத்தை உன்
முந்தானையால் துடைத்து
மொழிகின்ற மழலைக்கு உகந்து கொண்டு இளநிலா
முறுவல் இன்புற்றிருக்கில் யான்
குலவிவிளையாடல் கொண்டு அருள் மழை பொழிந்(து) அங்கை
கொட்டி வாவென்று அழைத்துக்
குஞ்சர முகன் கந்தனுக்(கு) இளையன் என்றெனைக்
கூறினால் ஈனம் உண்டோ
அலைகடலிலே தோன்றும் மாறாத அமுதமே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

அயன் தலை கொண்டு செண்டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயம் தனைக் கொன்(று) உரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயம் தனைப் பாடி நின்(று) ஆடி ஆடி
நாதற்குச் சுண்ணம் இடித்து நாமே. 18

வட்ட மலர்க் கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழும் தென் தில்லை பாடிச்
சிற்றம்பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம் மேல்
இட்டு நின்றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்து நாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்கு
பந்தமுமாய் வீடும் ஆயினாருக்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினாருக்(கு)
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 20

*திருச்சிற்றம்பலம்.*



# பட்டினத்தார் பாடல்கள்

## 1. திரு ஏகம்ப மாலை

### கட்டளைக் கலித்துறை

1. அறம்தான் இயற்றும் அவனிலும்
கோடி அதிகம்இல்லம்
துறந்தான் அவனில் சதகோடி
உள்ளத் துறவுஉடையோன்
மறந்தான் அறக்கற்று அறிவோடு
இருந்தும்இரு வாதனை அற்று
இறந்தான் பெருமையை என்சொல்லு
வேன்கச்சி ஏகம்பனே. 1

2. பிறக்கும் பொழுது கொடுவந்தது
இல்லை பிறந்துமண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவது
இல்லை இடைநடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்தது
என்று கொடுக்க அறியாது
இறக்கும் குலாமருக்கு என்சொல்லு
வேன்கச்சி ஏகம்பனே. 2

3. கல்லாப் பிழையும் கருதாப்
பிழையும் கசிந்துஉருகி
நில்லாப் பிழையும் நினையாப்
பிழையும்நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப்
பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்
வாய்கச்சி ஏகம்பனே. 3

# 2. திருக்காளாத்தி

1. பத்தும் புகுந்து பிறந்து
 வளர்ந்துபட் டாடைசுற்றி
முத்தும் பவளமும் பூண்டும்ஓடி
 ஆடி முடித்தபின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தரு
 கேஇனிச் சாம்பிணங்கள்
கத்தும் கணக்குஎன்ன காண்கயி
 லாபுரிக் காளத்தியே.

2. வாளான் மகவுஅரிந்து ஊட்டவல்
 லேன்அல்லேன்; மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல்
 லேன் அல்லேன்! தொண்டு செய்து
நாள் ஆறில் கண்இடந்து அப்பவல்
 லேன் அல்லேன்; நான் இனிச்சென்று
ஆளாவது எப்படி யோதிருக்
 காளாத்தி அப்பனுக்கே.

## விருத்தம்

1. முன்னை இட்டதீ முப்பு ரத்திலே
பின்னை இட்டதீ தென்இ லங்கையில்
அன்னை இட்டதீ அடிவ யிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே 6

## திருவெண்காட்டுத் திருவிசைப்பா
## விருத்தம்

1. பூதமும் கரணம் பொறிகள்ஐம் புலனும்
 பொருந்திய குணங்கள்ஓர் மூன்றும்
நாதமும் கடந்த வெளியிலே நீயும்
 நானுமாய் நிற்கும்நாள் உளதோ
வாதமும் சமய பேதமும் கடந்த
 மனோலய இன்பசா கரமே
ஏதும்ஒன்று அறியேன் யாதுநின் செயலோ
 இறைவனே ஏகநா யகனே. 7

# உடல்கூற்று வண்ணம்

## (இசை வாய்பாடு)

ஒருமடமாதும் ஒருவனும்ஆகி
இன்பசுகம்தரும் அன்புபொருந்தி
உணர்வுகலங்கி ஒழுகியவிந்து
ஊறுசுரோணித மீதுகலந்து
பனியில்ஓர்பாதி சிறுதுளிமாது
பண்டியில்வந்துபு குந்துதிரண்டு
பதுமம்அரும்பு கமடம்இதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகள் என்ற
உருவமும்ஆகி உயிர்வளர்மாதம்
ஒன்பதும்ஒன்றும் நிறைந்தமடந்தை
உதரம்அகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமும் நாளும் அறிந்து
மகளிர்கள்சேனை தரஅணை ஆடை
மண்படஉந்திஉ தைந்துகவிழ்ந்து
மடமயில்கொங்கை அமுதம் அருந்தி
ஓர் அறிவுஈர் அறிவு ஆகிவளர்ந்து
ஒளிநகைஊறல் இதழ்மடவாரும்
உவந்துமுகந்திட வந்துதவழ்ந்து
மடியில்இருந்து மழலைமொழிந்து
வாஇருபோஎன நாமம்விளம்ப
உடைமணிஆடை அரைவடம்ஆட
உண்பவர்தின்பவர் தங்களொடுஉண்டு
தெருவில் இருந்து புழுதி அளைந்து
தேடியபாலரொடு ஓடிநடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே
உயர்தருஞான குருஉபதேச
முந்தமிழின்கலை யும்கரைகண்டு
வளர்பிறைஎன்று பலரும்விளம்ப
வாழ்பதினாறுபி ராயமும்வந்து
மயிர்முடிகோதி அறுபதநீல
வண்டு இமிர்தண்தொடை கொண்டைபுனைந்து
மணிபொன்இலங்கு பணிகள் அணிந்து

மாதகர்போகதர் கூடிவணங்க
மதனசொரூபன் இவன்எனமோக
மங்கையர்கண்டும் ருண்டுதிரண்டு
வரிவிழிகொண்டு சுழியஎறிந்து
மாமயில்போல்அவர் போவதுகண்டு
மனதுபொறாமல் அவர்பிறகுஓடி
மங்கலசெங்கல சந்திகழ்கொங்கை
மருவமயங்கி இதழ்அமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி
ஒருமுதல்ஆகி முதுபொருளாய்
இருந்ததனங்களும் வம்பில்இழந்து
மதனசுகந்த விதனம்இது என்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து
வளமையும்மாறி இளமையுமாறி
வன்பல்விழுந்துஇரு கண்கள்இருண்டு
வயதுமுதிர்ந்த நரைதிரைவந்து
வாதவிரோதகு ரோதம் அடைந்து
செங்கையினில்ஓர்த டியும்ஆகியே
வருவது போவது ஒருமுதுகூனு
மந்திஎனும்படி குந்திநடந்து
மதியும் அழிந்து செவிதிமிர்வந்து
வாய் அறியாமல்வி டாமல்மொழிந்து
துயில்வரும்நேரம் இருமல்பொறாது
தொண்டையும் நெஞ்சும் உலர்ந்துவறண்டு
துகிலும்இழந்து சுணையும் அழிந்து
தோகையர்பாலகர்கள் கோரணிகொண்டு
கலியுகம்மீதில் இவர்மரியாதை
கண்டிடும்என்பவர் சஞ்சலம்மிஞ்ச
கலகலஎன்று மலசலம்வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து
தெளிவும்இராமல் உரைதடுமாறி
சிந்தையும்நெஞ்சும்உ லைந்துமருண்டு
திடமும் அழிந்து மிகவும் அலைந்து
தேறிநல்ஆதரவு ஏதுஎனநொந்து

மறையவன்வேதன் எழுதியவாறு
வந்ததுகண்டமும் என்றுதெளிந்து
இனியெனகண்டம் இனிஎன தொந்தம்
மேதினிவாழ்வுநி லாதினிநின்ற
கடன்முறைபேசும் எனஉரைநாவு
தங்கிவிழுந்துகை கொண்டுமொழிந்து
கடைவழிகஞ்சி ஒழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமும் நின்று
நெஞ்சுதடுமா றிவரும்நேரமே
வளர்பிறைபோல எயிறும்உரோம
மும்சடையும்சிறு குஞ்சியும்விஞ்ச
மனதும்இருண்ட வடிவும்இலங்க
மாமலைபோல்யம தூதர்கள்வந்து
வலைகொடுவீசி உயிர்கொடுபோக
மைந்தரும்வந்துகு னிந்தழநொந்து
மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேஇவர் காலம் அறிந்து
பழையவர்காணும் எனும் அயலார்கள்
பஞ்சுபறந்திட நின்றவர்பந்தர்
இடும்எனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியும்என்று
பலரையும்ஏவி முதியவர்தாம்
இருந்தசவம்கழு வுஞ்சிலர் என்று
பணிதுகில் தொங்கல் களபம் அணிந்து
பாவகமேசெய்து நாறும் உடம்பை
வரிசைகெடாமல் எடும்எனஓடி
வந்துஇளமைந்தர்கு னிந்துசுமந்து
கடுகிநடந்து சுடலை அடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து
விறகுஇடைமூடி அழல்கொடுபோட
வெந்துவிழுந்துமு றிந்துநிணங்கள்
உருகிஎலும்பு கருகிஅடங்கி
ஓர்பிடிநீறும்இ லாதஉடம்பை
நம்பும் அடியேனை இனி ஆளுமே.

# நவராத்திரிப் பாட்டு !

சரணம் சரணம்

கலைநிறை கணபதி சரணம் சரணம்
கஜமுக குணபதி சரணம் சரணம்
தலைவ நின் இணையடி சரணம் சரணம்
சரவண பவகுஹ சரணம் சரணம்
சிலைமலி யுடையவ சரணம் சரணம்
சிவசிவ சிவசிவ சரணம் சரணம்
உலை வறு மொருபரை சரணம் சரணம்
உமை சிவயம்பிகை சரணம் சரணம்!

# ஸ்ரீ தேவீ நமனம்!

ஸர்வ மங்கல மாங்கல்யே சிவே ஸர்வார்த்த - ஸாதிகே !
சரண்யே த்ரயம்பகே கௌரி நாராயணி நமோஸ்து தே

ஸ்ருஷ்டி - ஸ்திதி - விநாசானாம் சக்திபூதே ஸநாதனி !
குணாச்ரயே குணமயே நாராயணி நமோஸ்துதே

சரணாகத - தீனார்த்த - பரித்ராண - பராயணே !
ஸர்வஸ்யார்த்தி - ஹரே தேவி நாராயணி நமோஸ்துதே

ஜய நாராயணி நமோஸ்து தே
ஜய நாராயணி நமோஸ்து தே
ஜய நாராயணி நமோஸ்து தே

–ஸ்ரீ தேவீ மஹாத்ம்யம்

## பராசக்தி
## (மூன்றும் ஒன்றாகிய மூர்த்தி)

மாதா பராசக்தி வையமெலா நீ நிறைந்தாய்
ஆதார முன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே
ஏதா யினும்வழிநீ சொல்வாய்; எமதுயிரே,
வேதாவின் தாயே மிகப்பணிந்து வாழ்வோமே. 1

## வாணி

வாணி கலைத்தெய்வம், மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போலே அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாங் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே. 2

## ஸ்ரீ தேவி

பொன்னரசி, நாரணனார் தேவி, புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல் மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீ தேவி
தன்னிருபொற் றாளே சரண்புகுந்து வாழ்வோமே. 3

## பார்வதி

மலையிலே தான்பிறந்தாள், சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே யூதி யுலகக் கனல்வளர்ப்பாள்
நிலையி லுயர்ந்திடுவாள், நேரே யவள்பாதந்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே. 4

– மகாகவி பாரதியார்

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேலனைக்
கொடுத்த நல் குமரியளே
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற்
சக்தியெனும் மாயே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி ! 5

எண்ணியபடி நீ யருளிட வருவாய்
எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி ! 6

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
யென்றுநீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச்
சுகமதைத் தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய்வந்து
பழவினை ஓட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி ! 7

ஜெய ஜெய பாலா சாமுண்டேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீ தேவி
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீ பரமேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீ தேவி
ஜெய ஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெய ஜெய ஸ்ரீ தேவி
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி ! 8

# ஸ்ரீ மஹிஷாஸுர மர்த்தினி ஸ்தோத்ரம்!

அயி கிரிநந்தினி நந்தித மேதினி
விச்வ விநோதினி நந்தனுதே
கிரிவர விந்த்ய சிரோதி-நிவாஸினி
விஷ்ணு விலாஸினி ஜிஷ்ணுநுதே
பகவதி ஹே சிதிகண்ட்ட குடும்பினி
பூரி குடும்பினி பூரிக்ருதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே

ஸுரவர-வர்ஷிணி துர்தர தர்ஷிணி
துர்முக மர்ஷிணி ஹர்ஷரதே
த்ரிபுவன போஷிணி சங்கர - தோஷிணி
கில்பிஷ மோஷிணி கோஷரதே
தனஜ - நிரோஷிணி திதிஸுதரோஷிணி
துர்மத சோஷிணி ஸிந்து ஸுதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே

அயி ஜகதம்ப மதம்ப கதம்ப
வனப் பிரிய வாஸினி ஹாஸரதே
சிகரி சிரோமணி துங்க ஹிமாலய
ச்ருங்க நிஜாலய மத்யகதே
மதுமதுரே மதுகைடப கஞ்ஜினி
கைடப பஞ்ஜினி ராஸரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே

கமலதலாமல கோமல காந்தி
கலாகலிதாமல பாலலதே
ஸகலவிலாஸ கலாநிலயக்ரம
கேலி சலத்கல ஹம்ஸகுலே

அலிகுல ஸம்குல குவலய மண்டல
மௌலிமிலத் பகுலாலிகுலே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே

கனகலஸத்கல ஸிந்து ஜலைரநு
ஸிஞ்சிநுதே குண ரங்கபுவம்
பஜதி ஸகிம் ந சசீ குச கும்ப
தடீபரிரம்ப ஸுகாநுபவம்
தவசரணம் சரணம் கரவாணி
நதாமரவாணி நிவாஸி சிவம்
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே



## பாஹி பாஹி!

பாஹி பாஹி பவதாரிணி காளி சொரூபிணி பவதாரிணி
ஸ்ரீ சக்ரவாஸினி பவதாரிணி தக்ஷிணாமூர்த்தே பவதாரிணி
ஓங்காரரூபிணி பவதாரிணி ஹ்ரீங்கார மர்த்தனி பவதாரிணி
அங்கயற்கண்ணி பவதாரிணி ஜகதாம்ப பவானி பவதாரிணி
ஸம்ஹார ரூபிணி பவதாரிணி துர்க்கா லக்ஷ்மி பவதாரிணி
துக்கநிவாரணி பவதாரிணி அன்னபூர்ணேஸ்வரி பவதாரிணி!

# மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்!

தொடுக்குங் கடவுட் பழம் பாடற் தொடையின் பயனே
நறை பழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கை யகழ்ந்

தெடுக்குந் தொழும்பர் உளக் கோயிற் கேற்றும் விளக்கே
வளர்சிமய இமயப் பொருப்பில் விளையாடு
மிள மென் பிடியே யெறி தரங்க

முடுக்கும் புவனங் கடந்து நின்றவொருவன் திருவுள்ளத்தில்
அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே
மதுகரம் வாய்

மடுக்குங் குழற்காடே ந்துமிள வஞ்சிக் கொடியே வருகவே
மலயத்துவசன்பெற்ற பெரு வாழ்வே வருக வருகவே

பெருந் தேனிறைக்கு நறைகூந்தற் பிடியே வருக
முழுஞானப்பெருக்கே வருக பிறைமௌலிப்பெம்மான்
முக்கட்சுடர்க் கிடு நல்

விருந்தே வருக அருள் பழுத்த கொம்பே வருக திருக்கடைக்
கண் கொழித்த கருணைப்பெரு வெள்ளங் குடைவார்
பிறவிப் பெரும்பிணிக்கோர்

மருந்தே வருக பசுங்குதலை மழலைக் கிளியே வருகவே
மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வே வருக வருகவே
முன்பும்பரரசு செய் பெரும் பாவமுங் கோப

மூரிமாத் தொடர் சாபமும்
மும்மை தமிழ்ச்செழியன் வெப்பொடு கொடுங்கூனும்
மோசித்த வித்தலத்தின்

தன்பெருந் தன்மையை யுணர்ந்திலைகொல்? சிவ
ராசதானியாய்ச் சீவன் முத்தித்
தலமுமாய்த் துவாதசாந்தத் தலமுமான இத்
தலமித்த லத்திடையேன்

மன் பெருங் குரவற் பிழைத்த பாவமும் மற்ற
மாமடிகளிடு சாபமும்
வளரிளம் பருவத்து நரை திரையும் முதிர்கூனு
மாற்றிடப் பெருதி கண்டாய்

அன்பரென் புருகக் கசிந்திடு பசுந் தேனொடம்புலி ஆடவாவே
ஆணிப் பொன் வில்லி புணர் மாணிக்கவல்லி
யுடனம் புலீ யாடவாவே.

நிறை பொங்கிடுஞ் செங்கை வெள்வளை கலிப்பநகை
நிலவு விரி பவளம் வெளிற
நீலக் கருங்குவளை செங்குவளை பூப்பவறல்
நெறி குழற் கற்றை சரியத்

திரைபொங்கு தண்ணந் துறைக்குடைந் தாடுவ
செழுந்த ரங்கக் கங்கை நுண்
சிறு திவலை யாப்பொங்கு மானந்த மாக்கடல்
திளைத் தாடுகின்ற தேய்ப்பக்

கரை பொங்குறிதி மரைக் கையாற் றடம்பணைக்
கழனியிற் கன்னியர் முலைக்
களபக் குழம்பைக் கரைத்து விட்டள்ளற்
கருஞ் சேறு செஞ் சேறாய்

விரை பொங்கிடத்துங்க வேகவதி பொங்குபுது
வெள்ள நீராடியருளே
விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்த
கொடி வெள்ள நீராடியருளே!

– குமரகுருபரர்

# ஸ்ரீ மங்களாம்பிகை!

## பல்லவி

ஈச்வரி ஜகதம்பாநின் இணையடிதுணையென நம்பினேன்
எப்படியோ உனதருளென் கற்பகமே தாயே (ஈச்வரி)

## அனுபல்லவி

வாசவன் போற்றுங் குடந்தை நகர்
வாழும் மனோன் மணியான
தேசமார்கும் பேசரிடம் வாழ்
செல்விஜய மங்கள நாயகி (ஈச்வரி)

## சரணம்

1. உன் சந்நிதிகண் டாலவர்க்கு
ஒரு சஞ்சல முண்டோ
உலகினில் கஞ்சன் பணியும்
செஞ்சரணியே மஞ்சு பாஷிணி
தஞ்ச மென்றடுத்த பேரை
அஞ்சலென் றாதரித்துக் காக்கும்
ரஞ்சித நவரஸ புஞ்சமே
வஞ்சியர் மோகிநி அஞ்சுகமே (ஈச்வரி)

2. உன்தனை நான் அனுதினமு மென்
சிந்தையில் நினைந்து நினைந்து
வந்தனை புரிந்தும் இன்னமும்
இந்தத் தாமதம் ஏனம்மா
கொந்தலர் குழலியே நினைத்தவர்
அந்தரச் சமயங் கடைக்கண்பார்
மந்தரநிகர் முலை யாளே நி
ரந்தரமுல கெங்கும் நிறைந்திடும் (ஈச்வரி)

# அஷ்ட லக்ஷ்மி ஸ்தோத்திரம்!

## ஆதிலக்ஷ்மி

ஸுமநஸ வந்தித ஸுந்தரி மாதவி
சந்த்ர ஸஹோதரி ஹேமமயே
முநிகண மண்டித மோக்ஷபிரதாயினி
மஞ்ஜுள பாஷிணி வேதநுதே
பங்கஜ வாஸிநி தேவஸு பூஜித
ஸத்குண வர்ஷிணி சாந்தியுதே
ஜயஜய ஹே மதுஸூதல காமினி
ஆதிலக்ஷ்மீ ஸதா பாலயமாம்.

## தான்யலக்ஷ்மி

அயிகலி கல்மஷ நாசிநி காமிநி
வைதிக ரூபிணி வேதமயே
க்ஷீரச முத்பவ மங்கள ரூபிணி
மந்த்ர நிவாஸிநி மந்த்ரநுதே
மங்கள தாயிநி அம்புஜ வாஸிநி
தேவ கணாச்ரித பாதயுதே
ஜயஜய ஹே மதுஸூதநி காமிநி
தான்யலஷ்மி ஸதா பாலயமாம்.

## தைர்யலக்ஷ்மி

ஜயவர வர்ணி நீவைஷ்ணவி பார்கவி
மந்த்ர ஸ்வரூபிணி மந்த்ரமயே
ஸுரகண பூஜித சீக்ர பலப்ரத
ஜ்ஞான விகாஸிநி சாஸ்த்ரநுதே
பவபய ஹாரிணி பாபவிமேசநி
சாது ஜநாச்ரித பாதயுதே
ஜயஜய ஹே மதுஸூதந காமிநி
தைர்யலக்ஷ்மீ ஸதா பாலயமாம்.

## கெஜலக்ஷ்மி

ஜயஜய துர்கதி நாசினி காமிநி
ஸ்ர்வபல ப்ரத சாஸ்த்ரமயே
ரதகஜ துரகபதாதி ஸமாருத
பரிஜன மண்டித லோகநுதே
ஹரிஹர ப்ரும்மஸு பூஜித ஸேவித
தாப நிவாரணி பாதயுதே
ஜயஜய ஹேமது ஸுதெந காமிநி
கெஜலக்ஷ்மி ரூபேண பாலயமாம்

## ஸந்தானலக்ஷ்மி

அயிகக வாஹிநி மோஹிநி சகரிணி
ராக விவர்த்திநி ஜ்ஞானமயே
குணகண வாரிநி லோக ஹிதைஷிணி
ஸ்வரஸப்த பூஷித கானதுதே
ஸகலு ஸுராஸுர தேவ முநீச்வர
மாநவ வந்திக பாதயுதே
ஜயஜய ஹேமது ஸுதந காமிநி
ஸந்தான லக்ஷ்மீது பாலயமாம்.

## விஜயலக்ஷ்மி

ஜய கமலாஸநி ஸத்கதி தாயிநி
ஜ்ஞான விகாஷிநி கானமயே
அனுதின மார்ச்சித குங்கும தூஸரே
பூஷீத வாஸித வாத்யனுதே
கனகதாரா ஸ்துதி வைபவ வந்தித
சங்கர தேசிய மான்ய பதே
ஜயஜய ஹேமது ஸுதந காமிநி
விஜயலக்ஷ்மி ஸதா பாலயமாம்

## வித்யாலக்ஷ்மி

ப்ரணத ஸுரேச்வரி பாரதி பார்க்கவி
சோக விநாசநி ரத்னமயே
மணிமய பூஷித கர்ணவிபூஷண
சாந்தி ஸமாவ்ருத ஹாஸ்யமுகே
நவநிதி தாயிநி கலிமல ஹாரிணி
காமித பலப்ரத ஹஸ்தயுதே
ஜயஜய ஹேமது ஸுதன காமிநி
வித்யா லக்ஷ்மி ஸதா பாலயமாம்.

## தனலக்ஷ்மி

திமிதிமி திந்திமி திந்திமி திந்திமி
துந்துபி நாதஸு பூர்ணமயே
குமகும குங்கும குங்கும குங்கும
சங்க திநாத ஸுவாத்யநுதே
வேத புராணே திஹாஸ ஸுபூஜித
வைதிக மார்க ப்ரதர்சயுதே
ஜயஜய ஹேமது ஸுதந காமிநி
தனலக்ஷ்மி ரூபேண பாலயமாம்.



# ஜனனி ஜனனி!

ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ ...
ஜெகத் தாரணி நீ பரிபூரணி நீ
ஜனனி ஜனனி ஜெகம் நீ அகம் நீ
ஜனனி ஜனனி ஜனனி ஜனனி

ஒரு மான் மழுவும் சிறு பூந்திரையும்
சடைவார் குழலும் விடை வாகனமும்

கொண்ட நாயகனின் குளிர் தேகத்திலே
நின்ற நாயகியே இட பாகத்திலே

ஜெகன் மோகினி நீ சிம்மவாகினி நீ
ஜனனி ஜனனி ஜெகம் நீ அகம் நீ
ஜெகத் தாரணி நீ பரிபூரணி நீ

சதுர் வேதங்களும் பஞ்சபூதங்களும்
சன் மார்க்கங்களும் சப்த தீர்த்தங்களும்

அஷ்ட யோகங்களும் நவ யாகங்களும்
தொழும் பூங்கழலே மலை மாமகளே

அலை மாமகள் நீ கலை மாமகள் நீ
ஜனனி ஜனனி ஜெகம் நீ அகம் நீ
ஜெகத் தாரணி நீ பரி பூரணி நீ

ஸ்வர்ண ரேகையுடன் சுயமாகி வந்த
லிங்க ரூபிணியே மூகாம்பிகையே
லிங்க ரூபிணியே மூகாம்பிகையே

பல தோத்திரங்கள் தர்ம சாஸ்திரங்கள்
பணிந்தேத்துவதும் மணி நேத்திரங்கள்
சக்தி பீடமும் நீ ...
சக்தி பீடமும் நீ சர்வ மோட்சமும் நீ (ஜனனி)

# கற்பக வல்லி !

## பல்லவி

கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வா யம்மா (கற்பக)

## அனுபல்லவி

பற்பலரும் போற்றும் பதி மயிலாபுரியில்
சிற்பம் நிறைந்த உயர் சிங்கார கோயில் கொண்ட (கற்பக)

## சரணம்

நீ இந்த வேளைதன்னில் சேயன் எனை மறந்தால்
நானிந்த நானிலத்தில் நாடுதல் யாரிடமோ?
ஏனிந்த மௌன மம்மா ஏழை எனக்கருள
ஆனந்த பைரவியே ஆதரித்தாளு மம்மா (கற்பக)

எல்லோருக்கும் இன்பங்கள் எழிலாய் இரங்கி என்றும்
நல்லாசி வைத்திடும் நாயகியே நித்ய
கல்யாணியே கபாலி காதல் புரியும் அந்த
உல்லாசியே உமாஉனை நம்பினே னம்மா (கற்பக)

நாகேச்வரி நீயே நம்பிடும் எனைக் காப்பாய்
வாகீச்வரி மாயே வாராயிது தருணம்
பாகேஶ்ரீ தாயே பார்வதியே - இந்த
லோகேச்வரிநீயே உலகினில் துணையம்மா (கற்பக)

அஞ்சன மையிடும் அம்பிகை எம்பிரான்
கொஞ்சிக் குலாவிடும் வஞ்சியே உன்னிடம்
தஞ்சம் என அடைந்தேன் தாயே உன் சேய் நான்
ரஞ்ஜனியே ரக்ஷிப்பாய் கெஞ்சுகின்றேன் அம்மா (கற்பக)

# சக்தி !

துன்பம் இலாத நிலையே சக்தி
    தூக்கம் இலாக்கண் விழிப்பே சக்தி
அன்பு கனிந்த கனிவே சக்தி,
    ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி;
இன்பம் முதிர்ந்த முதிர்வே சக்தி,
    எண்ணத் திருக்கும் எரியே சக்தி;
முன்பு நிற்கின்ற தொழிலே சக்தி
    முத்தி நிலையின் முடிவே சக்தி!

சோம்பர் கெடுக்கும் துணிவே சக்தி
    சொல்லில் விளங்கும் சுடரே சக்தி;
தீம்பழம் தன்னில் சுவையே சக்தி
    தெய்வத்தை எண்ணும் நினைவே சக்தி;
பாம்பை அடிக்கும் படையே சக்தி
    பாட்டினில் வந்த களியே சக்தி;
சாம்பரைப் பூசி மலைமிசை வாழும்
    சங்கரன் அன்புத் தழலே சக்தி!

வாழ்வு பெருக்கும் மதியே சக்தி
    மாநிலம் காக்கும் வலியே சக்தி;
தாழ்வு தடுக்கும் சதிரே சக்தி,
    சஞ்சலம் நீக்கும் தவமே சக்தி.
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி
    விண்ணை அளக்கும் விரிவே சக்தி
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
    உள்ளத்து ஒளிரும் விளக்கே சக்தி!

# ஹே ஆனந்தமயி !

ஹே ஆனந்தமயி நீ என்னை நிரானந்தனாக்கிடாதே
தாயே நின் தாளினையே பணிவதன்றி வேறறியேன்
வா எந்தன் உளந்தனிலே வந்தமர்ந்து அருள்புரிவாய்

காலன் கை பாசமெனைக் கணமேனும் அணுகாமல்
சூலத்தால் காத்திடுவாய் துயர் தீர்ப்பாய் என் தாயே

சம்சாரப் பெருங்கடலில் சந்ததமும் ஆழ்கின்றேன்
உய்ந்திடலாம் என எண்ணி உன் நாமம் நான் புகன்றேன்

தாயே நானென் செய்வேன் இப்போதும் தவிக்கின்றேன்
சேய் என்னைக் கைவிடுதல் தாய் உனக்கு அழகாமோ

நித்தம் நின் திருநாமம் நான் புகன்ற போதினிலும்
பக்தனை நீ கைவிட்டாய் பவக்கடலில் ஆழ்ந்தொழிந்தேன்

நான் சொல்வேன் உனக்கொன்று நன்றாகக் கேட்டிடுவாய்
நானிறந்தால் உன் நாமம் புவிதனிலே யார் சொல்வார்

# ஆதி பராசக்தி !

ஜகஜ்ஜனனி ஜகன் மாதா ஆதிபராசக்தி பாலயமாம்
திருமயிலை கற்பகாம்பா ஆதிபராசக்தி பாலயமாம்
திருவேற்காட்டில் கருமாரி ஆதிபாரசக்தி பாலயமாம்
திருக்கடவூர் அபிராமி ஆதிபராசக்தி பாலயமாம்
தென்மதுரை மீனாட்சி ஆதிபராசக்தி பாலயமாம்
திருக்காஞ்சி காமாட்சி ஆதிபராசக்தி பாலயமாம்
திருக்காசி விசாலாட்சி ஆதிபராசக்தி பாலயமாம்
திரு நெல்லை காந்திமதி ஆதிபராசக்தி பாலயமாம்
ஜெயராம்பாடி சாரதாம்பா ஆதிபராசக்தி பாலயமாம்

# மங்களம்!

சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரி மனோஹராய சாஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம் தத்தாத்ரேய மங்களம்
கஜானனாய மங்களம் ஷ்டாணனாய மங்களம்
ரகுவராய மங்களம் வேணுக்ருஷ்ண மங்களம்
சீதாராம மங்களம் ராதாக்ருஷ்ண மங்களம்
அன்னை அன்னை அன்னை அன்னை அன்பினுக்கும் மங்களம்

ஆதி சக்தி அம்பிகைக்கு அனந்த கோடி மங்களம்
என்னுள்ளே விளங்கும் எங்கள் ஈஸ்வரிக்கு மங்களம்
இச்சையாவும் முற்றுவிக்கும் சித்சிவைக்கு மங்களம்
நாமகீர்த்தனம் பரந்துநானிலம் செழிக்கவும்
வேறிடாத இன்பம் பொங்கி வீடெலாம் விளங்கவும்
ஞான தீபமேற்றி என்றும் நாமகீதம் பாடுவோம்
தர்ம சக்தி வாழ்க வென்று சந்ததம் கொண்டாடுவோம்!



# மருத்துவம்

# சிறுநீரகக் கற்கள்

சிறுநீரகக்கல் என்பது சிறிய படிகங்களை கொண்ட ஒரு திடப்பொருள் ஆகும். சிறுநீரகத்திலோ அல்லது சிறுநீரகக்குழாயிலோ ஒரே நேரத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கற்கள் இருக்கும்.

**காரணங்கள்**

சில பொருட்களினால் சிறுநீர் அடர்கரைசலாகும் போது சிறுநீரகக் கற்கள் தோன்றலாம். சிறுநீரில் காணப்படும் இந்த பொருட்கள் சிறிய படிகங்களை உண்டாக்கி, அவை கற்களாக மாறலாம். சிறுநீர் கற்கள் உண்டாகி சிறுநீரகக் குழாய் வழியாக கீழே இறங்கும் வரை எந்த அறிகுறியையும் ஏற்படுத்தாது. சிறுநீரகக் கற்கள் சிறுநீர் குழாய் வழியாக கீழ்நோக்கி நகரும்போது வலியினை ஏற்படுத்தும். இவ்வலியானது, அடிக்கடி பின்புற விலாவின் இரண்டு பக்கங்களிலும் ஆரம்பித்து கீழ்நோக்கி நகரும்.

**கற்களின் வகைகளாவன**

கல்சியம் கற்கள் அதிகமாக ஏற்படக்கூடியவை, அவை இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாக ஆண்களுக்கு ஏற்படும். சாதாரணமாக 20 வயது முதல் 30 வயதுடையவர்களுக்கு ஏற்படும். திரும்பத் திரும்பத் ஏற்படும் தன்மையுடையது. கல்சியம் பிற பொருட்களான ஆக்ஸலேட் (மிக அதிகளவிளான பொருள்), பாஸ்பேட் அல்லது கார்போனேட் போன்றவையுடன் சேர்ந்து கற்களை உண்டாக்கும்.

யூரிக் அமில கற்கள் - இவைகளும் அதிக அளவில் ஆண்களுக்கு ஏற்படும்.

ஸ்ட்ருவைட் கற்கள்- (மெக்னீஸியம் அமோனியம்/ பாஸ்பேட் படிகங்களால் ஏற்படும் கல்) என்பது முக்கியமாக பெண்களில் சிறுநீர் குழாய் சம்பந்தமான தொற்று நோய் கண்டதினால் ஏற்படக்கூடியவை. அவை மிகப்பெரியதாக வளரக் கூடியவை. மேலும் சிறுநீரகங்கள், சிறுநீர்குழாய் அல்லது சிறுநீர் பையில் அடைப்பை ஏற்படுத்தக் கூடியவை.

**அறிகுறிகள்**

பின்பக்க விலாவில் வலி அல்லது முதுகுவலி, ஒரு பக்கம் அல்லது இரண்டு பக்கத்திலும் அதிகரிக்கும் வலி

குமட்டல், வாந்தி
அடிக்கடி சிறுநீர் கழித்தல்
சிறுநீர் அளவு அதிகரித்தல்
சிறுநீரில் இரத்தம் காணப்படுதல்

அடிவயிற்றில் வலி
வலியோடு கூடிய சிறுநீர் கழித்தல்
இரவு நேரத்தில் அதிக அளவு சிறுநீர் கழித்தல்
ஆணின் முதன்மை இனப்பெருக்க உறுப்பில் (டெஸ்டிகல்) வலி
சிறுநீரின் நிறம் இயற்க்கைக்கு மாறாக காணப்படுதல்

### எப்பொழுது மருத்துவ நிபுணரை அணுகலாம்?

சிறுநீர்கற்கள் இருப்பதற்கான அறிகுறிகளோ, சிறுநீரக கற்கள் திரும்பத் திரும்ப ஏற்படுவதற்கான அறிகுறிகளோ, சிறுநீர் கழிப்பது வலியுடன் கூடியதாக இருந்தாலோ, அனுதினம் வெளியேற்றப்பட்ட சிறுநீரின் அளவு குறைந்தாலோ, அல்லது பிற புதிய அறிகுறிகள் தோன்றினாலோ மருத்துவரை அணுகலாம்.

### தடுப்பு முறைகள்

சிறுநீரக கற்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் இருப்பின், அதிக அளவு தண்ணீர் உட்கொள்ளுதல் அவசியம். பொதுவாக ஒரு நாளைக்கு 6 முதல் 8 டம்ளர் தண்ணீர் குடிக்கச் செய்ய வேண்டும். சிறுநீரக கற்களின் தன்மையை பொருத்து மருத்துவரின் ஆலோசனையின் படி, மருந்தோ அல்லது பிற முறைகளையோ கையாண்டு, கற்கள் திரும்பத் திரும்ப ஏற்படுவதை தடுக்கலாம்.

### நீடித்த நாட்பட்ட சிறுநீரகக் கோளாறு / செயலிழப்பு

நாட்பட்ட சிறுநீரகம் செயலிழப்பு அல்லது கோளாறு என்பது சிறுநீரகமானது உடலின் கழிவு பொருட்களை வெளியேற்றும் தன்மை, அடர் கரைசலான சிறுநீரினை வெளியேற்றும் தன்மை மற்றும் உடலில் உள்ள தனிமப்பொருட்கள் சிறுநீரில் வெளியேறாமல் தடுத்து பாதுகாக்கும் தன்மை போன்றவற்றை படிப்படியாக இழந்து, செயல் அற்ற தன்மை அதிகரிப்பதாகும்.

### காரணங்கள்

சிறுநீரகங்களை பாதிக்கும் நோய்கள்
வருடக்கணக்கில் சிறுநீரகங்களின் உள்ளமைப்புக் கூறுகள் சேதமடைதல்
சர்க்கரை நோய் மற்றும் உயர் இரத்த அழுத்தம்

நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பினால் உடலில் திரவம் மற்றும் தேவையற்ற வீணான பொருட்கள் சேர்ந்து, இவை இரத்தத்திலும் அளவில் அதிகரிப்பதினால் அசோடிமியா மற்றும் யூரிமியா ஏற்படுகிறது. அசோடிமியா என்பது எந்த அறிகுறியும் இன்றி இரத்தத்தில் யூரியா போன்ற நைட்ரஜன் பொருட்கள் அதிகரிப்பதாகும். யூரிமியா என்பது சிறுநீரகங்கள் செயல் இழப்பதினால் ஏற்படக்கூடிய ஆரோக்கிய குறைவு ஆகும்.

**அறிகுறிகள்**

ஆரம்ப நிலையில் ஏற்படும் அறிகுறிகளாவன

உடல் எடை இழப்பு

வாந்தி

பொதுவான உடல்நலக் குறைவு

சோர்வு

தலைவலி

அடிக்கடி ஏற்படும் விக்கல்

உடல் முழுக்க ஏற்படும் அறிப்பு (ப்ஷரூரைட்டிஸ்)

**பின் நிலைகளில் ஏற்படும் அறிகுறிகளாவன**

வெளியேற்றப்படும் சிறுநீரின் அளவு கூடுவது அல்லது குறைவது

இரவு நேரத்தில் சிறுநீர் கழிப்பது

சுலபமாக காயம் ஏற்படுதல் அல்லது இரத்தம் வடிதல்

வாந்தியில் அல்லது மலத்தில் இரத்தம் காணப்படுதல்

மந்தமான தூங்கி விழுகிற நிலமை, சுறுசுறுப்பின்மை, குழப்பம், சித்தபிரமை, நினைவற்ற நிலை

தசை துடிப்பு அல்லது தசை இழுப்பு

தோலில் வெள்ளைநிற படிகங்கள்

கைகள் பாதங்கள் மற்றும் பிற பகுதிகளில் உணர்வு திறன் குறைதல்

**நோயுடன் தொடர்புடைய மற்ற கூடுதல் அறிகுறிகளாவன**

அதிக அளவில் இரவு நேரங்களில் சிறுநீர் கழித்தல்

அதிக தாகம் ஏற்படுதல்

தோல் நிறம் வெளிர்ந்து காணப்படுதல்

நகங்கள் ஒழுங்கின்றி காணப்படுதல்

சுவாசம் நாற்றம் எடுத்தல்

உயர் இரத்த அழுத்தம்

பசியின்மை

**எப்பொழுது மருத்துவ நிபுணரை அணுகுவது?**

தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு மேல் குமட்டல் அல்லது வாந்தி இருப்பின் மருத்துவரை அணுகலாம். அன்றாடம் வெளியேற்றப்படும் சிறுநீரின் அளவு குறைந்தாலோ அல்லது நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பிற்கான அறிகுறிகள் தோன்றினாலோ மருத்துவரை அணுகலாம்.

**தடுப்புமுறை**

சர்க்கரை வியாதி உள்ளவர்கள் இரத்தத்திலுள்ள சர்க்கரை அளவினை மற்றும் இரத்த அழுத்தத்தினை கட்டுப்படுத்துவதன் மூலமும் புகை பிடிக்கும் வழக்கத்திலிருந்து விலகியிருப்பதன் மூலமும் நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பு ஏற்படுவதினை தடுக்கலாம்.

# சிறுநீரக செயலிழப்பு

**சிறுநீரக செயலிழப்பு என்றால் என்ன?**

kidney இடுப்புப் பாகத்தின் கீழ்ப்பகுதியில் இரண்டு சிறுநீரகங்கள் (Kidney / ies) அமைந்துள்ளன. இவற்றின் பிரதான தொழில் சிறுநீரை உற்பத்தி செய்தல். சரீரத்திலிருந்து அகற்றப்பட வேண்டிய நீர், கழிவுப்பொருட்கள் ஆகியன சிறுநீரில் அடங்கியுள்ளன. கழிவப்பொருட்களை அகற்றுவதுடன் இரத்த அமுக்கம், உப்பு அமிலம், ஈமோகுளோபின் ஆகியவற்றை கட்டுப்படுத்துகின்றன. இரண்டு சிறுநீரகங்களும் தாக்கப்பட்டு 60-70% வரை சிறுநீரகம் வேலை செய்யாது இருந்தால் மட்டுமே ஒரு நோயாளிக்கு சிறுநீரகச் செயலிழப்பு உண்டு என்று நாம் சொல்லுவோம். 90% க்கு மேல் அவை வேலை செய்யாவிடின் அந்த நோயாளிக்குக் கடுமையான சிறுநீரகச் செயலிழப்பு என்று சொல்லுவோம்.

**சிறுநீரகச் செயலிழப்பின் வகைகள் எவை?**
**விசேஷமானவை இரண்டு வகை.**

**சடுதியான சிறுநீரகச் செயலிழப்பு** – இது குறுகிய காலத்தில் விருத்தி அடையும்: பொதுவாக தொழிற்பாடு திரும்பவும் வரக்கூடியது. (உம்: பாம்புக்கடியைத் தொடர்ந்து)

நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பு – இது பல மாதங்கள், வருடங்களாக விருத்தியடையும். ஆனால் தொழிற்பாடு திரும்பி வராது. (உம்: திரும்பத் திரும்ப சிறுநீரக அழற்ச்சி தோன்றுவது.) மேலே கூறப்பட்ட இரண்டு வகைகளை விட, கலப்பான வேறு வகைகளும் உண்டு.

**சிறுநீரகச் செயலிழப்பு யாருக்கு வரக்கூடும்?**

சிறுபராயம் முதல் முதிர் வயது வரை எவருக்கும் வரக்கூடும். இது ஆண், பெண் இருசாராருக்கும் வரும். ஆனால் முன்பு அடிக்கடி, சிறுநீரக நோய்கள் வந்தவர்களுக்கு வர அதிக வாய்ப்புண்டு.

**சிறுநீரக செயலிழப்புக்குக் காரணம் என்ன?**

kidney possition பிள்ளைகளிலும் பெரியவர்களிலும் இந்தக் காரணம் வேறுபடுகிறது. வளர்ந்தவர்களில், சடுதியான சிறுநீரக செயலிழப்புக்குக் காரணமாய் இருப்பவை பாம்புக்கடி, சிறுநீரக அழற்ச்சி, நஞ்சு, போதைப்பொருள், பாரிய சத்திரசிகிச்சை, கடுமையான தொற்று நோய்கள் என்பன. வளர்ந்தோரில் காணப்படும் நாட்பட்ட சிறுநீரச் செயலிழப்புக்கு பொதுவான காரணம், நீண்ட கால சிறுநீரக அழற்ச்சி, இரத்த அமுக்கம், புறொஸ்ரேற் நோய், சிறுநீரக்தில் உண்டாகும் கல்லு என்பனவும் பொலிசிஸ்ரிக் (Polycystic) சிறுநீரக நோயும் ஆகும். சிறுநீரகத் தொற்றுக்கள், சில வேளைகளில் தாமாகவே சிறுநீரகச் செயலிழப்பை உண்டாக்குகின்றன. எப்படியாயினும் சிறுநீரகச் செயலிழப்பு உள்ளவர்களில் சிறுநீரகத் தொற்று, சிறுநீரகத் தொழிற்பாட்டை மிக மோசமாக்கி விடும்.

பிள்ளைகளிலே சிறுநீரகத் தொற்று, சிறுநீரக அழற்சி என்பன அதிகமாகக் காணப்படினும் அவர்களுக்கு சிறுநீரகச் செயலிழப்பு வருவது மிகவும் அரிது. அநேகருக்கு நாட்பட்ட சிறுநீரக செயலிழப்புக்குக் காரணம் கண்டுகொள்வது மிகவும் கடினம்.

**சிறுநீரக செயல் இழப்பிற்கான இதர காரணங்கள் :**

அதிகமான ரத்த இழப்பு.

வாந்தி -பேதி போன்றவற்றினால் உடலில் அதிகமான நீர் இழப்பு.

தேவையான தண்ணீர் குடிக்காதது.

மருந்துகள் சாப்பிடுவதன் மூலம் உடலிலிருந்து தண்ணீர் அதிக அளவில் வெளியாவது.

சிறுநீரகங்களுக்குத் தேவையான ரத்த சப்ளை, சரிவர கிடைக்காமல் போவது.

சிறுநீர்க்குழாய் (ureter), சிறுநீர்ப்பை ஆகியவைகளில் ஏற்படும் அடைப்பு.

வயிற்றில் உண்டாகும் கட்டி,

சிறுநீரகத்தையும் யூரிடரையும் (ureter) அமுக்குவதால் ஏற்படும் அடைப்பு ஆகிய காரணங்களினால் சிறுநீரகம் `செயல் இழக்க' ஆரம்பித்துவிடுகிறது. ஒரு மடக்கு தண்ணீர் கூட குடிக்காமல், அதிக நாட்கள் படுக்கையில் இருப்பவர்களுக்கு, சிறுநீரகம், செயல் இழந்து போகும். அதனால்தான், அதிக நாட்கள் உண்ணாவிரதம் இருப்பவர்களுக்கு, முதலில் கிட்னி ஒழுங்காக வேலை செய்கிறதா, இல்லையா என்று சோதனை செய்து பார்ப்பார்கள்.

பசி, பட்டினியுடன் கிடந்தும், கிட்னி இன்னும் கெட்டுப் போகவில்லை என்றால், உண்ணாவிரதத்தை இன்னும் கொஞ்ச நாட்களுக்கு நீட்டிக்கலாம். கிட்னி சரியாக வேலை பார்க்கவில்லை என்று தெரிந்தால், உடனே உண்ணாவிரதத்தை முடித்து விடுவது தான் உடலுக்கு நல்லது.

பயங்கர விபத்தினால் உடல் பாகங்கள் நசுங்கி, சிதைந்து போகுதல் மற்றும் அதிகமான தீக்காயம் ஏற்படுதல் முதலிய சமயங்களில் உடல் தசைகள் அதிகமாக பாதிக்கப்பட்டு, தசைநார்கள் கூழாகி, சிறுநீரகங்களிலுள்ள பில்டர்களை அடைத்து விடுவதால், சிறுநீரகங்கள் செயல் இழந்து விடுவதும் உண்டு.

இதேமாதிரி, சில நேரங்களில், சிறுநீரகக் கற்களால் கூட பாதை அடைபட்டுக் கொண்டு, கிட்னி பெயிலியர் – kidney failure ஏற்படுவதுண்டு. ஆனால் எந்தப் பக்கம் கற்கள் இருக்கிறதோ, அந்தப் பக்கம் உள்ள சிறுநீரகம் மட்டும் தான் பாதிப்படையும். மற்றொரு பக்கத்தில் இருக்கும் சிறுநீரகத்தில் எந்தவித பாதிப்பும் ஏற்படாது. ஒரே ஒரு சிறுநீரகம் உள்ளவர்களுக்கு, இந்த சிறுநீரகக்கற்கள் அடைத்தால், ஆபத்து தான்.

கட்டுப்பாட்டில் இல்லாத சர்க்கரை நோய், கட்டுப்பாட்டில் இல்லாத ரத்த அழுத்தம் இவைகளும் 'ஹகிட்னி பெயிலியர்' ஏற்பட காரணங்களாகும். சிறுநீரகம் சரியாக

வேலை செய்யாவிட்டால், ஒரு நாள் கூட, நம்மால் ஆரோக்கியமாக இருக்க முடியாது. உடலில், சொல்ல முடியாத, எதிர்பார்க்காத தொந்தரவுகளெல்லாம் வர ஆரம்பித்து விடும்.

சிறுநீரக பாதிப்பை, மருந்து, மாத்திரைகளால் சரிபண்ண முடியவில்லையென்றால், உடலிலிருந்து வெளியே போகவேண்டிய கழிவுப்பொருட்கள், உடலிலுள்ள ரத்தத்தில் சேர ஆரம்பித்துவிடும். இந்தக் கழிவுப் பொருட்களை எப்படி வெளியே அனுப்புவது? இந்தக் கழிவுப் பொருட்கள் கலந்த ரத்தத்தை எப்படி சுத்தம் பண்ணுவது? இதற்கான அடுத்த நடவடிக்கை தான் 'ஹடயலிசிஸ்' என்பதாகும்.

ரத்தத்திலுள்ள கழிவுப்பொருட்களையும், விஷப்பொருட்களையும் வெளியே அனுப்பும் வேலையை, சிறுநீரகத்திற்குப் பதிலாக செய்யும் வேலையை ஹடயலிசிஸ் '(dialysis)' என்றும், இந்த வேலையை செய்யும் கருவியை 'ஹடயலைஸர்' என்றும் கூறுவதுண்டு. `செயற்கை சிறுநீரகம்` என்று சொல்லக்கூடிய 1 அடி நீளமுள்ள ஒரு கருவியும், 5 அடி உயரமுள்ள இன்னொரு கருவியும் சேர்ந்துதான், ரத்தத்தை சுத்தம் செய்யும் வேலையைப் பார்க்கின்றன.

kidney dialysis machine இந்தக் கருவிகளின் விலை சுமார் 5 லட்சத்திலிருந்து சுமார் 12 லட்சம் வரை இருக்கிறது. சிறுநீரகம் இயற்கையாக செய்யும் வேலையை, இந்தக் கருவி செய்து கொடுக்கும். ஆனால் ,ஒரிஜினல் சிறுநீரகம் மாதிரி, எல்லா வேலையையும் செய்யுமா? என்று நீங்கள் கேட்கலாம், ஒரிஜினல் சிறுநீரகம் மாதிரி வராது. அமெரிக்காவில் சுமார் மூன்று லட்சத்துக்கும் அதிகமானோர், செயற்கை சிறுநீரகத்தை நம்பியே வாழ்கிறார்கள். `வில்லம்கால்ப்` என்கிற டச்சு நாட்டு டாக்டர், 1943-ம் ஆண்டில், தன் கையில் கிடைத்த கருவிகளைக் கொண்டு, முதன் முதலாக ஒரு ஹடயலைஸர்' மெஷினை உருவாக்கினார். இந்த மெஷினை உபயோகித்து, கிட்னி பெயிலியர் ஆன, பதினாறு நோயாளிகளுக்கு ஹடயலிஸிஸ்' சிகிச்சை செய்து பார்த்தார். ஆனால், அது வெற்றியைத் தரவில்லை.

1945-ம் ஆண்டில்தான் முதன் முதலாக, சுயநினைவு இல்லாமல் இருந்த ஒரு 67 வயது பெண்ணுக்கு, 11 மணி நேரம் `ஹீமோ டயலிசிஸ்` சிகிச்சை செய்து, பிழைக்க வைத்து, அதற்கப்புறம் அந்தப் பெண்மணி சுமார் 7 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார். முதன் முதலாக ஹடயலிசிஸ்' சிகிச்சை மூலம், குணமடைந்து உயிர் வாழ்ந்த பெண்மணி இவர்தான்.

**சிறுநீரகச் செயலிழப்பை எப்படி அடையாளம் காண்பது :**

சிறுநீரக செயலிழப்பின் ஆரம்பத்திலே நோயாளியிடத்தில் குறிப்பாகக் கொள்ளக்கூடிய எதுவித அறிகுறிகளும் இராது. சிறுநீரகச் செயலிழப்பு உண்டு என்ற சந்தேகத்தின் பேரில் இரத்தம் சிறுநீர் ஆகியவற்றை பரிசோதித்தே திட்டமாக அறியமுடியும். சிறுநீரகச் செயலிழப்பில் பின்வரும் அறிகுறிகள் காணப்படும்.

கடுமையான பசியின்மை, பிரட்டு, சத்தி, விக்கல், வாந்தி.
மூச்சு விடுவதில் கஸ்டம்
முகம் கால், வயிற்றுப் பகுதியில் வீக்கம்.
சிறுநீர் குறைவாகக் கழித்தல், (சடுதியான சிறுநீரகச் செயலுழப்பு) அல்லது கூடுதலான சிறுநீர் கழித்தல் (நாள் கடந்த சிறுநீரக செயலிழப்பில்)
இரத்தச் சோகை (Anaemia) (நாட்பட்ட சிறுநீரகச் செயலிழப்பு)

**சிறுநீரக செயலிழப்பபை எப்படி உறுதிப்படுத்துவது?**

யூரியா (Blood urea) சீரம் கிறியற்றினின் (Serum creatinine) என்பவற்றைப் பரிசோதித்து சிறுநீரக செயலிழப்பை உறுதிப்படுத்தலாம். சிறுநீரகச் செயலிழப்பில் யூரியாவும், சீரம் கிறியற்றினினும் கூடுகின்றன. 24 மணித்தியாலங்களுக்கும் கூடுதலாக சிறுநீரைச் சேர்த்து அதிலே கிறியற்றினின் கிளியறன்ஸ் (Creatinine clearance) பரிசோதனையை நடத்தினால், அது சிறுநீரகச் செயலிழப்பு என்பதை வைத்தியர் திட்டவட்டமாக அறிந்து கொள்ள உதவும். சிறுநீரகச் செயலிழப்பின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக இப்பரிசோதனை அடிக்கடி செய்யப்படுகிறது. சிறுநீரகச் செயலிழப்பிற்குக் காரணமாக இருப்பது என்ன என்பதை அறிந்து கொள்ள , அல்றா சவுண்ட் ஸ்கான் (Ultra sound scan) னும் வைத்தியருக்கு உதவுகின்றன.

**சிறுநீரகச் செயலிழப்புக்கு செய்யக்கூடிய பராமரிப்பு முறைகள் எவை?**

உணவு தரப்படுத்தல்./ மாற்றல்.
மருந்துச் சிகிச்சை (Druy therapy)
டயலைசிஸ் (dialysis)
சிறுநீரக !மாற்றுச் சிகிச்சை.

உணவு மாற்றம் – உணவிலே புரதச்சத்து, பொட்டாசியம், உப்பு நீர் என்பனவற்றைக் கட்டுப்படுத்துவது சாதாரண வழக்கம். புரதச்சத்து அடங்கியுள்ள இறைச்சி, முட்டை, மீன் ஆகியவற்றை நாள் வீதம் ஒரு அளவிற்குக் குறைக்க வேண்டும். இளநீர் பழவகைகள், பொரித்த உருழைக்கிழங்கு, ஆகியவற்றில் பொட்டாசியம், இருப்பதால் இவை தவிர்க்கப்பட வேண்டும். கூடுதலான இரத்த அமுக்கம், உடல் வீக்கம், மூச்சு விடக் கஸ்டம் இவை இருந்தால் உப்பு குறைக்கப்பட வேண்டும். பாவிக்க கூடிய தண்ணீரின் அளவை உமது வைத்தியரே தீர்மானிக்க வேண்டும்.

மருந்துச் சிகிச்சை (Drug therapy) – நோயாளியின் சிறுநீர் செயலிழப்பு நிலையைப் பொறுத்து பல வித மருந்துகள் தேவைப்படும்... உடலின் வீக்கத்தைக்குறைக்க–டையூறற்றிக்ஸ் (Diuretics) (உம்வ்றுஸெமைட் (frusemide) இரத்த அமுக்கத்தைக் குறைக்க – அன்றிஹைஹபரென்சிவ்ஸ் (Antihypertensives) (உம்: மீதைல டோபா methyilopa) வாந்தி சத்தியைக்

குறைக்க—அன்ரிஎமெற்றிக்ஸ் (Antiemetics) உ-ம் மெற்றோகுளோபிறமைட் (Metoclopramide) இரத்தக் குறைவுக்கு —இரத்தம் ஏற்றல், எரித்திரோபொயிற்றின், இது விலை கூடிய மருந்து. சிறுநீர்த் தொற்றைப் பராமரிக்க - அன்றிபையொற்றிக் (உ-ம் :அமொக்சிலின்)

டயலைஸிஸ் — சிறுநீரகச் செயலிழப்பில் மேலே கூறப்பட்ட இரண்டு முறைகளும் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தாவிட்டால் யூரியா, பொட்டாசியம் எனும் உப்புக்கள் ஆபத்தான நிலைக்கு கூடிவிடும். இந்நிலையில் நோயாளி மரிக்கவும் கூடும். உடலிலுள்ள அழுக்குகளாகிய யூரியா, பொட்டாசியம் என்பவற்றை வெளியேற்றும் முறையே டையலைசிஸ் எனப்படுகிறது. டையலைசிஸ் பற்றிய தலையங்கம் வேறோர் துண்டுப்பிரதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுநீரக மாற்றுச் சிகிச்சை-எதுவித மாற்றமும் எற்படாத நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பிற்கு திரும்பத் திரும்ப டையலைசிஸ் சிகிச்சை அளித்தல், ஆபத்தானதும் செலவு அதிகமாக இருக்கும். இப்படிப்பட்ட நோயாளருக்கு சிறுநீரகம் மாற்றம் செய்வது நல்லது என சிபார்சு செய்யப்பட்டுள்ளது இந்த நிலையில் சுகதேகி ஒருவரின் (இருப்பவரோ,இறந்தவரோ) சிறுநீரகம் நோயாளிக்கு மாற்றப்படுகிறது. சிறுநீரக மாற்று பற்றிய தலையங்கம் வேறொரு பிரதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சிறுநீரக செயலிழப்பை தடுக்க முடியுமா?**

kidney failure solution, ஒரு அளவிற்கு. இந்நோய் வர காரணமாக இருக்கும் பாம்புக்கடியை தவிர்ப்பதும். நீரிழிவிற்கு நேரத்தோடு சிகிச்சை பெறுவதும், கூடிய இரத்த அமுக்கம் வராது தடுப்பதும், சிறுநீரக அழர்ச்சி ஏற்படாது பார்ப்பதும், புரஸ்ரேட் பிரச்சினையை தவிர்ப்பதும், சிறுநீரக தொற்று ஏற்படாது பார்ப்பதும் இந்நோயை தடுக்கக் கூடிய வழிகளாகும். அனேக நோயாளிகள் போதிய பராமரிப்பபை பெறுவதில்லை. வைத்தியரின் உதவியையும் இடைநிறுத்தி விடுகின்றனர். சிறுநீரில் காணப்படும் அசாதாரண நிலை குறித்து (உ-ம்:அல்பியுமின்,செங்கலங்கள்) சிந்தித்து நோயை இனம் கண்டு அதை குணப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறுநீரக செயலிழப்பு முதிர்ச்சியடைததாய் இருந்தால் அதை தடுப்பது முடியாத காரியமாகும்.

**நிரந்தர சிறுநீரகச் செயலிழப்பு ஏற்பட்டவர்கள் உடலுறவு கொ ள்ள முடியுமா..?**

முடியாது. அவர்களுடைய பாலினத்துக்கேற்ப ஆண்மைக் குறைவு, பெண்மைக்குறைவு, குழந்தை பிறப்பதில் மலட்டுத்தன்மை ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக இருப்பதால் சாத்தியம் இல்லை. ஆனால், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்குப் பிறகு எல்லோரையும் போல் அவர்களும் குழந்தை பெற்றுக் கொள்ளலாம்.

# மஞ்சள் காமாலை

பொதுவாக மஞ்சள் காமாலை நோய் பித்தம் அதிகரிப்பதால் வருகிறது. பித்தமானது பல காரணங்களால் மிகுதியாகி ரத்தத்தில் கலந்து விடுவதால் மஞ்சள் காமாலை நோய் ஏற்படுகிறது.

உடல் உஷ்ணத்தாலும், இரவில் கண்விழித்து வேலை பார்ப்பதாலும், தூக்கமின்மையாலும், வயிற்றில் புளிப்புத்தன்மை ஏற்பட்டு சளி பிடித்து, ரத்தம் சூடேறி, காமாலைக் கிருமிகள் உண்டாகி, மஞ்சள் காமாலை நோயைத் தோற்றுவிக்கிறது.

இந்த பித்தமானது நஞ்சு போல் உடலில் எங்கும் வியாபிக்கக்கூடிய தன்மையுள்ளது. அதோடு மட்டுமல்லாமல், நவீன உலகத்தில் உணவுப் பழக்கங்களாலும், மிதமிஞ்சிய உணவுகளாலும், பாமாயில் கலக்கப்பட்ட எண்ணெய்களாலும் ஒருதடவை சமைத்த உணவை குளிர்சாதன பெட்டியில் வைத்து தேவைப்படும் போது மாறி மாறி சூடுபண்ணி பல நாட்கள் சாப்பிடுவதாலும், உண்ட உணவானது உடலில் புளிப்புத் தன்மையை உண்டாக்கி செரியாமை ஏற்பட்டு குடலின் பித்தமானது சளியோடு கலந்து ரத்தத்தில் சேர்ந்துவிடுகிறது. இப்படிப்பட்ட உணவுப் பழக்கங்களால், மஞ்சள் காமாலை நோய்த் தொற்று ஏற்படுகிறது.

மேலும், தலையில் எண்ணெய் தேய்த்து குளிக்கும் பழக்கத்தை மறந்ததாலும் நரம்புகள் சூடாகி பித்தம் அதிகரித்து மஞ்சள் காமாலை நோய் உண்டாகிறது. பித்தமானது அலர்ஜியாகும் போது காமாலை நோய்க்கிருமி தோன்றி, முதலில் கல்லீரலைப் பாதித்து, கண்களில் மஞ்சள் நிறம் தோற்றுவிக்கிறது. சிறுநீர் மஞ்சளாக வெளியேறுகிறது.

மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் சிறுநீர், மலம் கழித்த இடத்தை மற்றவர்கள் பயன்படுத்தினால் அவர்களையும் நோய்த் தொற்ற வாய்ப்புண்டு. ஆகையால், பாடசாலை முதல், கல்லூரி வரை ஏதேனும் ஒரு மாணவருக்கு மஞ்சள்காமாலை நோய் இருந்தால் அது மற்றவர்களுக்கு எளிதில் பரவி விடுகிறது.

பொதுவாக இப்படிப்பட்ட பித்த அலர்ஜியால் உண்டாகும் மஞ்சள் காமாலைக்கு நாட்டு மருத்துவத்தில் கீழ்க்காய்நெல்லி என்ற மூலிகையை அதிகம் பயன்படுத்துவார்கள்.

கீழ்க்காய்நெல்லி - ஒரு கைப்பிடி
சீரகம் - 1 ஸ்பூன்

இரண்டையும் நீர்விட்டு அரைத்து கசாயம் செய்து காலை, மாலை இருவேளையும் கொடுத்து வந்தால் பித்தம் தணிந்து, காமாலை நோய்த்தொற்று கிருமிகள் அழியும்.

கீழ்க்காய்நெல்லி, சுக்கு, மிளகு, சீரகம், சோம்பு, மஞ்சள் இவற்றை சம அளவு எடுத்து தண்ணீரில் கொதிக்க வைத்து, சர்க்கரை கலந்து 4 மணி நேரத்திற்கு ஒரு முறை அருந்தி வந்தால் மெல்ல மெல்ல முழுமையாக குணமடையும்.

கீழ்க்காய்நெல்ல, சீரகம், பூவரச பழுத்த இலை, கரிசலாங்கண்ணி (வயல் வெளியில் வெள்ளைப்பூக்கள் நிறைந்து காதில் அணியும் கம்மல் போன்று இருக்கும்) இவை அனைத்தும் 3 கிராம் அளவிற்கு எடுத்துக் கசாயம் செய்து காலை, மாலை வேளைகளில் சாப்பிடும் முன் அருந்தினால் காமாலை நோய் குணமாகும்.

காய்ச்சல், குளிர்சுரம் வந்தால், பித்தத்தை அதிகப்படுத்தும் உணவுகளை தவிர்ப்பது நல்லது.

பித்தத்தைத் தணிக்க, காய்கள், கீரைகள், பழவகைகளை அதிகம் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

வாரம் ஒருமுறை எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும்.
எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவுகளை தவிர்க்க வேண்டும்.
நாள்பட்ட உணவுகளை சூடாக்கி சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.
மழைக்காலங்களில் நீரை கொதிக்க வைத்து ஆறிய பின் அருந்தவேண்டும்.

புளி, உப்பு, காரம் குறைத்து சாப்பிட வேண்டும். எண்ணெய் பலகாரங்களையும், அதிக எண்ணெய் சம்பந்தப்பட்ட பொருள்களையும் தவிர்க்க வேண்டும். நன்கு ஓய்வு எடுக்க வேண்டும்.

### சிகிச்சை முறைகள்

அடைப்புக் காமாலை, அடைப்பில்லா காமாலை ஆகிய இரண்டுக்கும் சிகிச்சை முறைகள் வேறுபடும். வயிற்றின் மேல்பாகத்தில் அதிக வலி, விஷக்காய்ச்சல் ஆகியன அடைப்பு காமாலைக்கான அறிகுறியாகும். ரத்தப் பரிசோதனை மற்றும் ஸ்கேன் மூலமாக இரண்டு காமாலைகளையும் வேறுபடுத்த முடியும். பொதுவாக மக்கள் பிலிஷரூபினின் அளவை மட்டும் ரத்தத்தில் பார்த்தால் போதுமானது என்று எண்ணுகிறார்கள். இது தவறானது. பிலிஷரூபின் அளவு மட்டுமின்றி கல்லீரலின் வேலை செய்யும் திறனையும் அறிய வேண்டும். இதற்கு Liver Function Test GĀŸĀ என்று அழைக்கப்படும். புரத அளவு, நொதிகளின் அளவு போன்ற மற்ற ரத்தப் பரிசோதனைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

அல்ட்ரா சவுண்டு ஸ்கேன் மூலமாக பித்தக்குழாயில் உள்ள கற்கள், கட்டிகள் போன்றவற்றை துல்லியமாக கண்டறிந்து சிகிச்சையளிக்க முடியும். எந்தவகை மஞ்சள் காமாலை என்பதை அறியாமல் கீழ்க்காய்நெல்லி போன்ற மருந்துகளை சுயமாகச் சாப்பிட்டுவிட்டு நோய் முற்றிய நிலையில் மருத்துவமனைக்கு வருவதால் தான் சிகிச்சை பலனில்லாமல் போகிறது.

எண்டோஸ்கோப்பி மூலமாகவோ அல்லது அறுவை சிகிச்சை மூலமாகவோ அடைப்புக் காமாலையை குணப்படுத்த வாய்ப்பிருக்கிறது. பித்தக்குழாய் கற்களால் ஏற்படும் காமாலையை சரி செய்ய முன்பு அறுவை சிகிச்சை தேவைப்பட்டது. ஆனால் இன்றைய அதிநவீன விஞ்ஞான வளர்ச்சியில் எண்டோஸ்கோப்பி மூலம் ERCP என்ற அதிநவீன சிகிச்சை முறையால் கல்லை ஆபரேஷன் செய்யாமலேயே வெளியே எடுத்துவிடலாம்.

புற்றுநோயினால் பித்தக்குழாயில் அடைப்பு ஏற்பட்டால் 'ஹஸ்டென்ட்' எனும் செயற்கை குழாயை எண்டோஸ்கோப்பி மூலம் பித்தக்குழாயின் உள்ளே பொருத்தி குழாய் சுருக்கத்தை நீக்கி மஞ்சள் காமாலையை குறைக்கலாம்.

### சிகிச்சை முறைகள்

கல்லீரல் சுருக்க நோயினால் (CIRRHOSIS) உணவுக்குழாயில் உள்ள ரத்தக்குழாய்களில் ரத்தக்கசிவு ஏற்பட்டு, ஆபத்தான நிலை உருவாகலாம். சில ஆண்டுகளுக்கு முன்பு ரத்தவாந்திக்கு வயிற்றில் அறுவை சிகிச்சை செய்து சிகிச்சை அளிக்க வேண்டியதிருந்தது. இதனால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்புகளும் மிகுதியாக இருந்தன. ஆனால் தற்போதைய மருத்துவ வளர்ச்சியினால் எண்டோஸ்கோப்பி மூலம் ரத்த வாந்தியை தடுக்க பேண்டிங் (Banding), (Sclero theoraphy), க்ளு இன்ஜெக்ஷன் (Glue injection) போன்ற நவீன சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. ஆஸ்பிரின் போன்ற தலைவலி மாத்திரைகளை அடிக்கடி உட்கொள்வதாலும் ரத்தவாந்தி ஏற்படலாம். அவற்றையும் எண்டோஸ்கோப்பி மூலம் குணப்படுத்த முடியும்.

### எப்படி பரவுகிறது?

வைரஸ் A மற்றும் E கிருமிகளால் ஏற்படும் மஞ்சள் காமாலை, அசுத்தமான நீரையும், மொய்த்த தின்பண்டங்களை (facco-oral Route) உட்கொள்வதால் பரவுகிறது. சாக்கடை நீர் கலந்த குடிநீர் மற்றும் அசுத்தமான நீரை குடிப்பவர்களுக்கும் இந்த ஆபத்து ஏற்படும்.

வைரஸ் B,C,D, மற்றும் `G' வகை கிருமிகள் ஒரு நபரிடமிருந்து மற்றொருவருக்கு எப்படி பரவுகிறது என்பதை பார்ப்போம்.

1. பலமுறை, பலருக்கு பயன்படுத்திய ஊசியை உபயோகப்படுத்தும் போது, 2. நோயால் பாதிக்கப்பட்ட ரத்தம் கொண்ட தாயிடமிருந்து குழந்தைக்கும், நோயால் பாதிக்கப்பட்டவரின் ரத்தம் கொண்டவருடன் உடலுறவு கொள்பவருக்கும், போதை ஊசி போட்டுக்கொள்பவர்களுக்கு மேற்கண்ட விபரீதங்கள் நேரிடலாம். இதில் `B' வைரஸ் மிகவும் அபாயகரமானது. ஹெபடைட்டிஸ் `B` ஒரு உயிர்க்கொல்லியாகும். இது கல்லீரல் சுருக்க நோய்களின் அறிகுறிகளை ஏற்படுத்தும். இந்நோய் முற்றினால் பசியின்மை, கால்வீக்கம், வயிறு வீக்கம் போன்றவையும் ஏற்படும். முற்றிய நிலையில் ரத்தவாந்தி, புற்றுநோயும் வரும்.

**தடுப்பு நடவடிக்கை**

மஞ்சள் காமாலை உள்ளவர்களுக்கு உணவுக் கட்டுப்பாடு அவசியமான ஒன்று. ஆனால் எந்தவகையான மஞ்சள் காமாலை ஏற்பட்டுள்ளது? கல்லீரல் வியாதி எந்த நிலையில் இருக்கிறது? என்பதை அறிந்த பின்னரே தகுந்த உணவு முறையை பின்பற்ற வேண்டும்.

ஹெபடைட்டிஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மாவுச்சத்துக்கள் அதிகமாக உள்ள பொருட்களையும், புரதச்சத்து மற்றும் கொழுப்புச்சத்து குறைந்த உணவையும் உட்கொள்ளுங்கள். மாமிச உணவு வகைகளை முற்றிலும் தவிர்ப்பது மிகவும் நல்லது. உப்பு, காரம் வகைகளை அளவோடு சேர்த்துக்கொள்ளுங்கள். பச்சைக்காய்கறிகள் மற்றும் கீரைகளை அதிகமாக சாப்பிடலாம். ஹெபடைட்டிஸ் A மற்றும் B-+Vயை தடுப்பூசி மூலம் விரட்டியடிக்கலாம். `B' - க்கு தடுப்பு ஊசி போடுவதன் மூலம் `D`வைரஸ்சும் நம்மை அண்டாது. ஆனால் C மற்றும் E- க்கு தடுப்பு ஊசியே கிடையாது.

`B` வைரஸ் தாக்கியிருந்தால் ஒன்றுமுதல் 6 மாதங்கள் வரை மூன்று ஊசி போட்டுக்கொள்ள வேண்டும்.

`A` வைரஸ் என்றால் 6 மாதங்கள் என்ற முறையில் ஊசிப் போட்டுக்கொள்ள வேண்டும்.

உரிய இடைவெளியில் தடுப்பூசி போடவில்லை என்றால் உரிய பயன் கிடைக்காது.

ரத்தம் மூலம் பரவும் வைரஸ்கள் `B`மற்றும் `C` எனவே ரத்தம் செலுத்தும் போது இக்கிருமிகள் இல்லை என்பதை உறுதி செய்து கொள்வது முக்கியமானதாகும்.

**வருமுன் காப்போம்**

மஞ்சள் காமாலையை அறவே தடுப்பது அவசியமானதாகும். அதற்கு நன்கு காய்ச்சி, வடிகட்டிய நீரை பருகுங்கள். வெளியூர் மற்றும் உள்ளூர் பயணங்களிலும் காய்ச்சிய நீரையே பருகுங்கள். வீதியோரங்களில் விற்கும் கண்ட தின்பண்டங்களையும், ஈமொய்க்கும் பண்டங்களையும் கண்டு விலகி ஓடுங்கள். நகங்களை, கைகளை நன்கு சுத்தமாக வைத்திருங்கள். மலம் கழிந்த பின்னர் கைகளை நன்றாக சுத்தம் செய்யுங்கள். பச்சைக்காய்கறிகளை `Salad' முறையில் உட்கொள்வது இன்றைய பேஷனாக உள்ளது. அந்த காய்கறிகள் நன்கு சுத்தப்படுத்தப்பட்டுள்ளதா? என்பதையும் அறிந்துகொள்வது நல்லது. மேற்கண்ட வழிமுறைகளை பின்பற்றுங்கள். மஞ்சள் காமாலை நோய் உங்களை கண்டு விலகி ஓடலாம்.

# கல்லீரலில் ஏற்படும் பாதிப்புகள்

நம் உடலில் இதயம் மற்றும் மூளைக்கு அடுத்தபடியாக மிகவும் முக்கிய பாகமாக கல்லீரலைக் கூறலாம். மிகவும் சென்ஸிட்டிவ்வான உறுப்பான கல்லீரல் நம் உடலில் செய்யும் வேலைகள் பற்பல. சர்க்கரை, கொழுப்பு, இரும்புச்சத்து ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதில் கல்லீரல் மிக முக்கியமான பங்கை வகிக்கிறது. மேலும், புரத உற்பத்திக்கும் இது மிகவும் உதவிகரமாக உள்ளது.

அதே நேரத்தில், கல்லீரலில் நோய் ஏற்பட்டால் அது உடலின் பல இயக்கங்களைப் பாதிக்கிறது. கல்லீரலில் ஏற்படும் நோய்க்கு கல்லீரல் நோய் என்று பெயர். இந்த நோய் ஏற்படுவதை உடல் நலக் குறைவு, வாந்தி, மயக்கம், களைப்பு, எடை குறைவு ஆகிய பல அறிகுறிகள் மூலம் தெரிந்து கொள்ளலாம். 75%க்கும் மேற்பட்ட கல்லீரல் திசுக்கள் சேதமடையும் போது கல்லீரல் கடும் பாதிப்புக்கு உள்ளாகிறது. கல்லீரல் முழுவதுமாக செயலிழந்தால் மாற்றுக் கல்லீரல் பொருத்திக் கொள்வதற்கு வாய்ப்புள்ளது.

**கல்லீரலுக்கு ஏற்படும் பிரச்சனைகளை குணப்படுத்த சில வழிகள்**

**ஆப்பிள் சீடர் வினிகர்**

ஒவ்வொரு சாப்பாட்டிற்கு முன்னரும் இந்த ஆப்பிள் சீடர் வினிகரை எடுத்துக் கொள்வது கல்லீரலுக்கு மிகவும் நல்லது. ஒரு டம்ளர் நீரில் ஒரு ஸ்பூன் ஆப்பிள் சீடர் வினிகரைக் கலந்து, அத்துடன் ஒரு ஸ்பூன் தேனையும் கலந்து குடிக்கலாம். தினமும் 3 முறை இதைக் குடித்து வந்தால் கல்லீரல் சுத்தமாகும்.

**டான்டேலியன் ஷரூட் தேநீர்**

டான்டேலியன் வேரில் தயாரிக்கப்பட்ட டீயை தினமும் இரு முறை குடித்து வந்தால், கல்லீரல் செயல்பாடுகள் அதிகரிக்கும். கொதிக்கும் நீரில் இந்த வேர்களைச் சிறிது சேர்த்து, அந்த நீரை அருந்துவதும் நல்லது.

**நெல்லிக்காய்**

வைட்டமின் சி அதிகமுள்ள நெல்லிக்காயைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், கல்லீரலின் செயல்பாடுகள் நன்றாக இருக்கும். அதிலும் ஒரு நாளுக்கு 5 நெல்லிக்காய்கள் வரை சாப்பிட்டு வந்தால் கல்லீரல் வலுவடையும். வேண்டுமானால் தயிர், உப்பு ஆகியவற்றுடன் நெல்லிக்காயைச் சேர்த்து பச்சடியாகவும் சாப்பிடலாம்.

**அதிமதுரம்**

சில கல்லீரல் நோய்களுக்கு அருமையான ஆயுர்வேத மருந்தாக விளங்குகிறது அதிமதுரம். இந்த அதிமதுரத்தின் வேரை நன்றாகப் பொடித்து, அதை டீத்தூளுடன்

கொதிக்கும் நீரில் போட வேண்டும். சிறிது நேரம் கழித்து, அதை வடிகட்டி குடிக்கலாம். ஒரு நாளைக்கு இரு முறை குடிப்பது உசிதம்.

**மஞ்சள்**

தினமும் மஞ்சளை உணவில் சேர்த்துக் கொள்வதால் நம் உடலுக்குப் பலப்பல நன்மைகள் கிடைக்கும். குறிப்பாக, ஹெப்பாடிட்டிஸ் பி மற்றும் சி ஆகியவற்றுக்குக் காரணமான வைரஸ்கள் பரவுவதை மஞ்சள் தடுக்கிறது. அதற்கு தினமும் பாலுடன் அல்லது ஒரு ஸ்பூன் தேனுடன் அரை ஸ்பூன் மஞ்சளைக் கலந்து குடிக்கலாம்.

**ஆளி விதைகள்**

இரத்தத்தில் உள்ள சில ஹார்மோன்கள் கல்லீரலை சில சமயம் சேதப்படுத்துகின்றன. இதைத் தவிர்க்க, ஆளி விதைகளை நம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**பப்பாளிப் பழம்**

கல்லீரல் நோய்க்கு பப்பாளிப்பழம் ஒரு அருமையான மருந்தாகும். தினமும் ஒரு ஸ்பூன் எலுமிச்சைச் சாற்றுடன் 2 ஸ்பூன் பப்பாளிப்பழச் சாற்றைத் தொடர்ந்து 4 வாரங்கள் சாப்பிட்டு வருவது பலன் கொடுக்கும்.

**கீரை, கேரட் ஜூஸ்**

அரை டம்ளர் கீரை ஜூஸ் மற்றும் அரை டம்ளர் கேரட் ஜூஸ் ஆகியவற்றைத் தினமும் 3 மணிநேரத்திற்கு ஒரு முறை சாப்பிட்டு வந்தால் கல்லீரல் நோய் ஓடிப் போகும்.

**சிகரெட், ஆல்கஹால் வேண்டாம்**

மது அருந்துவது கல்லீரலுக்கு மிகவும் கேடானது. எனவே, கல்லீரல் நன்றாக இருக்க வேண்டும் என்றால் மது அருந்துவதை உடனே நிறுத்த வேண்டும். அதேப்போல் சிகரெட் புகைப்பதையும் கண்டிப்பாக நிறுத்த வேண்டும்.

**அவகேடோ மற்றும் வால்நட்ஸ்**

கல்லீரல் நோய்கள் எதுவும் வராமல் இருக்க இந்த இரண்டையும் தினமும் உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது. இதனால் அவற்றில் உள்ள க்ளுடாதியோன், கல்லீரலில் தங்கியுள்ள நச்சுக்களை வெளியேற்றும்

**ஆப்பிள், காய்கறிகள்**

கல்லீரலைக் காப்பாற்ற பசுமையான காய்கறிகளையும், ஆப்பிளையும் நம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் காய்கறிகள் பித்தநீரை

சீராக சுரக்க உதவுவதுடன், ஆப்பிளில் உள்ள பெக்டின் செரிமான பாதையில் உள்ள நச்சுக்களை வெளியேற்றி, கல்லீரலில் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்கும்.

### ஃப்ளுாரைடுக்கு "நோ"

ஃப்ளுாரைடு கலக்காத நீரை தினமும் 12 டம்ளர் வரை அருந்துவது, கல்லீரலுக்கு நல்லது.

### உடற்பயிற்சி

தினமும் குறைந்தது 40 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்து வந்தால், நன்றாக செரிமானம் ஆகும் நிறைய வியர்க்கவும் செய்யும். இவ்விரண்டும் கல்லீரல் பாதிப்படைவதை வெகுவாகத் தவிர்க்கும். மேலும் வாரத்திற்கு 5 முறையாவது உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

### க்ரீன் டீ

இதில் நிறைய கேட்டச்சின்கள் இருப்பதால் கல்லீரலுக்கு மிகவும் நல்லது. தினமும் 3 முதல் 4 கப் க்ரீன் டீயைக் குடித்து வந்தால், கல்லீரல் தொடர்பான பிரச்சனைகளுக்கு நிவாரணம் கிடைக்கும்.

### பால் நெருஞ்சில் விதை (Milk Thistle Seeds)

பால் நெருஞ்சில் என்று அழைக்கப்படும் மூலிகை பலவிதமான ஈரல் நோய்களைக் குணப்படுத்த வல்லது. வைரல் ஹெப்பாடிட்டிஸ், கைரோசிஸ், ஆல்கஹாலிக் ஹெப்பாடிட்டிஸ் உள்ளிட்ட பலவற்றிற்கும் அருமையான மருந்தாக இம்மூலிகை விளங்குகிறது. தினமும் இருமுறை 900 மில்லிகிராம் அளவில் இந்த மூலிகையை சாப்பாட்டின் போது எடுத்துக் கொள்வது நல்லது.

### கல்லீரல் பழுதடைந்துள்ளது என்பதை அறிய சில அறிகுறிகள்

உடலில் உள்ள உறுப்புகளில் கல்லீரல் மிகவும் முக்கியமான ஒரு உறுப்பு. ஒரு வேளை கல்லீரல் சரியாக இயங்காவிட்டால், உடனே அதற்கு சரியாக சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். சில நேரங்களில் கல்லீரல் பாதிக்கப்பட்டிருந்தால், அதை தெரிந்து கொள்வது என்பது மிகவும் கடினம். ஏனெனில் கல்லீரல் பாதிக்கப்பட்டிருந்தால், அதற்கு சில அறிகுறிகள் உள்ளன. ஆனால் அந்த அறிகுறிகள் சாதாரணமாக உடலில் அவ்வப்போது வரும் என்பதால், சரியாக அதனை கவனிக்கமாட்டோம்.

இந்த மாதிரி கல்லீரல் பாதிப்படைவதற்கு ஆல்கஹால் அதிகம் குடிப்பது, அதிகமான எண்ணெய் உள்ள உணவுகளை சாப்பிட்டு, அதனால் கல்லீரலில் கொழுப்புக்கள் அதிகம் சேர்ந்து பாதிப்பை ஏற்படுத்துகின்றன. மேலும் சரியான நேரத்தில் சாப்பிடாமல் இருந்தால், கல்லீரலில் கொழுப்புகள் தங்கிவிடும்.

## வாய் துர்நாற்றம்

கல்லீரலானது சரியாக இயங்கவில்லையெனில், வாயிலிருந்து கடுமையான நாற்றம் வரும். ஏனெனில் அப்போது உடலில் அம்மோனியாவானது அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கும்.

## கருவளையம் மற்றும் சோர்வான கண்கள்

கல்லீரல் சரியாக இயங்காலிட்டால், சருமத்தில் பாதிப்பு மற்றும் சோர்வு போன்றவை ஏற்படும். அதிலும் குறிப்பாக கண்களைச் சுற்றி கருவளையங்கள் ஏற்பட்டு, சுருக்கங்களோடு காணப்படும்.

## செரிமானப் பிரச்சனை

கல்லீரலில் கொழுப்பானது அதிகம் சேர்ந்திருந்தால், தண்ணீர் கூட சரியாக வெளியேறாமல் இருக்கும். இத்தகைய பிரச்சனை உடலில் தெரிந்தால், அது கல்லீரல் பழுதடைந்துள்ளதற்கான அறிகுறியாகும்.

## வெளுத்த சருமம்

கல்லீரலில் பாதிப்பு இருந்தால், சில சமயங்களில் சருமத்தில் உள்ள நிறமிகள் நிறமிழந்து, சருமத் தோலானது திட்டுதிட்டாக ஆங்காங்கு வெள்ளையாக காணப்படும்.

## அடர்ந்த நிற சிறுநீர் மற்றும் கழிவுகள்

உடலில் இருந்து வெளியேறும் கழிவுகள் அடர்ந்த நிறத்தில் இருக்கும். இந்த மாதிரி எப்போதாவது ஏற்பட்டால், அதற்கு உடலில் வறட்சி என்று அர்த்தம். ஆனால், தொடர்ச்சியாக இருந்தால், அது கல்லீரல் பழுதடைந்ததற்கான அறிகுறியாகும்.

## மஞ்சள் நிற கண்கள்

கண்ணில் உள்ள வெள்ளை பகுதி மஞ்சள் நிறத்தில் காணப்பட்டால், அது மஞ்சள் காமாலையாக இருக்கலாம். அதாவது கல்லீரலில் தொற்றுநோய் ஏற்பட்டுள்ளது. எனவே அதற்கேற்ப முறையான சிகிச்சை செய்ய வேண்டும்.

## வாய் கசப்பு

கல்லீரலில் பைல் என்னும் நொதியானது உற்பத்தி செய்யப்படும். அந்த பைல் நொதி தான் கசப்பான சுவையை ஏற்படுத்துகிறது. எனவே வாயில் அதிக கசப்பு இருந்தால், கல்லீரலில் பாதிக்கப்பட்டுள்ளது என்று அர்த்தம்.

## வயிறு வீக்கம்

கல்லீரலானது பெரும் பாதிப்பிற்கு ஆளாகியிருந்தால், அவை வயிற்றின் அடிப்பகுதியில் வீக்கத்தை ஏற்படுத்

# ஆரோக்கிய வாழ்வுக்கு சில மருத்துவக் குறிப்புகள்

**நெஞ்சுச் சளி**

தேங்காய் எண்ணையில் கற்பூரம் சேர்த்து நன்கு சுடவைத்து ஆறவைத்து நெஞ்சில் தடவ, சளி குணமாகும்.

**தலைவலி**

ஐந்தாறு துளசி இலைகளும் ஒரு சிறு துண்டு சுக்கு, 2 லவங்கம் சேர்த்து நன்கு அரைத்து நெற்றியில் பற்றாகப் போட்டால் தலைவலி குணமாகும்.

**தொண்டைக் கரகரப்பு**

சுக்கு, பால், மிளகு, திப்பிலி, ஏலரிசி ஆகியவற்றை வறுத்து பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட தொண்டைக் கரகரப்புக் குணமாகும்.

**தொடர் விக்கல்**

நெல்லிக்காய் இடித்துச் சாறு பிழிந்து, தேன் சேர்த்துச் சாப்பிட்டால் தொடர் விக்கல் தீரும்.

**வாய் நாற்றம்**

சட்டியில் படிகாரம் போட்டுக் காய்ச்சி ஆறவைத்து அதனை ஒரு நாளைக்கு மூன்று வேளை வாய் கொப்பளித்து வந்தால் வாய் நாற்றம் போகும்.

**உதட்டு வெடிப்பு**

கருப்பு சக்கையை எடுத்து எரித்து சாம்பலாக்கி, அதனுடன் வெண்ணெய் கலந்து உதட்டில் தடவி வர உதட்டு வெடிப்புக் குணமாகும்.

**அஜீரணம்**

ஒரு டம்ளர் தண்ணீரில் கருவேப்பிலை, இஞ்சி, சீரகம் மூன்றையும் கொதிக்க வைத்து ஆறவைத்து வடிகட்டிக் குடிக்க அஜீரணம் சரியாகும்.

**குடற்புண்**

மஞ்சளைத் தணலில் இட்டுச் சாம்பல் ஆகும் வரை எரிக்க வேண்டும். மஞ்சள் கரிச் சாம்பலைத் தேன் கலந்து சாப்பிட குடற்புண் ஆறும்.

**வாயுத் தொல்லை**

வேப்பம் பூவை உலர்த்தித் தூளாக வெந்நீரில் உட்கொள்வதினால் வாயுத் தொல்லை நீங்கும். ஆறாத வயிற்றுப்புண் நீங்கும்.

**வயிற்று வலி**

வெந்தயத்தை நெய்யில் வறுத்துப் பொடி செய்து மோரில் குடிக்க வயிற்று வலி நீங்கும்.

**மலச்சிக்கல்**
செம்பருத்தி இலைகளைத் தூள் செய்து, தினமும் இருவேளை சாப்பிட்டு வர மலச்சிக்கல் தீரும்.

**சீதபேதி**
மலை வாழைப்பழத்தை நல்லெண்ணையில் சேர்த்துச் சாப்பிடச் சீதபேதி குணமாகும்.

**பித்த வெடிப்பு**
சுண்டகங்கத்திரி இலைசாறை ஒலிவ் எண்ணெயில் காய்ச்சிப் பூசி வந்தால் பித்த வெடிப்புக் குணமாகும்.

**மூச்சுப்பிடிப்பு**
சூடம், சுக்கு, சாம்பிராணி பெருங்காயம் இவைகளைச் சம அளவு எடுத்துச் சேர்த்து வடித்த கஞ்சியில் கலக்கி மறுபடியும் சூடுபடுத்தி மூச்சுப்பிடிப்பு உள்ள இடத்தில் மூன்று வேளை தடவினால் குணமாகும்.

**சரும நோய்**
கமலா ஆரஞ்சு தோலை வெயிலில் காயவைத்துப் பொடி செய்து தினமும் சோப்புக்கு பதிலாக உடம்பில் தேய்த்து குளித்து வரச் சரும நோய் குணமாகும்.

**தேமல்**
வெள்ளைப்பூண்டை வெற்றிலை சேர்த்து மசிய அரைத்துத் தினமும் தோலில் தேய்த்து குளித்து வர தேமல் குணமாகும்.

**மூலம்**
கருணைக்கிழங்கை சிறு துண்டுகளாய் நறுக்கி துவரம் பருப்புடன் சேர்த்துச் சாம்பாராகச் செய்து சாப்பிட்டு வர மூலம் குணமாகும்.

**தீப்புண்**
வாழைத்தண்டைச் சுட்டு, அதன் சாம்பலைத் தேங்காய் எண்ணையில் கலந்து தடவி வர தீப்புண், சீழ்வடிதல் மற்றும் காயங்கள் விரைவில் குணமாகும்.

**மூக்கடைப்பு**
ஒரு துண்டு சுக்கை தோல் நீக்கி அரை லீட்டர் நீரில் போட்டு சுண்டக் காய்ச்சி பால், சர்க்கரை சேர்த்துக் காலை, மாலை சாப்பிட்டு வர மூக்கடைப்பு விரைவில் நீங்கும்.

**வரட்டு இருமல்**
எலுமிச்சம் பழச்சாறு, தேன் கலந்து குடிக்க வரட்டு இருமல் குணமாகும்.

**மார்புச் சளி**

வெறும் வயிற்றில் இஞ்சிச் சாறில் தேன் கலந்து பருகினால் சோர்வு நீங்கும். மார்புச் சளி அகலும்.

**சளிக் காய்ச்சல்**

புதினா கீரையை நீரில் போட்டுக் கொதிக்க வைத்துக் கசாயம் போற செய்து சாப்பிட்டால் சளியால் வரும் காய்ச்சல் குணமாகும்.

## நலமான உடலுக்கு வாழைப்பழம்

1. எல்லா வயதினருக்கும் ஏற்றது.
2. பலவகையான சத்துக்கள் உள்ளன. ஒரு வாழைப்பழத்தில்,

   நீர் - 75%

   நார்ச்சத்து - 16%
3. உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும்.
4. இரும்புச்சத்து இருப்பதால் இரத்த சோகை இருப்பவர்களுக்கு சிறந்தது.
5. வாழைப்பழத்திலுள்ள "B6" "B12" புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கைவிட உதவும்.
6. கடுமையான வயிற்றுப் போக்கைத் தணிப்பதற்கும், மலச்சிக்கலைப் போக்கவும் உதவும்.
7. வயிற்றில் அமிலம் சுரப்பதையும், அல்சர் எனப்படும் புண் ஏற்படுவதையும் வாழைப்பழம் தடுக்கும்.
8. தினசரி உணவில் வாழைப்பழத்தைச் சேர்த்துக் கொண்டால் பக்கவாதத்தால் ஏற்படும் இறப்பை 40% குறைக்கலாம்.

## இளநீரின் அருமை

1. தினமும் இளநீர் அருந்தினால் நம்மை இளமையாக வைத்திருக்கலாம்.
2. இளநீரில் உள்ள உப்புச்சத்து நம் உடலில் வெப்பநிலையை சமச்சீராய் பாதுகாப்பதோடு மட்டுமன்றி உடலின் வெப்பநிலையை உள்வாங்கிச் சரிவர வெளியே தள்ளுகிறது.
3. சர்க்கரை நோய் உள்ளவர்கள் இளநீரைக் குறைவாகக் குடிக்க வேண்டும்.
4. இதய நோயாளிகளுக்கு இளநீர் இதம்.
5. சிறுநீரகச் செயல் இழப்பு நோயாளி இளநீர் குடிக்கக் கூடாது.

# கருஞ்சீரகம் தரும் நன்மைகள்

- தோல் நோய்களைக் குறைக்கும். பசியைத் தூண்டும். ஜீரணத்தை சீர்படுத்தும். வயிற்றுப் போக்கைக் குணப்படுத்தும். புழுக்கொல்லியாகச் செயல்படும். வாந்தியைத் தடுக்கும். இதய வலியைக் குறைக்கும். சிறுநீர்ச் சுரப்பிகளைத் தூண்டும். பாற் சுரப்பைக் கூட்டும்.

- சிறிதளவு கருஞ்சீரகத்தைப் பசும்பால் விட்டு அரைத்து முகத்தில் பூசி ஊறிய பின் கழுவி வர முகப்பரு மறையும்.

- கருஞ்சீரகத்தை நீர் விட்டு அரைத்து நல்லெண்ணையில் குழைத்து கரப்பன், சிரங்கு ஆகியவற்றில் பூசி வரக் குணம் தெரியும்.

- கருஞ்சீரகத்தை அரைத்து தேமல் மேல் பூசி வர தேமல் சிறிது சிறிதாக மாறும்.

- கருஞ்சீரகத்தை வறுத்து காடி விட்டு அரைத்து சொறி, தேமல் மேல் பூசிவர தேமல், சொறி மறையும்.

- கருஞ்சீரகத்தையும் தும்மட்டிக்காயையும் சேர்த்து அரைத்து விலாப்பக்கம் பூசி வர குடற் பூச்சிகள் வெளியேறி விடும்.

- கருஞ்சீரகப் பொடி, மல்லிப்பொடி இரண்டையும் பாலில் கலந்து சாப்பிட அஜீரணம் மாறும்.

- கருஞ்சீரகப் பொடியைத் தயிரில் கலந்து சாப்பிட அஜீரணம் மற்றும் வாயு உற்பத்தி மாறும்.

- கருஞ்சீரகத்தை எருமைப்பால் விட்டு அரைத்து முகத்தில் தடவி வர முகப்பரு மாறும்.

- கருஞ்சீரகத்தை வெற்றிலைச் சாறு விட்டு அரைத்து காது, கன்னப்பகுதியில் ஏற்படும் வீக்கம் மேல் பத்துப் போட வீக்கம் மறையும்.

- கைபிடி கீழ்க்காய்நெல்லி இலைகளோடு ஒரு ஸ்பூன் கருஞ்சீரகம் சேர்த்துச் சிறிதளவு பால் சேர்த்து அரைத்து பின் இதை ஒரு கப் பாலில் கலந்து காலை உணவுக்கு அரை மணிநேரம் பின் மற்றும் மாலை நேரம் பருகி வர மஞ்சட் காமாழை குணமாகும்.




**அமரர் திரு. E.S. பேரம்பலம் கணேசலிங்கம்**

(உரிமையாளர், E.S.P சக நிறுவனம், கொழும்பு | E.S.P சக நிறுவனம், யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சமாதான நீதவான் (J.P)

சிவதொண்டன் | தேச கீர்த்தி | தேச அபிமானி | வணிக மாமணி

கொழும்பு மாவட்ட மனித உரிமை அமைப்பாளர் | இறைபணிச் செம்மல்

# நிகழ்வுகளின் நிழல்கள்




இலங்கை குமரித்தமிழ்ப்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் இம்மன்றத்தின் தலைவர் நா.வை குமரிவேந்தன் எழுதிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா 29.03.2015 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் நடைபெற்றபோது இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். இந்திய உதவித்தூதுவர் மாண்புமிகு ஏ.நடராஜன்,திருமதி.நடராஜன் ஆகியோர்களும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் S.சிறிதரன் யாழ். பல்கலைக்கழகத்தமிழ்த்துறைத் தலைவர் S.சிவலிங்கராஜா, கண்டியில் இருந்து இலங்கை மனித உரிமை அமைப்பின் அமைப்பாளர் தேசகீர்த்தி வேலுப்பிள்ளை சிதம்பரநாதன்.J.P ஆகியோர்கலந்துகொன்டனர். இந்நிகழ்வின்போது பேச்சாளரும், வவுனியா தமிழ்ச்சங்கத்தின் தலைவருமான தமிழருவி த.சிவகுமாரன் அவர்கள்,சமூகத்தொண்டரும், மனித உரிமை அமைப்பின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் சிவத்தொண்டர்,தேசக்கீர்த்தி E.S.P.நிறுவனங்களின் உரிமையாளரும் E.S.P. கணேசலிங்கம்J.P அவர்களால் பொன்னாடைபோர்த்தி, விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.


RATHNA DEEPA AWARD CEREMONY - 2014
Photo shop: 0775 213 673
KEPPETHPOLA MEMORIAL HALL KANDY
Hon. Chief Guest: A Nadarajan Asst, Highcommisinor of INDIA (Kandy, Sri lanka)
“DSHESABIMANI” E.S.P. GANESA LINGAM




அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் ஏற்பாட்டில் 02-01-2014 அன்று பக்தி நாடக அரங்கேற்றமும், சான்றோர் கௌரவிப்பு நிகழ்வும் மருதானை டவர் மண்டபத்தில் நடைபெற்ற போது இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ பிரபா கணேசன் அவர்கள் சமூகத்தொண்டர், தொழிலதிபர், வணிகமாமணி, இறைப்பணிச் செம்மல், சிவத்தொண்டர், ரத்ன தீப அகிலஇலங்கை சமாதான நீதவான், தேசகீர்த்தி ஈ.எஸ்.பி.கணேச லிங்கம் அவர்களை பொன்னாடை அணிவித்து சான்றிதழ் வழங்கி கௌரவித்தபோது பிடிக்கப்பட்ட படம்

கண்டி இரா.அ.இராமன் முகாமையாளர், தினக்குரல் கண்டிக் கிளை
கையேசி :0774340357


RATHINA DEEPA AWARD CEREMONY - 2014
DEEPA
Photo shop: 0775 213 673
KEPPETIPOLA MEMORIAL HALL KANDY
Hon. Chief Guest: A Nadarajan Asst, Highcommisinor of INDIA (Kandy, Sri lanka)
"DSHESABIMANI" E.S.P. GANESA LINGAM




மலையக கலை கலாசார சங்கத்தில் ஏற்பாட்டில் சிங்களத் திரைப்பட நடிகரும், இயக்குனருமான காமினி பொன்சேகா அவர்களின் நினைவு தின வைபவம் 23.03.2014 ஞாயிற்றுக்கிழமை கண்டி கெப்பிட்டிப்பொல ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற போது வணிகமாமணி, இறைப்பணிச்செம்மல், சிவத்தொண்டர், தேசாபிமானி, தேசகீர்த்தி, அகில இலங்கை சமாதான நீதவான், ஈ.எஸ்.பி. கணேசலிங்கம் அவர்கள். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துக்கொண்ட இந்திய உதவித்தூதுவர் மாண்புமிகு ஏ. நடராஜன் அவர்களினால் கௌரவிக்கப்படுவதை படத்தில் காண்கிறீர்கள்

# கௌரவ விருதுகள்

# சுவாமி விபுலாநந்தர் கலா மன்றம் - மாத்தளை

## Swami Vipulanandar Kala Mandram - Matale

www. Facebook.com/Swamivipulanandar Kala Mandram Matale

## பாராட்டு விழா - 2015

**உயர்திரு. E.S.P. கணேசலிங்கம் J.P**

" சிவத்தொண்டர், தேச கேசி, "

கொழும்பு மாவட்ட மனித உரிமை அமைப்பின் அமைப்பாளர்

அவர்கள் சமூக, சமய, வளர்ச்சிக்கும், தமிழுக்கும் ஆற்றிவரும் அழப்பறிய சேவையினை

பாராட்டி " சுவாமி விபுலாநந்தர் விருது " வழங்கி கௌரவிக்கப்படுகின்றது.

செல்லையா ஜெயராஜ்
( செயலாளர் )
சுவாமி விபுலாநந்தர் கலா மன்றம் - மாத்தளை

( பிரதம அதிதி )
கௌரவ ( செல்வி ) ராதா வெங்கட்ராமன்
இந்திய உதவித் தூதுவர் - கண்டி.

" சாமஸ்ரீ, சமூகஜோதி, கலைமாமணி, கலாபூஷணம் "
மாத்தளை ராஜ்சிவா எஸ்.சிவலிங்கம்
( தலைவர் )
சுவாமி விபுலாநந்தர் கலா மன்றம் மாத்தளை

# HILL COUNTRY CULTURAL & ART ASSOCIATION

25/15/A Sri Pushpadana Mawatha, Kandy, Sri Lanka.

# A.M. Raja & Jikki

## MEMORIAL CERTIFICATE

Awarded to

Mr. E.S.P. Ganesalingam.



Rathna Deepa Award Ceremony

Held On ..... 7.6.2015. .....

HILL COUNTRY
CULTURAL & ART ASSOCIATION
25/15/A, Sri Pushpadana Mawatha
KANDY.

for

Social Service.

| | | |
|---|---|---|
| Hon. Chief Guest | Special Guest | Chairman |
| **A. Natarajan** | | **Mr. M.M. Noufal** |
| **Consul- General of India** | | **DIVISIONAL SECRETARY** |
| **Jaffna. Sri Lanka** | | **OTTAMAWADI** |



## T.M.S.ஞாபக விருது வழங்கும் விழா

# பாராட்டுப் பத்திரம்

நாள்:15-05-2016 ஞாயிற்றுகிழமை
மாலை 6 மணிமுதல் இரவு 9 மணிவரை
விவேகானந்தா கல்யாண மண்டபம், மேட்டுத்தெரு, கொழும்பு-13.

சிவஸ்ரீ, திரு / திருமதி E. S. P. கணேசலிங்கம் அவர்களின்

சமூகம் சேவையினை பாராட்டி

சமூகதீபம் என்னும் பட்டம் வழங்கி

கௌரவித்த பாராட்டுபத்திரம்



பாராட்டு வழங்குபவர்கள்:-

T.M.S.பால்ராஜ் ..........

டாக்டர் சாம்ப சிவமணிக்குருக்கள் ..........



விழா ஏற்பாடு

**டாக்டர் சாம்பசிவமணிக் குருக்கள்**
**0758117370 / 90030 68406**

சுபம்



கொழும்பு விவேகானந்தாமேடு அருள்மிகு

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்பாள்

தேவஸ்தானம்

தென்னிந்திய நகைச்சுவை நடிகர்கள் கலந்து கொள்ளும்
இன்பராகம் திரையிசை நிகழ்ச்சி 26.06.2005
ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு விவேகானந்த
மண்டபத்தில் நடைபெற்ற விழாவில்

திரு. கணேசன்

அவர்களுக்கு

சிவ தொண்டன்

என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட
பாராட்டு பத்திரம்

இங்ஙனம்

குமரிமுத்து

S Muthukalai
முத்துக்காளை

கிங்காங்

Aarthi
ஆர்த்தி

டாக்டர் சாம்பசிவ மணிக்குருக்கள்

சுபம்

# HILL COUNTRY CULTURAL & ART ASSOCIATION

25/15/A Sri Pushpadana Mawatha, Kandy, Sri Lanka.

# M.G.R



## MEMORIAL CERTIFICATE

Awarded to

Mr. E.S.P. Ganesha Lingam

## Rathna Deepa Award Ceremony

Held On 17. 01. 2014

Hindu Senior School - Kandy.

HILL COUNTRY
CULTURAL & ART ASSOCIATION
25/15/A, Sri Pushpadana Mawatha
KANDY.

For

Social Service.

| Chairman | Hon. Chief Guest | Secretary |
|---|---|---|
| | HON. A.NATARAJAN<br>ASSISTANT HIGH COMMISSIONER OF INDIA<br>KANDY-SRILANKA | |



ஓம்

# பெரியோர் கௌரவிப்பு

அருள்மொழிச்செல்வர்.அருட்கலைமாமணி,சொற்பேராழி, சித்தாந்த பண்டிதர், வாகீசகலாநிதி, செஞ்சொல்வாணர், நவரஸகலைஞானி, சிரேஸ்டவிரிவுரையாளர் (மொழித்துறை) சப்ரகமுவா பல்கலைக்கழகம்.

**கலாநிதி.கனகசபாபதி நாகேஸ்வரன் (சமாதான நீதவான் அ/இ)**
**அவர்களின் மணிவிழாக்குழு சார்பில்**

திரு........இ.ச.பே.கணேஷ்........அவர்களுக்கு

........சமூகம்........எனும் துறை சார்ந்த

பணிக்காக........சமூகமாமணி........எனும் கௌரவ விருது

வழங்கி வாழ்த்துகின்றோம்.

இடம் : வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபம்


திகதி :02-06-2013

**"வாழ்க தமிழ் வளர்க கலை"**

கலாநிதி.அகளங்கன்
தலைவர் மணிவிழாக்குழு.

கலாநிதி.க.நாகேஸ்வரன் M.A.Phd
அகிலஇலங்கை சமாதான நீதவான்
சிரேஸ்ட விரிவுரையாளர்(மொழித்துறை)
சப்ரகமுவா பல்கலைக்கழகம்.

Dr. Kanagasabapathy Nageswaran M.A.Ph.D J.P.
Senior Lecturer Grade I
Justice of Peace (Whole Island)
Department of Languages
Sabaragamuwa University of Sri Lanka.
Belihuloya. 70140


Reg No:C.P.C./K.A./46, CPC/K/GW/08/A/24, 06/05/ස/ස/ශ්‍රී.ප/මහ/2/41

සේවයට, සහජ, දක්‍ෂතාවයට, ප්‍රවීනතාවයට,
සාධු චර්යාවට උපහාර පිරිනැමීම උදෙසා

ජාතික ගෞරවනාම සම්මාන පදවි
සන්නස් පත්‍රය

කඳුරට සංස්කෘතික හා කලා සංගමය
(රත්නදීප) මගින් වසර
........2014........වෙනි දින
..............................ශාලාවේදී පැවත්වුනු

දිවංගත ගාමිණි ෆොන්සේකා මහතාගේ
ජන්ම දින සැමරුම් උළෙලේදී
ශ්‍රී ලංකාවේ ජනහද දිනූ
ගරු.... E.S. ..............................
..............................

මෙම ගෞරව නාම සම්මාන සන්නස් පත්‍රය
ප්‍රදානය කළ බව මෙසේ සහතික කරමු

කඳුරට සංස්කෘතික හා කලා සංගමය
25/15/ඒ ශ්‍රී පුෂ්පදාන මාවත, මහනුවර

ගරු සභාපති තුමා | ප්‍රධාන ආරාධිත | ගරු ලේකම් තුමා

මානව හිමිකම් සංවිධානය
மனித உரிமைகள் அமைப்பு
HUMAN RIGHTS ORGANIZATION



# මානව හිමිකම් සංවිධානය
# மனித உரிமைகள் அமைப்பு
# HUMAN RIGHTS ORGANIZATION

Regd. No. DS/TH/SS/NGO/00121

## Certificate of
## Human Rights Organization

This is to certify that Mr./~~Ms.~~ PERAMPALAM GANEESALINGAM

Ref. No. HRO/COL/01/2589 residing at NO. 124, OLD MOOR STREET,

COLOMBO - 12 of COLOMBO District has been

appointed as CO - ORDINATOR by the Human

Rights Organization on 22nd APRIL 2014

This is with warm regards, from the Human Rights Organization, in appreciation of your abidance to the rules and regulations of the Human Rights Organization and your commitment to stand for public welfare during your service period from today.

**Rev. Sivasri Bala Ravishankara Sivachariyar JP**
Co-ordinator to His Excellency The President
of Sri Lanka ( Religious Affairs )
**Chief Patron Hindu Religious Affairs - HRO**

**Ven. Pussellawe Somavisuddhi Thero JP**
B.A. Hons, M. A.
Amarapura Kalyanawansha Mahanikaye
Kandy Provice Deputy Chief Sanganayaka
**Chief Patron Buddhist Religious Affairs - HRO**

**Rev. Sarath Hettiarachchi JP**
B.A. (Sri Lanka), B.Th. (Seram), M.Sc. Sociology (Sri Lanka)
Co-ordinator to His Excellency The President
of Sri Lanka ( Religious Affairs )
**Chief Patron Christian Religious Affairs - HRO**

**Desha Bandu, Desha Keerthi, Lanka Puthra**
Al-Haj Moulavi Al Hafil M.L.M. Lameer (Al-Hasimi)
Director of Ihsaniyyah Arabic College
**Chief Patron Muslim Religious Affairs - HRO**

**Sri Lanka Janaranjana Samaja Sewa Shiromany**
Dr. Al-Haj M. N. M. Azeem JP
Diploma in Law
Chief Executive Director General - HRO


**Desha Bandu, Desha Manya**
S. H. Mohamed Ameer L.L.B. Colombo
Attorney at Law, Notary Public,
Commissioner of Oaths, Company Secretary
Director Human Rights - HRO

**No .10, Mosque Lane, Galle Road, Colombo 3, Sri Lanka.**
**Phone: 011 7901857, 7901858, 5678485 Fax: 011 2334407**
**Email: www.info@humanrightsorg.lk, hrolanka@gmail.com**
**Web: www.humanrightsorg.lk**

# நினைவலைகள்







E.S.P & Company நிறுவனத்தில் திரு கணேசலிங்கம் அவர்கள்



E.S.P & Company நிறுவனத்தின் திறப்பு விழாவின் போது மனைவி மற்றும் மகனுடன்

## சமாதான நீதவானாக பதவியேற்கும் போது






## கௌரவ அதிதியாக கலந்து சிறப்பித்திருந்த போது





திரு. மனோகணேசன் அவர்களை பொன்னாடை போர்த்து கௌரவிக்கும் போது






திரு வேலணை வேணியன் மற்றும், திரு மனோகணேசன் அவர்களுடன்





## Stanley Road, Dialog நிறுவன திறப்பு விழாவின் போது






MACSON
MESH


WITH



திரு கணேசலிங்கம் அவர்கள் பாசமிகு தாயாருடன்




திரு கணேசலிங்கம் அவர்கள் குடும்பத்தாருடன்



E. S. பேரம்பலம் கணேசலிங்கம் அவர்களின் இளமைத் தோற்றம்



பாசமிகு அண்ணனுடன் கணேசலிங்கம் அவர்கள்



பாசமிகு அக்காவுடன்




தனது 50வது பிறந்த நாளைக் கொண்டாடிய போது





50வது பிறந்த தின நிகழ்வில் மனைவியுடன்



' ரத்ன தீபா ' விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட போது





தாயார், மனனவி, பிள்ளைகள் மற்றும் மாமனாருடன் நிறுவன திறப்பு விழாவின் போது

# அஞ்சலிகள்





# "நினைவெல்லாம் நிறைந்திருந்து நிழலாய் மறைந்துவிட்டாய்

குலவிளக்காய் இருந்து - எம்
குலப் பெருமை விளங்க வைத்தாய்
நினைவெல்லாம் நிறைந்திருந்து
நிழலாய் மறைந்து விட்டாய்
நெஞ்சம் நிறைந்தவரே!
நேற்று வரை நீர் இருந்து
ஆற்றி வந்த பணிகளெல்லாம்
நிறைவேற்றிடும் வகைஅறியேன்
முத்தாக மூவரைச்
சொத்தாகப் பெற்றாயே
பிள்ளைகள் பெரிதாகி
பேர் விளங்க முன்னே
சொல்லாமல் கொள்ளாமல்
சோதியிலே கலந்தீரே
துணையாக வருவீரென்று
துணிவாக இருந்தேன்.
தூர தேசம் சென்று விட்டீரே
துயரம் தாங்க முடியவில்லை
ஈவிரக்கமற்ற காலனவன்
பாவி உன்னைப் பாதி வழியில்
காவிச் சென்றானோ? அப்பாவிநான்
பரிதவிக்கின்றேன் பாரினிலே
தேடி வைத்த செல்வம்
மாடி மனை இருந்தும்
கோடி புகழ் வந்தும்
வாடி மனம் ஏங்குதய்யா
ஆடிடும் தில்லைக்கூத்தன் பாதம்
நாடி உன் ஆத்மா சாந்தி பெற
வாரிவளவு கற்பக விநாயகன்
தாள் பணிந்து நிற்கின்றேன்

மனைவி

**சுமதி**

# அப்பாவுக்காக என்றும் அப்பாவுடன் நான்

**அ**ப்பா எனும் வார்த்தை சுமந்து வந்த அர்த்தத்தை உணர்ந்த கோடானு கோடி மகள்களுள் நானும் ஒருத்தி. நம்மில் பலருக்கும் நம் அப்பாக்கள் கடவுள் கொடுத்த வரமாயிருக்கலாம். ஆனால், என் அப்பா கடவுளாலும் அப்பாவாக பெறமுடியாத உன்னதமான ஒரு உறவு. கடவுளுக்கு அப்படி ஒரு உறவில்லை என்ற காரணத்தால் அப்பாவை தனக்கு உறவாக்கினாரோ என மனதளவில் எண்ணவும் தோன்றுகிறது. கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கு முன் எத்தனை பாசத்துடனும் கண்ணீருடனும் என்னை அள்ளி அணைத்துத் கொண்டாரோ அதே அளவு அன்பும் பாசமும் எள்ளளவும் குறையாமல் இன்றுவரை தொடர்ந்ததை நினைக்கும்போதெல்லாம் என் மனம் கண்ணீர் சிந்துகிறது. உண்மையில் கூறப்போனால் அப்பா எனும் திரைப்படத்தை இயக்குவது வேறுயாருமல்ல. அவர்களின் மகள்கள் எனும் இயக்குனர்கள் தான்.

"எப்போது ஒரு தந்தையின் மனது உண்மையிலேயே சந்தோசமடையும் என்றால் தன் பிள்ளையின் பெருமையை பறை சாற்றும் போது தான். அப்பேற்பட்ட சந்தோசத்தை நீ எனக்கு பலமுறை அளித்திருக்கிறாய்" என நீங்கள் கூறும் போது நீங்கள் எனக்கு அப்பா என்பதையும் தாண்டி நான் உங்களுக்கு ஒரு தாயாக சாதித்திருக்கிறேன் என்றே என் மனம் எண்ணத்தோன்கிறது.

வெற்றிலைச்செடி படர்வதை பார்த்திருக்கிறீர்களா? அது படரத் தொடங்கும் போது கொழுகொம்பு ஏதும் இன்றி அவதிப்படும் மாற்றாக கொழுகொம்பொன்று கிடைத்துவிட்டால் தொடர்ந்து படர்ந்து செல்லும். என் வாழ்க்கையில் இதுவரை காலமும் எனது கொழுகொம்பாய் இருந்த என் அப்பாவை விதியின் வசமோ? சதியின் வசமோ? யார் பிரித்தாலும் கொழுகொம்பு இல்லாமலும் வாழத் தெரிந்த வீரமுள்ள பெண்பிள்ளையாக வளர்த்து எடுத்திருந்தார். என் அப்பா.

எந்தவொரு அப்பாவும் தன் மகள் கேட்பதை முடியாது என்று சொல்லி விடக்கூடாது என அமையும் வாழ்க்கையை தான் பெற விரும்புகிறார்கள். எல்லாவற்றிற்கும் அப்பால் என் அப்பா உணர்ச்சிகளின் புகலிடமென ஓரிரு வார்த்தைகளில் கூறிவிடலாம் அவரைச் சூழ எதிர் பார்ப்புக்களும், நிர்ப்பந்தங்களும் அவரைக் கட்டிப் போட்டிருந்தன. உறவுகளாலும் தொழில்துறையாலும் பல காயங்களைப் பெற்றே அவர் பண்பட்டிருந்தார். அந்த காயங்கள் அவரை ஒரு முழு நேர சிந்தனையாளராகவே மாற்றி விட்டிருந்தது.

கஷ்டங்களையும், வலிகளையும் மறந்து அப்பா அனைவருடனும் நட்புடனும், நேசத்துடன் பழகுவதைப் பார்க்கும் போது சில வேளைகளில் எனக்கு பொறாமையாக இருந்ததுண்டு. என்னைப் பொறுத்தவரை காயத்தை உண்டாக்கியவர்கள் தான் காயத்தை சரி செய்யவேண்டும். அவர்கள் தவறை உணரும் வரை அவர்களுடன் சகஜமாக பழக என் மனம் எப்போதும் மறுத்திருக்கிறது. நானும் பூரணமாக நற் பண்புகளைக் கொண்டிராத போதும் கூட. சில உயர்ந்த மனிதர்களைப் போல், எவ்வளவு செல்வத்தை கொடுத்தாலும் எல்லோரையும் பிரம்மன் அப்படி படைப்பதில்லை போலும்.

நான் இப்போது எழுதுவதும் கூறுவதும் சிலருக்கு அறிவுரையாக, சிலருக்கு நகைச்சுவையாக, சிலருக்கு அநாவசியமாக, இன்னும் பலருக்கு காயப்படுத்துவதாய் கூட அமையலாம். ஆனால்,என் அப்பாவின் மனதுக்குள் இத்தனை காலமும் பூட்டிக் கிடந்த உணர்ச்சிகள் வெளிப்பட இது ஓர் சந்தர்ப்பமாயமையட்டும்.

உண்மையில் அப்பா! உங்கள் அன்பை தோற்கடிக்கும் மற்றொரு அன்பை உலகில் யாரும் தரப்போவதில்லை. உங்களைத் தவிர, அது என்றும் உங்களுக்குரியது எனக்கு மட்டுமானது.

“எத்தனை கோடி கோடியாய் பணமிருந்த போதும் என் உணர்வுகளைப் பகிர கிடைத்த ஒரே சொந்தம் நீ” என அப்பா கூறும் போதெல்லாம் பெருமிதமாக இருந்தாலும் அந்த வெறுமை அவர் ஆழ்மனதில் ஏற்படுத்தியிருந்த வலியை என்றுமே நான் உணரத் தவறியதில்லை. அவர் உதடுகளில் தெரிந்த போலியான சிரிப்புகளுக்கு மத்தியில் தாண்டவமாடிய சோகம் என்னைப் பல தடவை நிலைகுலைய செய்திருக்கிறது.

அப்பா! உங்கள் விரல் பிடித்து நடந்த இடங்களிலெல்லாம் நீங்கள் கொட்டி வைத்த பாசம், நீங்கள் மறைந்த பின்னும் உங்கள் நினைவுகளை மீண்டும் என்னிடம் சேர்க்கின்றன. அவருடைய கடைசி காலம் வரை ஒரு மழலையாகவே என்னுடன் வாழ்ந்தார். போலி அன்பு காட்டும் கோடி உறவு வேண்டாம், உரிமையோடு சண்டை போட்டாலும் உண்மை உறவு ஒன்று மட்டும் போதும் எனக்கு, என் அப்பா.

கருவறையிலிருந்து இறங்கி கல்லறை நோக்கி நடந்து செல்லும் தூரம் தான் நம் வாழ்க்கை. இந்த சிறிய இடைவேளை தான் நம் ஜனனத்தையும் மரணத்தையும் தீர்மானிக்கிறது. “விதை கீழ் நோக்கி எறியப்பட்டால் தான் விருட்சம் மேல் நோக்கி வளரும். விழும் போது விதையென வீழ்ந்து எழும் போது விருட்சமாய் எழு” நீங்கள் கூறியவார்த்தைகள் இன்னும் ஒலிக்கிறது என் காதில். அழகான அன்பால் மட்டும் தான் ஆழமான காயத்தைத் தரமுடியும். உங்களின் வெறுமை தந்த காயம் புழுவென ஊடுருவி ஆழ்மனதை கொஞ்சம் கொஞ்சமாக அரித்துத் தின்று கொண்டிருக்கிறது.

உண்மையில் என் அப்பாவின் அன்பை புறக்கணித்த ஒவ்வொருவரும் அவர்கள் அறியாமல் ஒரு அழகான வாழ்க்கையைத் தொலைத்துவிட்டனர். என் அப்பாவின் வழிகாட்டலின் கீழ் நான் வாழ்ந்த வாழ்க்கை என்னை நிச்சயம் பண்படுத்தியிருந்தது. இன்னும் பலரையும் கூட. உதாரணமாக ஒரு ஆலமரத்தையும், வாழை மரத்தையும் எடுத்துக் கொள்வோம். இரண்டு சமனான அளவு, பயன்களைக் குறிப்பாகவாழைமரம் அதிகமாகவே பயன்களைத் தந்தாலும் நின்று நிலைக்கும் புகழுடன் மடியப்போவது ஆலமரமே. இந்த ஆலமரம் வாழும் வாழ்க்கையும், மடிந்தபின் வாழும் வாழ்க்கையும் என் அப்பாவுடனும் நன்றாகவே ஒத்துப்போகின்றது. உண்மையில் என் அப்பாவுக்கு நிகரானவர் அவர் மட்டுமேயன்றி கடவுள் கூட இல்லை.

"அன்பான அப்பா கிடைத்த எல்லாமகள்களுமே தேவதைகள் தான்". என் அப்பாவுடன் வாழத் தேவையில்லை. ஒருகணம் உரையாடினாலே பலமுறை என் மனபாரம் குறைந்ததாக உணர்ந்திருக்கின்றேன். என்னைவிட இறப்புதான் அவரை அதிகமாக நேசித்ததோ.என்னவோ? இறப்புக்கும் எனக்கும் நடுவில் ஊசலாடும் பொம்மையாய் அமைந்துவிட்டது என் அப்பாவின் உயிர்.

தந்தையின் தாய்மையை மகள்களால் மட்டுமே உணரமுடியும் என்று சற்று கர்வமாகவே என் மனம் கூறுகிறது. அம்மா கொஞ்சம் கண்டிப்பானவர். அவர் எத்தனையோ முறை திட்டினாலும் வலிக்காத மனது அப்பா முகம் ஒரு தடவை வாடும் போதே மரண வலியை உணர்ந்திருக்கிறது. வாழ்க்கையின் ஏதாவது சில தருணங்கள் எமக்கு உணர்த்துகின்றன. நாம் தவறவிட்ட நேசங்களை. அவர் எங்களுடன் என் அம்மாவையும் ஒரு குழந்தையாகவே கருதி தன் நெஞ்சில் சுமந்தார்.

இதுவரை என் வாழ்வில் எத்தனையோ சம்பவங்கள் மகிழ்ச்சியை, உள்ளப்பூரிப்பை ஏற்படுத்தியிருந்தன. நீங்கள் எனக்கு அப்பாவாகக் கிடைத்தது ஏற்படுத்தியிருந்த சந்தோசத்தை அவை எதுவும் விஞ்சவில்லை. பறவைகள், அவை எவ்வளவு லாவகமாக வானில் சிறகடித்து பறக்கின்றன. அவை விழுந்துவிடுமோ என்ற பயம் அவற்றுக்கு ஒருபோதும் ஏற்பட்டதில்லை. 'சுகமானவாழ்வு' எனக்கூறிவிட்டு அவர் மனதுக்குள் அவ் வாழ்க்கைக்காக ஏங்குவதை பல தடவை நான் உணர்ந்திருக்கிறேன்.

சிந்தனைக் குருவி சிறகடித்து பறந்து வந்து என் அப்பாவின் ஆழ்மனதில் குடிகொண்டதோ என்னவோ இடைவிடாத சிந்தனைகளின் உறைவிடமாக அவர் திகழ்ந்தார். அவர் எடுக்கும் முடிவுகள் யாவும் ஒரு தரத்திலிருக்கும். பலருடைய கருத்துக்களையும் கேட்டுமுடிவுகளை சாதுர்யமாக எடுக்கும் பல தருணங்களில் அவை என்னை வியக்க வைத்திருக்கின்றன.ரசிக்கவும் வைத்திருக்கின்றன. சோதனைகள், துயரங்கள் என்பவற்றை எல்லாம் எதிர்கொண்டு வர்த்தக உலகில் ஒரு ஜாம்பவானாக வாழ்ந்து விட்டுச் சென்றிருந்தார்.

என் அப்பா எனக்களித்த பாசம் பசுவிலிருந்து புதிதாக கறந்து எடுத்த பாலிலும் தூயது. அதில் எள்ளளவும் களங்கமும் இருந்தது இல்லை. அவருடன் எனது இருபது வருட வாழ்க்கை ஏறத்தாழ என் வாழ்நாள் முழுவதும் வாழ வேண்டிய பக்குவத்தை அளித்துவிட்டது. ஒருமகளாக, என்னை நினைத்து எப்போதுமே கவலைப்பட்டு விடக்கூடாது என்ற வாழ்க்கையைத் தான் நான் அவருக்கு அளிக்க விரும்பினேன். இந்த விடயத்தில் அவர் என்னை முந்தி கொண்டார். துளியளவும் அவர் எனக்கு பாரமாய் இருந்ததில்லை, அவர் நோய்வாய்ப்பட்ட சமயங்களில் கூட.

புகழ்ச்சிகள் சூடுவதில்லை, அவை சூட்டப்படுகின்றன. கோடிக்குவியலாக பணமிருந்தாலும் உண்மையான புகழ்ச்சி அதற்கப்பாற்பட்டது. என் அப்பா என்றுமே புகழ்ச்சிகளுக்காகவும், மகுடங்களுக்காகவும் வாழ்ந்தது இல்லை என்பதை நன்கறிவேன். இயல்பான நடை,உடை,பேச்சு இவை அனைத்திலுமே பிறரை கவரும் தன்மையானவர். பெண்பிள்ளைகளைப் பொறுத்தவரை அவர்களின் அப்பா தான் அவர்களுக்கு முதல் நாயகன். நானும் அதற்கு விலக்கல்ல. ஒரு சாதாரண

பெண் உலகம் போற்றுபவளாக மிளர்வாளாயின் இதற்கு அவள் தந்தையின் தாய்மையை தவிர வேறொன்றும் உரிமைகோர முடியாது. என் வாழ்க்கையிலும் ஒவ்வொரு தடவை தடக்கிவிழும் போதும் என் கரம் பற்றி துக்கியவர் இன்று காற்றிலே கலந்தாலும் இன்னும் பார்க்கிறார் என்னை மழலையாகவே.

மனதில் ஒரு குறை மட்டுமிருக்கிறது. என் அப்பா செல்லும் இடமெல்லாம் வழி அனுப்பிய நான் அவர் தொலைதூரம் சென்ற போது வழியனுப்ப முடியாதவளாகிவிட்டேன். அவருடன் நெருங்கி பழகியிராத நெஞ்சங்கள் அவருடன் துணை நின்ற போதும் கூட, நிச்சயமாக அவர் என்னுடன் பேசுவதற்கு பிரயாசைப்பட்டிருப்பார். என்னைத் தவிர எந்தவொரு சிந்தனையும் அவர் மனதில் ஓடியதில்லை.

எழுதும் போது கூட நெஞ்சம் கனக்கின்றது. போலியான சந்தோசம் வெளிப்பட்டாலும் கூட ஆழ்மனதில் ஏதோ ஒரு அவலம் குடிகொண்டு இருக்கிறது. மிகவும் நல்லவர்களாக இருந்ததாலோ என்னவோ அவர் அதிககாலம் எங்களுடன் நிலைத்திருக்கவில்லை. இருந்தபோதும் அவர் என்னுள் எனக்காக எப்போதும் வாழ்கிறார். என் நெஞ்சம் எத்தனை முறை வலித்தாலும்,கண்கள் எத்தனை தடவை கடலானாலும் உடனிருந்து நிச்சயம் தேற்றுவார்.

அடுத்த ஜென்மத்தில் நீங்கள் என் மகனாக பிறந்தாலும் கூட உங்கள் மடியில் மழலையாகிடவே என் நெஞ்சம் துடிக்கிறது. பிரிவுக் கவலை சாதாரணமானதல்ல. அது நிரந்தரமானது,ஆழமானது. அதை மறக்க முயலும் தருணங்கள் நம்மை நிலைகுலைத்து விடும் ஒருகணம். பலமுறை உங்கள் பிரிவை மறக்க முயன்று தோல்வியுற்றிருக்கிறேன்.

நீங்கள் விட்டு சென்ற நினைவலைகளுடன் மட்டும் வாழ்கிறேன். உங்கள் வெறுமை என்னை வாட்டுகிறது. நீங்கள் செல்லும் இடம் எங்கும் பயன்களை விதைப்பீர்கள். அந்த விதைகள் இனிவரும் காலம் விருட்சமாகும்.

*"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து*
*வேண்டும் பனுவல் துணிவு"*

உங்கள் ஆத்மா என்றும் நான் வணங்கும் நடராஜப்பெருமானின் பாதக்கமலங்களை அடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

என்றும் உங்கள் மூத்த மகள்,
**அபிராமி கணேசலிங்கம்**

# உன் சுவாசக்காற்றைத் தேடி அலைகின்றோம்

ஒளிதந்த சுடர் விளக்கை
புயல் கொண்டு போன தென்ன
வழிகாட்டும் கலங்கரை மேல்
இடியொன்று வீழந்த தென்ன

இன்முகமும் மென்பேச்சும்
இனிய நடைமுறைகளுமாய்
எம் வாழ்வில் உயர்வுக்காய்
ஏற்றமுற உழைத்தவரே

பாசமுள்ள பிள்ளைகள் நாம்
பார் போற்ற வாழ்கவென
சீர்தேடிச் சிறப்புடனே
ஊர் மெச்ச வாழ்ந்தவரே

கொடியவிதி இவ்விதமும்
கொள்ளையிட நேர்வதுண்டோ
விடியுமென இருப்பவரை
இருள் விழுங்கக் காண்பதுண்டோ

எந்த நினைப்பெல்லாம்
ஏந்தி நீ சென்றாயோ
எம் உயர்வு கருதி இனி
ஏது செய்ய நினைத்தாயோ

எண்ணியதும் சொல்லாமல்
எவர் முகமும் பாராமல்
கண் இமைக்கும் பொழுதுக்குள்
காலன் உனைக் கவர்ந்ததேனோ?

பிள்ளைகள் நாம் பேதைகளாய்
புலம்புகின்றோம் அரற்றுகிறோம்
கொள்ளையிடும் சாவுக்கோர்
எல்லையிட முடியாதா

ஆளுக்கொரு தேதிவைத்து
ஆண்டவன் அழைப்பான்
வாழும் வயதில் உன்னை
ஏன் அழைத்தான்

தந்தை முகம் இனிநாம் காண
முடியாதாசொல் அப்பா
சேய்கள் மூவர் இங்கே
தேம்பி அழுகின்றோம்

பாசக் கயிற்றை வீசிஉன்னைக்
காலன் கவர்ந்து சென்றானோ
வீசும் காற்றில் கலந்திருக்கும் - உன்
சுவாசக் காற்றைத் தேடிஅலைகின்றோம்

கோயில் கோயில் என்றுதிரிந்தாய்
தீயில் உன் உடல் கருக ஏன் வைத்தான்
அன்னையுடன் நாமும் தினம் தினம்
உன்னை நினைந்து உருகுகின்றோம்

**அபிராமி, செந்தூரன், வைசஷிகா**

# THE ONLY SOUL WHO BREATHED FOR ME...

Fifteen years, four months and twenty - three days the shortest admiration towards my father. But, in this shortest period, I have admired many things from my father.For these 52 years my father was on earth, looking forward for a son. After my birth, my second cry was "appa" , "appa". From that moment, I started my life with my lovely father.

I was the only son among my two sisters, so he was affectionate towards me. Each and every second he shows the fulfilled love hidden in his heart towards me.

Years moved very fast and my maturity level increased. I started to realize my father, admired him and loved him too. He was a strong, gentle and calm person. He always walk like a boss.

Once I turned 14, in September 2015, I started to think every moment of my father's life. I was shocked to hear that at an age of 52 my father had a liver disease. Unfortunately we had been told that he had to go under a liver transplant. It took more than a year, I left my school, I wanted to save my father's life, went around all the hospitals but finally our journey was ended at Global Hospital, Chennai, in India on 23rd of January 2017.

Few Days back.....

It was three days before he passed away, two to three words he expressed to me and my mother. We saw his eyes with shock, fear and frightness . At a glance when I looked what was around me, my heart thundered. The last few words I heard from my dad was, "Be careful and study well". He knew that something is going to happen to him.

The next day I was unable to see him. That day he was in a critical condition. The God was preparing to pull my father up. Minutes went faster and faster. As my "perriyappa" arrived, my mobile rang loudly. I couldn't figure out the number out. I answered the phone, "hello", it said, "Your father passed away". I droped the phone, my mouth was shut, I ran up the stairs with bleeding drops of tears to see what has happened to him. He lied there with no breath. The final gift I got was my father's death, I screamed and shouted, but I never get my father back. It's the end of my life I decided.

Now there is no one to show the equal love like my father, the kindness and affection... Dad I love you so much.

May your soul rest in peace!!! Always my thoughts are with you.

Your loving son,

**Chenthu,** (CIS)

# THE GREATEST GIFT I EVER HAD !

*I may find my prince*
*but my dad will always be my king*

*I´ve had a hard life , but my hardships*
*are nothing against the hardships that*
*my father went through in order to get*
*me to where i started.*

*A father is a man who expects his*
*son to be as a good man as he meant to be*

*I´m as lucky as can be for the*
*world´s best dad belongs to me ·*

*To my father ,*
*Separated by death*

*My father gave me the greatest gift*
*anyone could give another person he*
*believed in me.*
*DAD - A son´s first hero*
*A daughter´s first love*

*My father didn't tell me how to live,*
*he lived and let me watch him do it*
*Any man can be a father but it takes*
*someone special to be a Dad*

*He told me that i was uncommonly*
*beautiful and that i was the most precious*
*thing in his life.*

Yours loving son
**Chenthuran**

# அப்பாவுக்கு என் கடைசி மடல்

அன்புள்ள அப்பாவுக்கு!

நான் இங்கு நலம். தங்கள் நலமறிய ஆவலாயிருக்கிறேன். கடிதம் எழுதுவதற்கு பேனாவுக்குப் பதிலாக கண்ணீரெனும் தூரிகை கொண்டு ஏதோ கிறுக்குகின்றேன். நீங்கள் என் மேல் ஏன் அப்பா அளவு கடந்த பாசத்தைக் கொட்டி வளர்த்தீர்கள்? தாங்க முடியவில்லை அப்பா காலனின் தூதர்கள் உங்களை ஏதோ கண் காணாத தொலைவிற்கு கொண்டுசென்று விட்டார்களாம். திக்குத் தெரியாத காட்டில் தனித்து நிற்பது போன்ற உணர்வு. இறைவன் உங்களுக்குப் பதவி உயர்வு கொடுத்ததாலோ என்னவோ கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வெகுநாட்களாக உங்களைக் காணவில்லை.

பாசமுடன் செல்லச்செல்ல சண்டைகள் நாம் பிடித்தாலும் உள்ளூர இருக்கும் அப்பா மகள் எனும் உறவு இவற்றை எல்லாம் விஞ்சி மேலோங்கி நிற்கும். அங்கு உங்களுக்கு எல்லா வசதிகளும் இருக்கின்றதா அப்பா? இறைவன் உங்களை எப்படிப் பார்த்துக் கொள்கின்றார். நிச்சயமாக என்னை விடச் சிறப்பாக உங்களை யாரும் கவனித்துக் கொள்ள முடியாது. இல்லையா அப்பா? பரவாயில்லை நீங்கள் சந்தோசமாய் இருப்பீர்கள் என நம்புகின்றேன்.

உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா அப்பா? நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தபோதெல்லாம் நான் தான் உங்களுக்கு மருந்துகளை எடுத்து தருவேன். நீங்கள் என்னை "பென்சன் பேபி" என கூறிவிட்டு சிரிப்பீர்கள். நானும் கோபம் கொண்டு உங்கள் மேல் கத்துவேன் அப்போதெல்லாம் என்னை அள்ளி அரவணைத்து முத்தம் கொடுப்பீர்களே. அப்போது என் மனம் வானத்தில் சிறகடித்துப் பறப்பது போல் இருக்கும் .

காலன் கூப்பிட்டவுடன் என்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் கிளம்பி விட்டீர்கள். நான் அப்படி என்ன குளப்படி செய்தேன். என்னை வாழ்நாள் முழுவதும் தண்டிக்க என்னுடைய பன்னிரண்டு வருட வாழ்க்கையை மீட்டிப்பார்க்கிறேன். நீங்கள் என்னுடன் இருந்த ஒவ்வொரு தருணங்களுடன் மாற்றங்கள் தொடர்ந்து மாறாது அரங்கேருகின்றன. நீங்கள் என் மீது கொண்ட அளவுகடந்த பாசம் வற்றாத ஊற்றாக ஊறிக்கொண்டே இருக்கிறது. கடக்கும் ஒவ்வொரு நொடியும் யுகமாகக் கசக்கிறது எனக்கு. சொர்க்கம் சென்ற திமிரில் எங்களை மறந்துவிடாதீர்கள். அடிக்கடி அழைப்பு ஏற்படுத்துங்கள். எங்கிருந்தாலும் ஓடிவந்து உங்கள் மகள் கதைப்பாள்.

உங்களுடைய மகள் எனக் கூறும் போதெல்லாம் மனதுக்கள் பெருமையாக இருக்கும். நிச்சயமாகப் புண்ணியம் பல செய்து தான் உங்களுடைய மகளாகப் பிறந்து இருப்பேன். உங்கள் ஆசைகளும் இலட்சியங்களும் எங்களால் நிச்சியம் நிறைவேற்றி வைக்கப்படும். நிச்சயமாக அப்பா உங்களைப் படைத்த பிரம்மனே உங்களை நினைத்துப் பல தருணங்கள் பெருமை அடைந்திருப்பான். அடுத்தமுறை பூமிக்கு வரும் போது எனக்குப் பிடித்த ஏதாவது வாங்கி வாருங்கள். உங்கள் வருகைக்காக நிச்சயம் காத்திருப்பேன். ஏமாற்றிவிடாதீர்கள் என்னைப் பற்றி எந்தக் கவலையும் உங்களுக்கு வேண்டாம்.

இன்னும் எழுத வார்த்தைகள் வருகின்றன. ஆனால் மனது மறுக்கிறது. இம் மடலை இத்துடன் நிறைவு செய்கின்றேன். உங்கள் பதில் கடிதத்திற்காய் காத்திருப்பேன்.

நன்றி

என்றும் உங்கள் பிரியமுள்ள கடைக்குட்டி

**வைசிகா**

# அண்ணாவின் இதயத்திலிருந்து.....

எனது ஆருயிர்த் தம்பி கணேசு அமரத்துவமடைந்துவிட்டான் என்பதையே என்னால் நம்பமுடியவில்லை. எனது இளமைக்காலத்தை எண்ணிப்பார்க்கிறேன். எனக்கு எட்டு வயது இருக்கும் செல்லமாகத் தூக்கி விளையாடுவதற்கு ஓரே தம்பி கணேசு பிறந்தான். நான் பாடசாலை விட்டதும் ஓடிச்சென்று அவனைத்தூ க்கி விளையாடிய பின்பு தான் மதிய உணவு உண்ட இளமைக்கால இனிய உணர்வுகளை எண்ணிப்பார்க்கிறேன்.

1965 ஆம் ஆண்டு தந்தையாரின் தொழில் நிறுவனத்துக்கு வந்து யாழ்ப்பாணம் சன்மார்க்க வித்தியாலயத்தில் 7ஆம் வகுப்பு வரை கல்வி கற்று அப்பாவுடன் தொழில் பழகி 12 வயதில் தொழிலை ஆரம்பித்தேன். யாழ்ப்பாணத்தில் அப்பாவுடன் தொழிலுக்கு வந்தபோதிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் தம்பியுடன் விளையாடிய இனிய நினைவுகளை எண்ணி கண்ணீர் சொரிகிறேன்.

தம்பியை யாழ் இந்துக்கல்லூரியில் சேர்த்து படிக்க வைத்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் மிக சந்தோசமாக அம்மாவின் பணிவிடைகளை தம்பிக்கு செய்து பாடசாலைக்கு அனுப்பி வைத்த காலத்தை நினைத்து உருகி நிற்கின்றேன்.

பாடசாலைக்கல்வியை நிறைவேற்றி என்னுடன் நீண்டகாலமாக தொழில் புரிந்து நிறுவன வளர்ச்சிக்காக 1985ம் ஆண்டு கொழும்பில் எனது பொறுப்பை ஒப்படைத்து சிவானந்தி அண்ணனுடன் கோபால் கடையில் தங்கவைத்து தொழில் செய்தார். அதன் பின் லுமாலா நிப்பிலார் ஹாஜியர் தனது கட்டிடத்தில் ஓர் பகுதியை கொடுத்து தங்க வைத்து தொழில் மேம்பாட்டுக்காக பொருட்களை கொள்வனவு செய்து எனக்கு அனுப்பினார்.

1992 மார்கழி எமது நிறுவனத்திற்காக 124 பழைய சோனகத்தெரு, கொழும்பில் ஒரு இடம் கொள்முதல் செய்யப்பட்டு வெளிநாட்டிலிருந்து பொருட்களை தருவித்து யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தார்.

1993ஆம் ஆண்டு அப்பா இறைபதம் அடைந்த பின் இருவரும் ஒற்றுமையாக 50 ஆம் இலக்க கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள E.S பேரம்பலம் நிறுவனத்தில் இருவரும் வியாபாரத்தை வளர்த்து யாழ் மக்களுக்கு பெரும் சேவையாற்றி வந்தோம்.

கட்டடப் பொருட்கள் வியாபாரம் ஆரம்பிப்பதற்காக 139,141,145,147,149 இலக்க ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள ஆறு கடைகளை கொள்வனவு செய்து ஆளுக்கு

மூன்று கடைகளைப் பிரித்துக் கொண்டோம். மூன்று கடைகளையும் அவர் வாடகைக்கு கொடுத்திருந்தார்.

1996 ஆம் ஆண்டு வாழ்க்கைப் பந்தத்தில் இணைந்து கொண்ட அவர் அண்ணனுடன் தொழில் மிக சிறப்பாக நடைபெற A9 அடைபட்ட பின்னர் கப்பலில் யாழ் மக்களுக்கு தேவையான பொருட்கள் ஏற்றி சேவையாற்றினார். இக் காலப்பகுதியில் எரிபொருள் இன்மையால் சைக்கிள் மட்டும் அத்தியாவசிய பொருளாக இருந்த நேரம் அரும்பெரும் சேவையாக சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் போன்றவற்றை மக்களுக்கு வழங்கிய காலம் மிக உன்னதமானது.

2003 மார்கழி மாதத்திலிருந்து அவர் எம்மை விட்டு தனியாக தொழில் செய்வதாகவும் எனது நிறுவனத்திற்கு தேவையானவற்றை நாமே கொள்முதல் செய்யும்படியும் அறிவுறுத்தினார்.

2012 ஆம் ஆண்டு அம்மா நோய்வாய்ப்பட்டு கொழும்பு சென்று வைத்தியம் செய்து இறைவனடி சேர்ந்தார். பின்னர் அவர் விருப்பப்படி கொழும்பில் அவரது வீட்டில் அம்மாவின் இறுதிக் கிரிகைகள் நடைபெற்றது.

தம்பிக்கு இரண்டு பெண் பிள்ளைகளும், ஒரு ஆண் பிள்ளையுமாக இனிதே வாழ்ந்து வந்தார். மூத்தபிள்ளை கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் கற்று வருகிறார். இரண்டாவது பெண்பிள்ளை (Holy Family Convent) மகன் சர்வதேச ஆங்கில பாடசாலையிலும் (Colombo International School) கல்வி கற்று வருகின்றனர்.

2004 ஆம் ஆண்டு வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக தனது பொறுப்பில் நிறைவேற்றினார்.

2016 ஆம் ஆண்டு மறக்க முடியாத நிகழ்வுகளாக வாரிவளவு பிள்ளையார் மகா கும்பாபிஷேகத்தில் கலந்து என்னுடன் ஒத்துழைத்து மிக சிறப்பாக செய்து முடித்தோம். எனக்கு கல்விச் சமூகத்தினரால் எடுக்கப்பட்ட மணிவிழாவில் குடும்பமாக கலந்து சிறப்பித்ததுடன் நாகரத்தின மாலையின் முதற்பிரதியை பெற்றுக்கொண்டதுடன் எனக்கு வழங்கப்பட்ட கௌரவங்களை கண்டு பெரும் மகிழ்ச்சியடைந்தார். அதன் பின் எனது மகன் கஜமுகனின் திருமண நிகழ்விலும், கமலநேசனின் பதிவுத் திருமண நிகழ்விலும் குடும்பமாக வந்து சிறப்பித்திருந்தார்.

பின் நோய்வாய்ப்பட்டு இந்தியாவில் இருந்த போதும் நான் ஓடோடிச் சென்று தம்பியை அழைத்த போதும் அவருடன் கதைக்க முடியவில்லை. தலையை மட்டும் ஆட்டி எனது வரவை அறிந்து எமக்காக காவல் இருந்தது போல் மூன்று மணித்தியாலத்தில் காலன் அவரை கவர்ந்தான்.

என் வளர்ச்சிக்காக வாழ்த்துக் கூறி பங்கேற்று உறுதுணையளிக்கும் தம்பியை இழந்து தவிக்கிறேன். தம்பியின் ஆத்மா சாந்தியடைய வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**Lion E.S.P நாகரத்தினம் PMJF**
கல்விக்காருண்யன், பொன்மனச்செம்மல், மனிதநேய ஈகையாளன்,
கல்விக்கதிரவன்,ஈகைக்காவலன், இறைபணிவேந்தர்,
சமூகமாமணி, சைவப்புரவலர்,ஈகையார் திலகம், தேசபுத்திரா,
சமூக திலகம் சமூகநலஜோதி,
கொடைக்கோ.

## விளக்கேற்றத் தகுந்த திரிவகைகள்

வாழைத்தண்டு நார்த்திரி, பருத்திப் பஞ்சுத்திரி, தாமரைத் தண்டுத் திரி, வெள்ளை எருக்கம் இலைப்பட்டைத் திரி, புதிய மஞ்சள் சேலைத்திரி மற்றும் சிவப்புச் சேலைத்திரி என்பன சிறந்தவை.

## விளக்கேற்றும் முகத்தின் பலன்

| | | |
|---|---|---|
| ஒரு முகம் | - | மத்திமமானது |
| இரு முகம் | - | குடும்ப ஒற்றுமை ஏற்படும் |
| மூன்று முகம் | - | புத்திரசுகம் ஏற்படும் |
| நான்கு முகம் | - | பசு, பூமி, செல்வம் பெருகும் |
| ஐந்து முகம் | - | சகல நலன்களும் கிடைக்கும். |

## பூஜைக்குகந்த விளக்குகள்

மண்ணால் செய்யப்பட்ட அகல், வெள்ளி அல்லது பஞ்சலோகத்தால் செய்யப்பட்ட விளக்குகள் பூஜைக்கு மிகவும் உகந்தன. ஐந்துமுக விளக்குகள் சாலச் சிறந்தது.

# மாமா என அழைத்த ஓர் உள்ளம்

அன்பு மருமகனே!

இன்னல் நேர்ந்த போதெல்லாம்
இனியன பல கூறி மகிழ்வித்து
நோயுற்ற பொழுதெல்லாம்
நோகாது எனைக்காத்து
பரிதவித்த தருணங்களில்
பற்றுடனே ஆறுதல் கூறி
ஊன் நலிந்த வேளைகளில்
உடனிருந்து எனைத் தேற்றி
பாசமுடனே பரிசளித்த மகளை
பாவையாய்ப் பேணிப் பாதுகாத்து
துன்பங்கள் எத்தனை நேரினும்
துவண்டு போகாது நிமிர்ந்து நின்று
மாமா மாமா என அன்புடனும்
மகிழ்வுடனும் என்னை உபசரித்து
நயவஞ்சகமில்லாத குணத்துடனே
தந்தையை போல பிரியமுடன் தந்து
பரந்த மனம் படைத்தவராய்
பார் முழுதும் போற்றுபவராய்
மரியாதையுடனும் பாசத்துடனும்
மனதும் உடலும் குறைபடாது
உறவினிலே நின்று
உலகுக்கு காட்டினோம்
பிறர் மனதைப் புண்படுத்தாத வண்ணம்
பிறப்பிலே நற்பேறு கண்டு
வந்துதித்தாய் தனயனை போல
வரங்கள் பலபெற்ற மகிழ்ச்சி எனக்கு.
கொண்டவாக்கு தவறமாட்டாய்.
கேட்டதெல்லாம் தந்தருள்வாய்.

கண்கள் சிந்துகின்றன எனக்கு.
கணப்பொழுதும் பிரிந்திராத உன்னை
காணவில்லை நெடுங்காலம்
காலனவன் பறித்து
விட்டான் உன் உயிரை
பரிதவித்து நிற்கின்றாள் என் மகள்
பாவி நான் என்ன செய்வேன்
அழாதே எனக் கூறி தேற்றுவதா?
மீழாத் துயரில் மூழ்கி விடுவதா?
ஈற்றிலே கொள்ளி
வைப்பாயென எண்ணி
ஈர் பத்து வருடங்கள் தவமிருந்தேன்
வேர் ஒடிந்து போனதென் உள்ளம்
வருவாயா மீண்டும் எனைக் காண
உள்ளங்களைக் கனக்க வைத்து
உற்சாகமாய் எங்கு சென்றாய்
மீள முடியவில்லை துயரிலிருந்து
மீண்டும் எண்ணுகிறேன் உன்
நினைவுகளை
முற்றாக மறக்க முயன்றாலும் - உன்
முழு உருவம் நிற்கிறது கண்முன்னால்
கவலைகளின்றி சென்று வா.
காலம் முடியும்வரை உன்
பிள்ளைகளை நான் காப்பேன்.
உன் ஆத்மா சாந்தியடைய
வாரிவளவான்
பாதம் தொழுது நிற்கின்றேன்.

என்றும் பாசமுள்ள மாமா

**வே.கதிரவேலு**

# நினைவலைகளில் இருந்து ......

*"நெருநல் உளனொருவன் இன்றில்லை*
*எனும் பெருமை உடைத்திவ்வுலகு."*

மனிதராய் பிறந்த எவர்க்கும் மரணம் என்பது நிச்சயம் என்றாலும் அது எம் உறவுகளிடையே வரும் போது தாங்க முடியாதாகிப் போகின்றது. அன்புடனும் பாசத்துடனும் என்னைக் காணும் சந்தர்ப்பங்களிலெல்லாம் "அண்ணன் நான் இருக்கிறேன் எதற்கும் கலங்கக் கூடாது " என எனக்கு ஆறுதல் கூறுகின்ற அன்பு அண்ணன் இன்று எம்மிடையே இல்லை என்பதனை ஏற்க முடியவில்லை. எனது கணவரால் மிகவும் மதிக்கப்பட்டு அத்தான் என அன்பு செலுத்தியவர். முருகண்டியில் அத்தான் தன்னை கட்டியணைத்து மகிழ்ந்ததை இறுதியாக நான் மருத்துவமனையில் பார்க்கும் போது கூட நினைவுபடுத்தினார். "என்ன வேண்டும் மாமா வாங்கி தருகிறேன்" என என் பிள்ளைகளை அன்போடு சிரித்த முகத்துடன் அரவணைத்தவர். அறுவை சிகிச்சை மட்டும் முடியட்டும் அதன்பிறகு தனக்கு பிரச்சனையில்லை தனது பிள்ளைகளின் படிப்பிற்கும் தடைவராது என நம்பியிருந்தவரை அறுவை சிகிச்சைக்கு குறித்திருந்த நாளிலேயே தெய்வங்கள் தனதாக்கி கொண்டதை தாங்க முடியவில்லை. எப்படியாவது காப்பாற்றி விடலாம் என்று நம்பி தெய்வங்களுக்கு பூ மாலையும் கண்ணீருமாக வேண்டுதல் செய்தபடி இருந்த உங்கள் அன்பு மனைவி, அப்பாவுக்கு ஒன்றுமே நடக்காது என்று இறுதிவரை நம்பியிருந்த அபி , அப்பாவை விட்டு நாங்கள் எப்படி இருப்போம் என்று துடித்த செந்தூரன், ஒரு நிமிடம் அப்பாவுடன் கதைக்க முடியாதா என ஏங்கியிருந்த வைஷி, ஒவ்வொரு ஆலயம் சென்று உங்கள் ஆயுளிற்கு பிரார்த்தித்த மாமா, நீங்கள் அத்தான் மட்டுமில்லை அப்பாவை போன்றவர் என அழுதபடியே இருந்த சுபாஷ், சுபோ, எப்படியாவது தம்பி யை பார்த்துவிடவேண்டும் என கண்ணீர் உடன் வந்த உங்கள் அண்ணா.... என எல்லோரையும் இடை நடுவில் விட்டு விட்டு நீங்கள் இவ்வுலகை விட்டு பிரிந்த அந்த வலி மிக்க கணங்களை மறக்க முடியவில்லை.

உங்கள் ஈடு செய்யமுடியா இழப்பால் துயருற்று தவிக்கும் உறவுகளுக்கு இழப்பை தாங்கும் வல்லமையுடன் மன அமைதியையும் கொடுக்க கடவுளை வேண்டுவதுடன் இறைவன் பாதத்தில் சரணடைந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி

நினைவுகளுடன்,
உடன் பிறவா சகோதரி,
**ஷைலா சுதாகரன்.**

# அன்புள்ள அத்தான்!

உண்மையினையும் நேர்மையினையும் நேசிக்கின்ற எவருக்கும் உங்களின் பிரிவு ஜீரணிக்க முடியாத, வலிகள் நிறைந்த ஒன்றாகும். இதற்க்கு நானும் விதிவிலக்கல்ல.

உறவால் நீங்கள் எனது அத்தானாக இருந்தபோதிலும், நல்ல ஒரு நண்பனை, சொந்த சகோதரனைப் பிரிந்து நிற்கும் வலியையும் வேதனையையும் நான் உணர்கின்றேன். பாசமெனும் கோட்டையினுள் எழுந்து, நிமிர்ந்து நின்று உரத்து கர்ச்சனை செய்த ஆண் சிங்கம் நீங்கள். புடித்தவர், பாமரர் என்றல்லாது, வசதிபடைத்தவர், ஏழையென்றல்லாது எல்லோருடனும் ஒன்றாகி, அன்பால் அரவணைத்து நின்றவர் நீங்கள். உங்களிடம் இருந்து நாம் கற்றுக் கொள்வுதற்கு இன்னும் ஏராளமாகவே கொட்டிக் கிடக்கின்றன.

தமிழ் மேலும், மேடைப் பேச்சுக்களிலும் நீங்கள் கொண்டிருந்த ஆர்வத்தினை நாமறிவோம். உங்களின் கைகளை ஒலி வாங்கியாகப் பாவனை செய்து எம்மிடம் பேட்டி எடுப்பதும் பின்னர் அதனை விமர்சனம் செய்துகொள்வதும் எங்கள் வீட்டில் தினந்தோறும் நடக்கும் சம்பவங்களல்லவா. சுற்றி இருப்பவர்களை உங்கள் அன்பால் அரவணைத்து நகைச்சுவை பல சிதறி அரங்கத்தையே அதிரவைப்பீர்கள் உங்கள் சிரிப்பொலிகளால். வியாபார உலகில் நீங்கள் கொடிகட்டிப் பறந்த போதிலும் எளிமையான வாழ்க்கை, இயல்பான நடை, உடை, பாவனை எல்லாம் தான் உங்களிடம் காணப்பட்ட தனித்துவங்கள். தூண்டலுக்கும் துலங்கலுக்குமான மிகச் சிறிய இடைவெளியில் கூட வியாபாரத்தின் நுணுக்கங்கள் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பீர்கள். பேரம் பேசுவதிலும் முடிவுகள் எடுப்பதிலும் உங்களுக்கு நிகர் நீங்களே தான். உங்களின் வளர்ச்சிக்கு உங்கள் உண்மையும் நேர்மையும் இடைவிடாத கடின உழைப்பும் தவிர வேறு எதுவும் காரணங்களாய் இருக்க முடியாது.

உங்களைப் பற்றி எழுதிக் கொள்வதற்கு இன்னமும் ஏராளமாகவே இருக்கின்றன. எதைப்பற்றி நான் இங்கே எழுதிக் கொள்வது? கூடியிருந்து கூழ் குடித்த நினைவுகளை எழுதிக் கொள்வதா? இல்லையேல் கடகத்தினுள் டிரைவர் கியர் போட்ட கதை உனக்கு தெரியுமோ என நகைச்சுவை கூறிய சம்பவத்தை எழுதிக் கொள்வதா? இல்லையேல் "மச்சான் இஞ்சவா" என்று அருகிலணைத்து தலையை ஒருக்கா மசாஜ் பண்ணிவிடு என்று சொல்லி என்னை மசாஜ் பண்ண வைத்து, பின்னர் என்னையும் அழைத்து எனது தலையையும் மசாஜ் செய்த நாட்களை நினைவு செய்து கொள்வதா? இப்படியாக இன்னும் பல நினைவுகள்,

"என்ன மச்சானும், அத்தானும் மாதிரியா நிக்குறியள்?" என்று அக்கா குரலை உயர்த்தும் போதெல்லாம் "நீ உன்ர வேலையைப் பார். அது மச்சானும் நானும் பட்டபாடு" என்று சொல்ல வாயடைத்து நிற்பார் அக்கா. இப்படியாக எங்களுக்கிடையான உண்மையான அன்பினை இன்னும் பல நினைவுகளால் தொகுத்திட முடியும்.

நான் லண்டனிலிருந்து தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தும் போது பொதுவாக அக்காதான் அழைப்பை எடுப்பார். தொலைபேசியல் உரையாடுவது நானென அறிந்ததும் மாடிப்படி இறங்கிவந்து "யார் மச்சானா? "இஞ்ச கொடு, நான் கதைக்கனும்" என்று பிடிவாதமாய் அக்காவிடம் தொலைபேசியைப் பிடுங்கி அவர் கேட்கும் கேள்விகள் இரண்டே இரண்டுதான். "ஆ,மச்சான் எப்படி இருக்கிறாய்? எப்ப வாறாய்?" இந்த இரண்டு கேள்விகளும் எப்போதும் நிச்சயமாயிருக்கும். "நான் இருக்கிறன் மச்சான். நீ இஞ்சவா" என்று உண்மையான அன்புடன் கூறும் போது என்னை அறியாமலே கண்கள் கண்ணீர் சிந்தும். அப்படியாக வஞ்சகமேதுமின்றி உண்மையாக நேசிக்கும் மனித ஜீவன் தான் என் அத்தான்.

கிட்டத்தட்ட இருபது வருடங்களாகத் தொடர்ந்த எங்கள் உறவில் நான் அறிந்த வரையில் எந்தவொரு கருத்து வேறுபாடும் இருந்ததாயில்லை. இவ்வாறான ஒரு நல்ல மனிதனை குடும்பத்தார், உறவினர், நண்பர்கள் மட்டுமல்லாது ஒட்டுமொத்த சமூகமே இழந்து தவித்து நிற்கின்றது.

எம்மை எல்லாம் ஊட்டி வளர்த்த அன்புத் தெய்வமே அத்தான்! போய் வாருங்கள். சந்தோசமாய் போய் வாருங்கள். நீங்கள் மரணிக்கவில்லை. மரணம் தான் உங்களிடம் மண்டியிட்டுக்கொண்டது. மண்ணினுள் மறைந்து நிற்கும் விதை நீங்கள் விருட்சமாகி விழுது விடும் காலம் வெகு தொலைவில் இல்லை. வலிகள் தாங்கிய நெஞ்சங்கள் இதனையும் தாங்கிக் கொள்ளும். எத்துணை துன்பங்கள் எம்மைச் சூழ்ந்து நின்றாலும், எத்துணை துயரங்கள் எம்மை வாட்டி வதைத்தாலும் உங்கள் இலட்சியங்கள் யாவும் இனிதே நிறைவு செய்து வைக்கப்படும். அதற்காக என்னால் முடிந்த சகல உதவிகளை நன்றியுணர்வுடன் நான் செய்யக் காத்திருக்கின்றேன்.

அன்பு சகோதரனின் திருப்பாதங்களுக்கு என் கண்ணீர் துளிகளைக் காணிக்கையாக்குவதோடு உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிநிற்கிறேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!

என்றும் உங்கள் அன்புக்கு மாத்திரமே கட்டுப்பட்ட
அன்பு மச்சான், சகோதரன்
**சுபாஸ்**

# சகோதரர்கள் மைத்துனர்கள் இரங்கல்

*"பணிவுடையன் இன் சொலன்*
*ஆதல் ஒருவற்குஅணியல்லமற்றுப்பிற"*

என்ற குறளுக்கு ஏற்ப பணிவுடையவனாகவும், இன் சொலனாகவும் எமது குடும்பத்தில் இளையவராய், அருமைத் தம்பியாய், அருமை மைத்துனராய் அன்பும் பாசமும் காட்டி கனிவாய்ப் பேசி எமக்கெல்லாம் வழிகாட்டி உதவிகள் பலபுரிந்த உத்தமனே!

உங்கள் இழப்பை எம்மால் தாங்க முடியவில்லையே! நீங்கள் சுகம் பெற வேண்டிக் கொண்டிருந்த வேளையிலே நீங்கள் இறைவனடி சேர்ந்த செய்தி வந்தது. இதனை அறிந்து பேரதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்தோம். இனி எப்போது உங்கள் சிரித்த முகத்தினைக் காண்போம். நாங்கள் உவ்விடம் வந்தபோதெல்லாம் அக்கா, அத்தான் என அன்பாக அழைத்து ஆதரிப்பீர்களே. இதை எம்மால் மறக்கவே முடியாது. தொலைபேசியல் நாம் அழைத்தால் "என்ன சொல்லு அக்கா", "சொல்லுங்கோ அத்தான்" என்று அன்பாக அழைப்பது இப்பவும் எங்கள் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

மைத்துனர்களை மதித்து, அவர்கள் உள்ளங்களை அன்பினால் கவர்ந்து தன் கடமைகளைத் தவறாது செய்த பெருந்தகை. உங்கள் மறைவு என்றுமே நிரப்ப முடியாத வெற்றிடம். ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொள்ளும் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல வாரிவளவு கற்பகவிநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!

பாசமுள்ள

**அக்காமார், மைத்துனர்கள்**

- மூடிய கைகளுடன் மனிதன் பிறக்கிறான். திறந்த கைகளுடன் விட்டுப்போகிறான்.
- பொய் சொல்லி வாழ்ந்தாருமில்லை. உண்மை சொல்லி கெட்டாரும் இல்லை.
- செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான், செய்யத் தெரியாதவன் போதிக்கிறான்.
- கோபம் அன்பை அழிக்கிறது, செருக்கு அடக்கத்தை அழிக்கிறது.

# ஆண்டுகள் பல கடந்தாலும் ஆறாது எம் துயரம் எமது அருமை அத்தானே!

கள்ளம் கபடம் அற்ற பேச்சும் சிரித்த முகமும் கொண்ட எங்கள் அத்தானே! உங்கள் பிரிவை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. உங்கள் மிடுக்கான நடையும் நகைச்சுவையான பேச்சும் எங்களை மட்டுமல்ல சுற்றி உள்ளவர்களையும் கவர்ந்து இழுக்கும் ஆற்றல் வாய்ந்தது. எங்கு திரும்பினாலும் உங்கள் வீட்டில் உள்ள ஒவ்வொரு சுவரும் உங்கள் நினைவுகளை எம் கண் முன்னே கொண்டு வந்து எம்மை எல்லாம் ஆறாதுயரத்தில் ஆழ்த்தி விடுகின்றது.கண்களில் இருந்து கண்ணீர் மடை திறந்த அருவி நீராய் பாய்கிறது அத்தான். அத்தான் என்ற வார்த்தைக்கு உயிர் கொடுத்தவர் நீங்கள் உதடுகளின் உச்சரிப்பிலும் மற்றவர் பார்வையிலும் மட்டுமே நீங்கள் எங்களுக்கு "அத்தான்". ஆனால் அதையும் தாண்டி எங்களுக்கோ நீங்கள் தகப்பனைப் போல, ஒரு மூத்த சகோதரர் போலவே இன்று வரையும் இருந்துள்ளீர்கள்.

தனி ஒருவனாக இந்த சாம்ராஜ்ஜத்தை கட்டிக்காத்த நீங்கள் என் அக்காவையும் பிள்ளைகளையும் தவிக்க விட்டு இவ்வளவு விரைவில் செல்லுவீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை. மனிதன் பிறக்கும்போதே இறக்கும் தேதியும் நிர்ணயிக்கப்படும் என்று சொல்வார்கள். ஆனால் நீங்கள் கடவுள் ஒருவனையே நம்பி இறைபணி செய்து வாழ்ந்த ஒரு நல்ல உள்ளம், அதனால் தான் என்னவோ நம்மைப்போல அந்த ஆண்டவனுக்கும் உங்கள் மேல் பிரியம் அதிகம் என்பதனால் விரைவாக பாதியிலேயே உம்மைப்பறித்தானோ!

ஒவ்வொரு முறையும் நானும் பிள்ளைகளும் இங்கு வரும் போதெல்லாம் என் அக்காவுக்கும் மேலாக ஒரு தகப்பனைபோல உங்கள் வரவேற்பும் உபசரிப்பும் என்றும் எம்மால் மறக்க முடியாது. எங்களுக்கு எல்லாம் நீங்கள் ஒரு அசைக்க முடியாத இரும்புத்தூண் போன்றல்லவா இருந்தீர்கள். ஊரே பார்த்து மெச்சும்படி ஒரு மருமகன் என் தந்தை தாய்க்கு கிடைத்தது. ஆனால் அந்த ஆண்டவன் செய்த சதியோ அல்லது உங்கள் விதியோ உங்கள் வாழ்க்கை பயணத்தை பாதி வழியிலேயே முடித்து விட்டது.

உங்கள் இலட்சியங்களும் கனவுகளும் ஆயிரம் ஆயிரம் அத்தான். நீங்கள் சாதிக்க பிறந்தவன். சாதனைகளே வாழ்க்கையாக வாழ்ந்தவன். சோதனைகள் நிறைந்த உங்கள் வாழ்க்கையில் முட்டியும் மோதியும் தன்னம்பிக்கையோடு வீறுநடை போட்டு நடந்தவன் நீங்கள். இது உங்களோடு முடிவடையாமல் நீங்கள் பெற்றெடுத்த மூன்று முத்துக்களும் நீங்கள் காட்டிய வாழ்க்கை பாதையில் அறத்தின்

வழியில் நின்று உங்களைப் போல நேர்மையாகவும் பண்போடும் உங்கள் கனவுகளை நிலை நாட்டுவார்கள் என்பதில் எந்தவித ஐயமும் நமக்கில்லை. பாசமாக நீங்கள் சுமதி என்று அழைக்கும் உங்கள் அம்மன். உங்களுக்காகவே பிறந்து உங்களுக்காகவே வாழ்ந்த எங்கள் அக்கா. உங்கள் பாணி கூறுவதாயின் எங்கள் தலைவி இன்று தலைவனை இழந்து தவிக்கிறாள். அவளுக்கு ஆறுதல் சொல்ல வார்த்தைகளை தேடும் போது வார்த்தைளே கண்களில் கண்ணீர் முத்துக்களை பூத்து எம்மை பார்த்து கேள்வி கேட்கிறது எப்படிச் சொல்லுவீர்கள் ஆறுதல் என்று! ஆனாலும் உங்கள் மனைவி எனது இரண்டாவது தாய் வளர்ப்பிலும் சரி பிறப்பிலும் சரி என்னைவிட தைரியசாலி. நீங்கள் காட்டிய பாதையில் உங்கள் நல்லாசியுடன் அவள் தன் குழந்தைகளை உங்கள் விருப்பப்படி நல்வழிப்படுத்த அந்த ஆண்டவனை வேண்டி நிற்கின்றேன்.

ஆண்டுகள் பல கடந்தாலும் ஆறாது ஆறாது நம் துயரம் எமது அருமை அத்தானே.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல வாரிவளவு கற்பக விநாயகனை வேண்டி நிற்கின்றேன்.

என்றும்
உங்கள் மைத்துனி, தங்கை
**சுகிர் (சுபோ)**

# உலகம்

ஒடுங்கும் பொழுது நிலம் நீரிலும், நீர் அக்கினியிலும், அக்கினி வாயுவிலும், வாயு ஆகாயத்திலும், ஆகாயம் பரம்பொருளிலும் ஒடுங்குகின்றன. ஆகாயமானது தனி மாத்திரையான சப்தத்தில் ஒடுங்கி, சப்தம் (நாதம்) பிரணவத்தில் அடங்கி, பிரணவம் அதன் மூலமான 'அ' என்னும் ஒலியில் ஒடுங்குகிறது. ஓம் என்னும் பிரணவம் மூன்று எழுத்துக்களினுடைய தொகையாக இருக்கிறது. 'அ' காரம் 'உ' காரம், 'ம்' காரம் என்பன அம்மூன்று எழுத்துக்கள். 'அ' என்று சொல்லுமிடத்து, ஓசை தோற்றத்திற்கு வருகின்றது. 'உ' என்று சொல்லுமிடத்து, அது நிலை பெற்றிருக்கிறது. 'ம்' என்று சொல்லுமிடத்து அது ஒடுங்குகிறது. ஓசையின் தோற்றம், இருப்பு, ஒடுக்கம் ஆகிய மூன்றும் சேர்ந்தது 'ஓம்' என்னும் பிரணவம்.

# ஆத்மசாந்திபிரார்த்தனை
# வானுறையும் தெய்வம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்னும் வள்ளுவர் வாக்கிற்கு அமைய வாழ்ந்தவர் அமரர் கணேசலிங்கம் அவர்கள் அன்பு, ஈகை, பக்தி, இன்சொல் அமையப்பெற்ற பெருந்தகை ஆவார்.

எமது ஆலயத்தின் மகாகும்பாபிஷேகத்தை (2004)ல் தானே உபயமாக ஏற்று சிறப்பாக செய்து தம் குலதெய்வமான கற்பகப்பிள்ளையார் அருளைப் பெற்று பெருவாழ்வு வாழ்ந்ததுடன், இந்த ஆண்டு (2016)ல் கும்பாபிஷேகத்தை தனது சகோதரன் பொறுப்பேற்று நடத்ததானும் கலந்து சிறப்பித்த அந்த நினைவுகள் பசுமையானவை.

தமது தொழிலுக்குச் செல்லும் போது கற்பகவிநாயகரை பக்தியோடு தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றிவழிபாடு செய்த பெருந்தகை உத்தமசீலர் திருவாளர் கணேசலிங்கம் அவர்கள் இவ்வுலகைப்பணி நிறைவுற்று அவ்வுலகப் பணிக்கு கற்பக விநாயகரால் ஆட்கொள்ளப்பட்டார் என்றால் மிகையாகாது.

"உலகெல்லாம் ஒருபெருங்கனவு, அஃதுளே
உண்டு உறங்கி இடர் செய்து செத்திடும்
உலக மானிடப்பூச்சிகள் வாழ்க்கையோர்
கனவிலும் கனவாகும்" என்பான் பாரதி. வாழ்வாங்கு வாழ்ந்த அமரர் கணேசலிங்கம் அவர்கள் வாரிவளவு ஸ்ரீகற்பகவிநாயகர் பாதம் அடைந்து ஆத்ம சாந்தி பெறவும் அவரது பிரிவால் மனைவி, மக்கள், சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிகள், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், தொழில் ஸ்தாபன ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் எல்லோருக்கும் இவ்விழப்பு பேரிழப்பாக இருந்தாலும்.

மானிடப்பண்புகள் நிறைந்த கணேசலிங்கம் அவர்களின் ஆன்மா குடும்பத்தாருக்கு நல்லொளியாக வழிகாட்டும் என்பது எனது நம்பிக்கை. ஆகவே எல்லோருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து எல்லோரும் மனஅமைதி ஸ்ரீகற்பகவிநாயகரை அர்ச்சித்து பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயம்

**சிவஸ்ரீ நா. பாலஸ்கந்தரூபக் குருக்கள்**

வாரிவளவு

காரைநகர்


உ

ஐயப்பன் துணை



காரைநகர் வியாவில்

# ஐயனார் கோயில்



பதிவு இல - HA/5/JA/35

இலங்கை வங்கி காரைநகர். கணக்கு இல - 123

தொலைபேசி:- 0776258239
060 2214893

காரைநகர்.

# அல்லல் நீங்கி அடைவீர் சாந்தி

சீரார் காரை நகரிற் தோன்று
பேரார் குடியாய்ப் பாரோர் போற்று
நேரார் இ. ச பேரம்பலத்தார்
பாரார் வாழ்வில் மகவாய்த் தோன்றி
இந்துவின் மைந்தனாய் இகம்நனி கற்றே
தந்தையின் தொழிலை தரணி பெருக்கும்
பெருவிருப்போடு நிதமும் உழைத்தே
ஒருபெரு நிழலைத் தருமர மாகும்
திருவது பெருக திருவரு ளதனால்
தலைநகர் கொழும்பில் தாளது பதித்தே
நிலையது உயரும் படிதொழில் வளர்த்தீர்
ஏழைகள் ஏதிலர் இருநிலை உயர
தோழமை யோடு மாபணிபு ரிந்தீர்
மாணவர் கல்வியில் மகிமைய துறவே
பேணிடு வகைபுவி பெரும்பணி புரிந்தீர்

காணிடு யாரையும் கனிவொடு பேசி
கோணிடா தெவையும் கொடுத்து மகிழ்ந்தீர்
மனையாய் வாழ்வில் வரித்திடு திருவின்
அனையாள் மகிழும் கணவன் ஆனீர்
மழலைகள் உவக்கும் தந்தையாய் இருந்தீர்
கற்றோர் உற்றோர் மற்றோர் போற்ற
நற்றேன் சுவையாய் நனிஉற வாடி
அன்பாய் நண்பாய் அணைத்து மகிழ்ந்தீர்
போதனை விரும்பாப் பெரியோ னாகி
ஊருளர்க் கெல்லாம் உதவிய நீவிர்
சஞ்சித வினைகள் சகமது வருத்தும்
வஞ்சனை வழியே வாழ்வினை நீத்தே
தில்லைக் கூத்தன் திருவடி யடைந்தீர்
எல்லை இல்லாப் பிறவிகள் காணும்
அல்லல் நீங்கி அடைவீர் சாந்தி!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்பன்

**இராசையா குகதாசன்**

நாயன்மார்கட்டு



உ
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

நல்லூர், யாழ்ப்பாணம் - இலங்கை

Nallai Thirugnanasambanthar Atheenam

NALLUR, JAFFNA - SRI LANKA



ஸ்தாபிதம் :- 1966 ☏ 021 222 2870 திகதி ..05/02/2017..

# பிரார்த்தனைச் செய்தி

அன்புள்ளவர்களுக்கு

E.S. பேரம்பலம் கணேசலிங்கம் அவர்களது மறைவு அனைவருக்கும் மனவேதனையினை தந்தது. தந்தை எவ்வழி மைந்தன் அவ்வழி எனும் வாக்கிற்கு அமைய பேரம்பலம் அவர்களது புத்திரர்கள் அனைவரும் ஒழுக்கம், பண்பு, எடுத்த விடயத்தை செவ்வனே ஆற்றும் திறன் இறை நம்பிக்கை என அனைத்தும் கொண்ட கணேசலிங்கம் அவர்கள் சிறந்த குடும்பத் தலைவனாகவும் தந்தையாகவும் சிறந்த நண்பனாகவும் பழகி அனைவரது நன்மதிப்பையும் பெற்று தர்ம காரியங்களையும் ஆலய அறப்பணிகளையும் ஆற்றி வாழ்ந்தவர். இவரது வாழ்வு அனைவரும் போற்றும் வகையில் அமைந்து கணேசலிங்கம் அவர்களது ஆத்மா சாந்திக்காக குடும்பத்தவர்களது மன ஆறுதலுக்காகவும் இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்**



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

## Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka

T.P. No : 021-3213151

திகதி..............................

உ

# செஞ்சொற்செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள் வழங்கிய பிரார்த்தனையுரை

காரைநகர் மண் பெற்ற பெருமகன். அமரர் E.S. பேரம்பலம் அவர்கள். அப் பெருந்தகையின் புதல்வர்கள் பண்பும், பணிவும், பக்தியும், பரோபகாரமும் மிக்க உத்தமர்கள் இவர்களின் சிறப்பைக் கண்டு வாழ்த்தாதவர்களில்லை. எதிர்பாராத விதமாக இக் குடும்பத்தின் சிறப்பை அலங்கரித்த மைந்தன் திரு.E.S.P கணேசலிங்கம் காலமான செய்தி மிகவும் கவலை தரும் செய்தியாகும். கல்விக்காருணியன், கொடைப்பரிதி E.S.P நாகரட்ணம் அவர்கள் அருமைச் சகோதரன் பிரிவால் மிகவும், கவலைப்படுவதை யான் அறிவேன். அமரரின் மனைவி, பிள்ளைகள், சகோதரங்களின் துயரை ஆற்ற முடியாது. எல்லா நிறைவோடும் வாழ்ந்த பேறு அமரருக்குரியது. அன்னாரின் ஆத்மா சாந்தி பெறத் துர்க்காதேவியைப் பிரார்த்தித்து. குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறி அமைகிறேன்.

**ஆ. திருமுருகன்**
தலைவர்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கொழும்பு)

**Jaffna Hindu College Old Boy's Association (Colombo)**

# கண்ணீர் அஞ்சலி

யாழ் இந்து அன்னையின் புகழ் பூத்த பழைய மாணவனும், யாழ் இந்து கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம் கொழும்பின் ஆயுட்கால அங்கத்தவருமாகிய அமரர் E.S.P.கணேசலிங்கம் அவர்களின் மரணச்செய்தி எம்மையெல்லாம் மிக்க அதிர்ச்சியிலும் வேதனையிலும் ஆழ்த்தியுள்ளது.

அமரர் எமது கல்லூரியின் புகழ் பூத்த மாணவனாக திகழ்ந்து கல்லூரிக்கு பெருமை சேர்த்தது மாத்திரமல்ல, தான் பயின்ற பாடசாலை சமூகத்திற்கும்.இந்து அன்னைக்கு தன்னாலான சேவையைச் செய்ய வேண்டுமென்ற நோக்கிலே எமது சங்கத்தில் 1995ம் ஆண்டு ஆயுட்கால அங்கத்தவராக இணைந்து அவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. பாடசாலை அபிவிருத்திக்காக நாங்கள் K.J.யேசுதாஸ் அவர்களை இலங்கைக்கு வரவழைத்து இசைக் கச்சேரி நடத்திய போது அவர் ஆற்றிய சேவையை எமது சங்கம் என்றும் ஞாபகத்தில் வைத்துள்ளது.

அமரர் அவர்கள் இறைவன மீது அளவற்ற பக்தி கொண்டவர். பல ஆலயங்கள் அமைவதற்கு காரணகர்த்தாவாக திகழ்ந்தவர். கொழும்பு மாணிக்கப் பிள்ளையார் மீது அளவற்ற பக்தி கொண்டவர். சிரித்த முகத்தோடு அனைவருடனும் அன்போடும பண்போடும் பேசுவர்.இன்னும் பல காலம் வாழ்ந்து அவரது குடும்பத்தாருக்கும் நாட்டிற்கும் அளப்பரிய சேவை செய்யவேண்டிய ஒருவரைக் காலன் மிக விரைவில் அழைத்துவிட்டான். மனிதனாக தோன்றி புகழோடு இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரது பரிவால் தவிக்கும் அருமை மனைவி அருமைப் புத்திரன், புத்திரிகள் அவரது அன்பு அண்ணன் திரு E.P.S நாகரத்தினம் குடும்பத்தாருக்கு மற்றும் அவரது குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் எமது இந்து கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம் கொழும்பின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனையும் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

**திரு. M.N.அசோகன்**
தலைவர்

# CHINMAYA MISSION OF SRI LANKA

(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
32, 10th Lane, Off Schofield Place, Colombo 03, 00300, Sri Lanka
Phone: +94-11-2591344 Email: info@chinmayalanka.org


## இரங்கல் செய்தி

ஓம் த்ரயம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
ஊர்வாருக மிவ பந்தனாத்
ம்ருத்யோர் மாம்ருதாத்

முன்னைய பிறவிகளிற் செய்த புண்ணிய பாபங்களின் பிரதிபலனாக தற்போதைய பிறவி வாய்க்கின்றது. அந்த வகையில் 23-01-2017 இல் இந்தியாவில் இறைபதம் எய்திய திரு. இ.ச.பே. கணேசலிங்கம் அவர்கள் இப்பிறவியில் பெரும் வர்த்தகராகச் செல்வச் செழிப்புடன் வாழ்ந்ததுடன் தன் கடின உழைப்பின் ஒரு பகுதியை பல தெய்வத் திருப்பணிகளுக்கும். பொது நற்பணிக்காகவும் செலவிட்டு வந்துள்ளார்.

அன்னார் யாழ்ப்பாணத்தில் காரைநகர், வாரிவளவு என்னும் பகுதியில் பிறந்து கொழும்பு மாநகரில் பம்பலப்பிட்டி பகுதியில் வசித்து, தலைநகரிலேயே தனது வர்த்தகத் ஸ்தாபனத்தையும் நடாத்தி வந்துள்ளார். அத்துடன் அகில இலங்கை சமாதான நீதிவானாகவும் பணியாற்றி வந்துள்ளார். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறை பரம்பொருளையும் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்களையும் பிரார்த்திக்கின்றோம்.

இறை பணியில்

**பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா**
வதிவிட ஆச்சாரியார்
சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்

A.G. SARMA

# Shri A. G. S. Swaminathan Sharma

CARNATIC MUSICIAN - MRUTHANGAM ARTIST
MBA (UK), FCA (SL), FCMA (UK), CMA (AUS), FSCMA (SL), CPM (SL), CGMA (GLOBAL)

No: 14, Sagara Road, Bambalapitiya, Colombo-04, Sri Lanka.
Mobile : 0094-777-802900
Email : swaminathan@agsarma.com
Web : www.agsarma.com

. Disciple of Umayalpuram K. Sivaraman,
. Son of Kalabushanam A. Ganesha Sarma (JP),
. Student of A. Ragunathan







2017.01.26

*Dear Madam,*

*Death brings that time can only heal,*

*No words could ease what we truly feel,*

*But with God, him joy is eternally sealed,*

*And cherish his memories that death can't even steal.*

*Lift up a smile for he is already in the paradise.*

**OUR DEEPEST CONDOLENCES**

**From:** *Mr. G. S. Swaminathan Sharma*
*& Management*

# SEEMATI (PVT) LTD

## சீமாட்டி (வரையறுக்கப்பட்ட நிறுவனம்)

129 (122), மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்

TEL : 021 2228564. FAX : 021 2222102

# E.S. பேரம்பலம் கணேசலிங்கம்

**[சமாதான நீதவான்]**

காரைநகர் எனும் முனிவர்கள் யோகிகள் கல்விசார் அறிஞர்கள். வர்த்தகர்கள் தோன்றி வாழ்ந்த புண்ணிய பூமியில் பிறந்து கல்வியிலும் கேள்வி ஞானத்திலும் சிறந்து விளங்கி வர்த்தகத்துறையில் மாற்றார் போற்றும் வகையில் சிறந்து விளங்கி தாய் தந்தையருக்கு நல்ல பிள்ளையாகி சகோதர்களுக்கு உற்ற உடன் பிறப்பாய் தோழர்களுக்கு தோழனாய் வணிகர்களுக்கும் வாடிக்கையாளருக்கும் நல்ல வணிகனாகவும் வாழ்க்கைத் துணைவிக்கு ஏற்ற கணவனாகவும் பிள்ளைகளுக்கு சிறந்த தந்தையாகவும் வழிகாட்டியாகவும் வாழ்ந்து அமரராகிய பேரம்பலம் கணேசலிங்கம் அவர்கள் இறைபணி. குடும்பப்பணி. தொழில்பணி சமூகப்பணி இவற்றுடன் பின்னிப் பிணைந்தவர்.

நாம் அவருடைய சேவையை தொடர்ந்து அவருடைய வழியில் செய்வதே அவருக்கு நாங்கள் செய்யும் நன்றிக் கடன்.

அன்னாரின் அமரத்துவதால் அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினர் சகோதரன். சகோதரிகள் . உற்றார் உறவினர்கள். நண்பர்களுக்கு உள நெகிழ்சியை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா ஈழத்து சிதம்பர சவுந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரர் பாதக் கமலங்களில் சென்றடைய பிராத்திக்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**லயன் த.சற்குணராசா J.P, MJF**
முன்னாள் தலைவர் யாழ் வணிகர் கழகம்
முன்னாள் தலைவர் ஈழத்துச் சிதம்பர திருப்பணிச் சபை
முன்னாள் தலைவர் சர்வதேச லயன்ஸ் கழகம் (நல்லூர்)

# இரங்கல் செய்தி

வாரிவளவு, காரைநகரைச் சேர்ந்த புகழ் பூத்த வர்த்தகர் E.S. பேரம்பலம் அவர்களின் கடைசிப் புதல்வனாக வந்துதித்த கணேசலிங்கம் அவர்கள் பாதி வயதில் இறைவனடி சேர்ந்தமை குடும்பத்தினருக்கு மட்டுமல்லாது தமிழ் சமூகத்தினருக்கும் பேரிழப்பாகும். மருத்துவ வசதிகள் உச்ச நிலையிலுள்ள இந்த நாட்டில் இவரைப் பாதுகாத்து வாழ வைக்க முடியவில்லை என்பது இறைவனின் சித்தம் என்றே கருத வேண்டியுள்ளது.

இறைவனால் படைக்கப்பட்ட ஒவ்வொருவரும் இவ்வுலகில் தமக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றியதும் மீள அழைக்கப்படுவார்கள் நல்லவர்களையும் வல்லவர்களையும் நீண்டகாலம் இப்பூமியில் வாழ இறைவன் அனுமதிப்பதில்லை. அந்த வகையில் தான் திரு. கணேசலிங்கம் அவர்கள் பாதி வயதில் இறையடி சேர்ந்துள்ளார்.

பேரம்பலம் குடும்பத்தின் கடைசிப்பிள்ளை என்ற வகையில் இவர் எல்லோராலும் செல்லமாக வளர்க்கப்பட்டார். யாழ். இந்துக் கல்லூரியில் சிறந்த மாணவனாகத் திகழ்ந்த இவர் வியாபார மோகத்தினால் இளம் வயதிலேயே வியாபாரத்தில் இணைந்து கொண்டார். தந்தையின் வியாபாரத்தினை நவீன மயப்படுத்தி புதிய பாதையில் வியாபாரத்தினை விஸ்தரிப்பதில் பெரும் பங்காற்றினார்.

நாட்டிலே ஏற்பட்ட பிரச்சினைகளைக் கண்டு எங்கும் ஓடாமல் தமது வர்த்தக ஸ்தாபனத்தினூடாக மக்களுக்கு நிறைவான சேவைகளை திரு.நாகரத்தினம் அவர்களுடன் இணைந்து நிறைவேற்றினார். பல்வேறு சிரமங்களின் மத்தியில் கொழும்பிலிருந்து பொருட்களைக் கொண்டு வந்து நிதான விலையில் விற்று மக்கள் நன்மதிப்பைப் பெற்ற நிறுவனமாக E.S.P நிறுவனம். திகழ அர்ப்பணிப்புடன் உயிரைத் துச்சமென மதித்து சேவை புரிந்தார்.

எந்த நேரமும் புன்சிரிப்புடன் காணப்படும் திரு.கணேசலிங்கம் அவர்கள் வாரிவளவு. விநாயகர் மீது மிகுந்த பக்தி கொண்டவர். தந்தையைப் போல தானும் தமது குலதெய்வம் கற்பக விநாயகரின் தேரோடு அங்கப் பிரதிஷ்டை செய்து தமது நேர்த்திக் கடனை வருடந்தோறும் நிறைவேற்றத் தவறுவதில்லை. கடந்த வருடம் இடம்பெற்ற வாரிவளவு விநாயகரின் கும்பாபிஷேக திகழ்வினைத் தமது குடும்ப உபயமாக ஏற்று நிறைவேற்றினார்கள். கடின உழைப்பாழியான கணேசலிங்கம் அவர்கள் தனது வருமானத்தின் ஒரு பகுதியை சமய, சமூக முன்னேற்றத்திற்காக கொடுத்து உதவி வந்தார். உறவினர்களுடனும், நண்பர்களுடனும் அன்பாகப் பழகும் சுபாவத்தினையும் அமரர் அவர்கள் கொண்டிருந்தார்.

பிள்ளைகள் தமது கல்வியில் இடைநடுவில் நிற்கும் இக் காலகட்டத்தில் இவரது இழப்பு குடும்பத்தினருக்குப் பேரிழப்பாகும். இறைவன் திருவடியில் சேர்ந்த அமரரின் ஆத்மா பிள்ளைகளுக்கு நல்ல வல்லமையைக் கொடுத்து இவர்கள் கல்வியில் உயர் நிலையை அடைய வழிகாட்டும் என்பது திண்மை. கணேசலிங்கம் அவர்களின் அன்புத் துணைவியாருக்கும் அன்னாரின் ஆத்மா நல்ல வழிகாட்டியாகத் திகழ்வதுடன் பிள்ளைகளை நல்ல முறையில் வளர்க்கும் வல்லமையையும் இறைவன் அருள் வேண்டும்.

1993 இல் தந்தையின் ஈமக்கிரியைகளை நிறைவேற்ற மிகவும் கஷ்டப்பட்டுக் கொழும்பிலிருந்து வந்திருந்தார். 2012 இல் தனது தாயாரின் இறுதிக் கிரியைகளை கொழும்பில் நிகழ்த்தியதுடன் "மாணிக்க தீபம்" என்ற நினைவு மலரினையும் வெளியிட்டு தனது தாய்ப்பாசத்தினை வெளிப்படுத்தினார். இவ்வளவு விரைவாக இவருக்கும் நினைவு மலர் வெளியிடப்படும் என்று எவரும் நினைக்கவில்லை.

அமரர் கணேசலிங்கம் அவர்களின் பிரிவால் துயருறும் அருமை மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் நான் சார்ந்த காரைநகர் அபிவிருத்திச்சபை, வடமாகாணக் கல்விப் புலம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா நித்திய இறை சுகம் பெற எல்லாம் வல்ல வாரிவளவு கற்பக விநாயகப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

**ப.விக்னேஸ்வரன்**
ஓய்வு நிலை வடமாகாணக் கல்விப் பணிப்பாளர்.

## அமுதவாக்கு

- உலகில் மக்கள் செய்யும் பிழைகளுக்கெல்லாம் தலையாய பிழை அறிவு நூல்களைக் கற்காமல் இருப்பதே ஆகும். ஆனால், நல்ல நூல்களை வாசிப்பதை அன்றாடப்பணியாக்கிக் கொள்ளுங்கள்.
- மனிதனை உயர்த்துவது பணமன்று; பதவியன்று; குலமன்று; பருமன் அன்று; உயரம் அன்று; அறிவு ஒன்றுதான் மனிதனை உயர்த்த வல்லது.
- ஆண்டவனுக்கு பணக்காரன், இல்லாதவன் என்ற பேதங்கள் சிறிதும் கிடையாது. இறைவனின் சன்னதியில் அனைவரும் சமம் என்ற உணர்வோடு வழிபாடு செய்யுங்கள்.

# மனிதருள் மாணிக்கம்

ஓர் உற்ற நண்பனாக, சீரிய குண இயல்புகளையுடையவரும் அண்மையில் எம்மை விட்டுப் பிரிந்தவருமான அமரர் கணேசலிங்கம் அவர்களது நினைவஞ்சலி மலருக்கு எனது சார்பிலும், குடும்பத்தார் சார்பிலும் இந்த இரங்கல் செய்தியை அளிப்பதில் சற்று ஆறுதல் அடைகின்றேன்.

எனக்கும் அமரர் கணேசலிங்கம் அவர்களுக்கும் உள்ள தொடர்பு மிகவும் நீண்டதாகும். 1977ம் ஆண்டில் இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளைக்கு முகாமையாளராக நான் பதவி வகித்த காலந்தொட்டு இன்றுவரையும் எமது நட்பு தொடர்ந்து வந்தது. அமரர் இளம் பிராயத்திலே அவரது தந்தையார் காலம் சென்ற E.S பேரம்பலம் அவர்களுடன் யாழ்ப்பாணத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தபோது அவர்களது குடும்பத்தினருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பு எட்டியது. அக்காலத்திலே அமரர் சுறுசுறுப்புமிக்க ஒருவராக சிறந்த வங்கி வாடிக்கையாளராக நல்ல குணங்களைக் ஒருவராக நான் கண்டேன். பொது நலத் தொண்டுகளில் ஈடுபாடு கொண்டவராக தன்னை அண்டிபோன ஆதரிப்பவர்கள் பொறுமையின் சின்னமாக சிறந்த பக்திமானாக அவரைக் கண்டேன். இந்த நற்குணங்கள் அவரை வர்த்தகத்தில் உயர்வடையச் செய்தன.

யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி கொழும்பிலும் வர்த்தகத்தில் ஈடுபட்டு நல்ல முன்னேற்றம் கண்டார். நானும் கொழும்புக்கு மாற்றமாகி சென்றமையால் எமது தொடர்பு தொடர்ந்தும் நீடித்தது. பழைய சோனகத் தெருவில் அமைந்திருந்த அவரது வர்த்தக நிலையத்திற்கு சென்று அவரது சுகத்தை விசாரிக்கத் தவறவில்லை. வங்கி சம்பந்தமான விடயங்களை என்னிடம் கேட்டு அதன்படி நடந்து வர்த்தகத்தை உயர்நிலைக்கு கொண்டு வந்தார். தனது சொந்த விடயங்களையும் என்னுடன் பகிர்ந்து கொள்வார்.

அன்னாரது வாழ்வின் முக்கியமான நிகழ்வுகளிலும் பங்கு கொள்கின்ற வாய்ப்பு அடியேனுக்குக் கிடைத்தது. குறிப்பாக அவரது திருமணத்துக்கு அவரது செல்வப் புதல்வியின் பூப்புனித நீராட்டுவிழா ஆகிய நிகழ்வுகளில் எனது குடும்பத்தாருடன் பங்கு பற்றி வாழ்த்தினேன். வங்கியிலிருந்து ஓய்வு பெற்ற பின் கனடாவுக்குச் சென்று வசித்த போதும் எமது நட்பு தொடர்ந்து கொண்டே சென்றது. நான் இலங்கைக்கு மூன்று முறை சென்ற போதும் அவரை சந்திக்க தவறுவதில்லை. இறுதியாக கடந்த வருடம் மார்ச் மாதத்தில் சென்ற சமயம் அவரின் வீட்டுக்கு சென்று சுகம் விசாரிந்து வந்தேன். கொழும்பில் அவரது வீட்டுக்கு எனது துணைவியார் சகிதம் சென்ற போது

எங்களை வரவேற்று. குடும்ப அங்கத்தவர்களை எங்களுக்கு அறிமுகப்படுத்தி அளித்த உபசரணைகளை இட்டு நாம் மிக்க மகிழ்ச்சியடைந்தோம். பின்னர் நாம் யாழ்ப்பாணம் சென்ற போதும் எம்மை வந்து சந்திந்து கலந்துரையாடிச் சென்றார்.

இத்தகைய ஒரு நல்ல மனிதரை, நல்ல நண்பனை இனி எப்பிறப்பில் காண்பேன். இனி என்று எனது மனம் ஏங்கித் தவிக்கின்றது. அமரர் ஓர் உத்தம புத்திரனாக, நேர்மை கள்ளம் கபடமற்ற மனம், இறைபக்தி கொண்ட உயர்ந்த உள்ளம் ஒருவராக வாழ்ந்து மறைந்தார். அவருடைய புகழ் என்றும் இவ்வுலகில் நிலைத்து நிற்கும். ஆண்டவன் அடியில் அவரது ஆத்மா சாந்தியடையும்.

அமரரை இழந்து தவிக்கும் அவரது அருமைத் துணைவியார், அவரது பிள்ளைகள், மற்றும் அவரது சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் எனது குடும்பத்தின் சார்பிலும் எனது சார்பிலும் ஆறுதல் சொல்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திக்கின்றேன்.

*"நெருதல் உள்ளொருவன் இன்னிலை என்றும்*
*பெருமை உடைத்து இவ்வுலகு "* — *திருக்குறள்*

அருமை நண்பர்

**முத்துமணி கனகரட்ணம்**

ஓய்வு பெற்ற உதவி பொது முகாமையாளர்,

இலங்கை வங்கி.

## நல்லவர்களாக வாழுங்கள்

- இறையருளைப் பெறுவதற்கு ஆதாரம் அன்பு தான். மனதில் அன்பு ஊற்றெடுக்க வேண்டுமானால், எல்லா உயிர்களையும் நேசிப்பது ஒன்று தான் வழியாகும்.
- அன்னதானம் செய்பவர்களை கடவுளின் அம்சம் என்று சொல்ல வேண்டும். பசி புத்தியை தடுமாறச் செய்யும் பசி என்னும் தீயை அன்னத்தால் அணைக்க வேண்டும். அன்னமிடுபவர்கள் பெருங்கருணையாளர்கள் என்றால் மிகையில்லை.
- பெரியவர்களைக் கண்டால் பணிவுடன் நடந்து கொள்ளுங்கள். தவறு செய்தால் அதனைத் திருத்திக் கொள்ள முயலுங்கள். நற்குணங்களை பின்பற்றி நல்லவர்களாக வாழுங்கள்.
- ஆன்மீக உணர்வுடன் ஆண்டவனிடம் சரணடைந்தால் நம் மனம் தூய்மை பெறும். தூய மனம் பேரின்பத்தின் வாசலைத்

# சாதனை படைத்த வர்த்தக மாமணி அமரர்

நாடறிந்த முன்னணி வர்த்தகரும், மனித நேயராகத் திகழ்ந்தவரும், இறைவழி நின்று வள்ளுவன் காட்டிய இல்லற வாழ்வை வாழ்ந்தவரும், வர்த்தகத்தில் தழைத்தோங்கியவருமான E.S. பேரம்பலம் கணேசலிங்கம் அவர்களின் இளவயது மரணம் இந் நாட்டு மக்களுக்கு குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும். இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து நமது சமூகத்திற்குப் பணி ஆற்றக்கூடிய திறமை மிக்கவரை இழந்தது எமக்குப் பெரும் கவலையாக இருக்கின்றது.

E.S. பேரம்பலம் கணேசலிங்கம் அவர்கள் காரைநகரில் வர்த்தகத்தில் சிறந்து விளங்கிய E.S. பேரம்பலம் - மாணிக்கம் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். அன்புப் பெற்றோர், அருமைச் சகோதரிகள் நால்வர், ஏக சகோதரன் E.S.P நாகரத்தினம் ஆகியோருடன் தனது இளமைக் காலத்தை மகிழ்ச்சியாகவும், துடிப்பாகவும் கழித்தார். தனது ஆரம்பக் கல்வியைக் காரைநகரில் முடித்து, இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் பயின்றார். இவரது குடும்பம் நீண்ட வர்த்தகப் பாரம்பரியத்தைக் கொண்டதால் இவர் மேற்படிப்பை முன்னெடுக்காது தந்தை, தமையனுடன் இணைந்து வர்த்தக முயற்சியில் ஈடுபடலானார். குறுகிய காலத்தில் வர்த்தக நெழிவுகள், சுழிவுகளைத் தந்தையிடத்தும் களத்திலும் கற்றுக் கொண்டார் காரைநகருக்குத் தொழில் முயற்சியாண்மையில் வெற்றி காண்பது கைவந்த கலையாகும்.

காரைநகர், இந்நாட்டிற்கும், தமிழ்மக்களுக்கும் சிறந்த முயற்சியாளர்கள், வர்த்தகர்கள் , அரசியல்வாதிகள், கல்வியாளர்கள், நிர்வாகிகள் மற்றும் சமய, சமூக சேவையாளர்களைத் தந்துள்ளது. மேலும் இவர்களிடம் மொழிப்பற்று, சமயப்பற்று, கிராமப்பற்று, நிறைவேறான வாழ்வியல் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை, பாரம்பரிய பண்பாடுகளைத் தொடர்ந்து பேணுதல் போன்றவற்றை இறுக்கமாகக் கடைப்பிடிப்பவர்கள். இவர்கள் சமூக மூலதனத்தை (Social Capital) மேம்படுத்துவதற்கு முக்கிய இடம் கொடுப்பவர்கள். காரைநகர் மக்களால் தமிழ் மக்கள் குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் நன்மைகள் பல பெற்றுள்ளனர். யாழ்ப்பாண நகரப் பொருளாதார இயக்கத்தில் காரைநகர் வர்த்தகர்களின் பங்கு மிகவும் காத்திரமானது.

அமரர் E.S.P கணேசலிங்கம் குறுகிய காலத்தில் யாழ்ப்பாணத்திலும், தலைநகர் கொழும்பிலும் வர்த்தகத்தில் சிறந்து விளங்கினார். தொழில் முயற்சியாண்மையில் இவரிடம் சமூகம் பல விடயங்களைக் கற்க முடியும். தொழில் முயற்சியில்

தூரநோக்கு பணி முன்னெடுப்புகள், இலக்குகளை அடைதல், காலத்துக்கு ஏற்ற தந்தி ரோபாயங்களைக் கடைப்பிடித்தல் தொழில்தர்மம் வழிகாட்டும் நெறிமுறைகளை இறுகப்பற்றல், தனது வாடிக்கையாளர்கள், பங்காளிகள், பணியாளர்கள், மக்களின் மனநிறைவு திருப்தி போன்றவற்றில் மிகவும் கவனமாக இருந்தார். வாத்தகத்தில் இலாபம் ஈட்டல் அடிப்படையாக இருப்பினும் தர்ம நீதிக்குட்பட்டதாக இருக்க வேண்டுமென்பதில் மிகவும் இறுக்கமாக இருந்தார்.

இன்று தொழில் முயற்சியில் வெற்றிக்கு அடிப்படையாக அமைவது சிறந்த முகாமைத்துவமே அமரர் கணேசலிங்கம் முகாமைத்துவத்தைப் பல்துறைகளிலும் சிறப்பாகக் கடைப்பிடித்ததில் தான் இவர் குறுகிய காலத்தில் தொழில் முயற்சிகளில் வெற்றி பெற்றார். சந்தை சக்திகளின் போக்குகளை மதிப்பிடுவதில் திறமையானவர் மனிதவளம், நிதி, நேரம், மற்றும் கணிப்பியல் (Logics) முகாமைத்துவத்தில் சிறந்து விளங்கினார். சரியான நேரத்தில் சரியான தீர்மானம் எடுப்பதில் வல்லவர் சமூகத்தில் பல்வேறு சமூக பொருளாதார நிலையிலுள்ளவர்களிம் சிறப்பான உறவைப் பேணினார் தான் மக்களிடம் வர்த்தகத்தால் பெற்ற செல்வத்தின் ஒரு பகுதியை சமூக சமய மேம்பாடுகளுக்கு கொடுத்து உதவினார்.

இத்தகைய பணிகளை இவர் மேற்கொண்டதால் பல கௌரவங்களும், பாராட்டுகளும் இவரை வந்தடைந்தன. மக்களின் நன்மதிப்பையும் பெற்றார் அரசினால் இவரது தொழில்துறை, சமூக சேவைகளுக்காக "அகில இலங்கை சமாதான நீதிவான "பட்டமும் பதவியும் வழங்கப்பட்டன சமூகத்தால் இவரது சேவைகளைப் பாராட்டி வர்த்தக மாமணி, இறைபணிச்செம்மல், சிவ தொண்டன் என பல கௌரவப் பட்டங்கள் கொடுக்கப்பட்டன. மேலும் சமூக - சமுதாய நிறுவனங்கள் பல இவரது பணிகளைச் சிறப்பாக பாராட்டியுள்ளன எல்லாவற்றுக்கும் மேலாக பெரும் எண்ணிக்கையான மக்களின் அன்புக்குரியவராகத் திகழந்தார்.

தொழில் முயற்சியாண்மையில் இருக்கும் இளைய சமூகத்தவர்கள், இவரது தொழிற்ச்செயற்பாடுகள், கொள்கைகள் போன்றவற்றை அறிந்திருத்தல் நல்லது சமூகத்தில் உச்ச நிலையில் இருந்தாலும் உற்றார், உறவினர், கிராமத்தவர்கள் நண்பர்கள் பொதுமக்களை மறக்காமல் வாழ்ந்த பெருமகன் ஆவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இவரது குலதெய்வங்களான காரைநகர் ஈழத்து சிதம்பரத்தில் குடிகொண்டு இருக்கும் நடராசனையும், வாரிவளவு கற்பக விநாயகரையும் வேண்டுகின்றேன்.

**பேராசிரியர் – பொ. பாலசுந்தரம்பிள்ளை – PhD Durham DLIH Jaffna**

வாழ்நாள் பேராசிரியர் - முன்னாள் துணைவேந்தர்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# நன்றி மறவாமைக்கு இலக்கணமாகிய கணேஷ்

1980 களில் திரு. கணேசலிங்கம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் க.பொ.த. (சா.த) தில் என்னிடம் சமூகக்கல்வி கற்றவர். எனது மாணவர்களில் சற்று வித்தியாசமானவர் இவர்.

கல்வி மீது அளவிலாப் பற்றுக் கொண்டவர். கற்றவர்களையும், பெரியோர்களையும், அறிஞர்களையும் உளக்களிப்புடன் மதித்து மகிழ்வார். வாழ்வில் நலிந்த மக்களுக்கு தன்னாலியன்ற உதவிகளைச் செய்வார்.

"கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு"

தான் கற்றுபட்டதாரியாக வேண்டும் என்ற அவா அவரிடம் மிகுந்திருந்தது. இதை அடிக்கடி என்னிடம் கூறி கல்வியில் தனக்குள்ள நாட்டத்தினை வெளிப்படுத்துவார்.

பாடசாலை நேரம் முடிவடைந்ததும் தந்தையாரின் வியாபார நிலையத்தில் அவருக்குதவியாகக் கடமையாற்றுவார். அவருக்கு அங்கு பொறுப்புகளதிகம்.

தனது வேலைப்பளுவுடன் நிறைவாகக் கற்க முடிவதில்லை என்று ஆதங்கப்படுவார்.

ஒரு தடவை என்னிடம் பாடசாலை நேரம் தவித்து தனது கல்விக்கு உதவி செய்ய முடியுமா? என்று கேட்டார்.

நானும் அவரின் கற்றல் ஆர்வத்தினை நன்குணர்ந்து இருந்ததால் முழுமனதுடன் சம்மதித்து, "எந்த நேரம் வசதி" என்று கேட்டேன்.

தனக்கு இரவு 9 மணிக்கு பின்னர் தான் வசதி, கடையின் மேல்மாடியில் கற்கலாம் என்றார்.

எனது வீடு நாயன்மார்கட்டில் குறிப்பிட்ட நேரமும், தூரமும் சற்றுக் கடினமானது தான் என்றாலும் அவரது கல்வி நாட்டம் என்னைச் சம்மதிக்க வைத்தது. அங்கு ஆசிரியராகச் செல்லாது, ஒரு பிள்ளையின் விருப்பத்தை நிறைவு செய்யும் தந்தையாகச் சென்றேன். கற்பித்தேன்.

மிகவும் களைப்பாக விருப்பார் என்னைக் கண்டதும் உற்சாகமாகி விடுவார்.

சமூகக்கல்வியுடன், தமிழ்மொழியும் கற்றுக் கொண்டார். இரவு 11.00 - 11.30 மணிவரை தினமும் கற்றல் நடைபெறும். க.பொ.த (சா.த) சித்தியடைந்த போதும் தொடர்ந்து அவரால் கற்கமுடியவில்லை.

பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலமைகளும் எனது இடமாற்றமும் அவருடனான தொடர்பைப் பல காலம் மௌனிக்க வைத்துவிட்டது.

2000 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி புதிதாக என்னால் ஆரம்பிக்கப்பட்டது.

கல்வியியற் கல்லூரிகளின் தலைவர்கள் கூட்டத்திற்காக ஒரு தடவை கொழும்பு சென்றிருந்தேன்.

கல்வி அமைச்சில் கூட்டம் சென்று கொண்டிருந்தேன். அன்று தற்செயலாக அவரின் சந்திப்பு கிடைத்தது. அப்போது அவர் கொழும்பில் தனது சொந்த வியாபார நிலையத்தை அமைத்திருந்தார்.

அன்று மாலை அங்கு வரும் படி அழைத்தார். முகவரி தந்தார். சென்றேன். நன்கு மகிழ்வுடன் உபசரித்தார். பின் மனம் விட்டுக் கதைத்தார்.

ஸ்ரீஸ்ரீதனது குடும்பம் பற்றிக் கூறினார். என்னைப் பற்றியும் அக்கறையுடன் விசாரித்தார். பின்னர் கூறினார்.

“Sir நான் தற்போது நல்ல நிலையில் உள்ளேன். உங்களதும் உங்களைப் போன்றவர்களதும் ஆசீர்வாதமும் ஆதரவுந்தான். அதற்குக் காரணம். உங்களை என்னால் என்றும் மறக்க முடியாது. அந்த இரவு நேரத்திலும் நீங்கள் வந்து கற்றுத் தந்ததை நான் மறக்கமாட்டேன். அதற்கு நீங்கள் எவ்வித சன்மானமும் வாங்கவில்லை. உங்கள் மீதுள்ள மதிப்புக் காரணமாக நான் ஏதாவது செய்ய வேண்டும். என்ன வேண்டும் என்று கேளுங்கள்” என்றார்.

நான் மௌனமாக தலையசைத்து “கணேஸ் எனக்கு எதுவும் வேண்டாம் உம் போன்ற நல்ல நன்றியுள்ள மாணவர்கள் கிடைத்ததே பெரும் பாக்கியம் “என்று மறுத்தேன் அவர் விடாது “இல்லை சேர் எனது சந்தோசத்துக்காக ஏதாவது பெறவேண்டும்” கூறுங்கள் என்று வற்புறுத்தினார். நான் சிறிது யோசித்து “சரி கணேஸ் எனக்கு எதுவும் வேண்டாம் யாழ்ப்பாணத்தில் ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நான் தான் அதன் தலைவர். அதன் பயன் எமது சமூகத்துக்கு அதிகம். ஆனால் பெரும் வளப்பற்றாக்குறையுடன் கஷ்டப்படுகின்றோம். அதற்கு ஏதாவது உதவி செய்தால் நானும் எமது சமூகமும் மகிழ்ச்சி கொள்வோம்.செய்ய முடியுமா” என்றேன்.

“எமது சமூகத்துக்கு ஏதாவது செய்வதானால் எனக்கும் மகிழ்ச்சி தானே சேர் சொல்லுங்கள் என்ன செய்யலாம்” என்றார்.

உங்களால் முடியுமென்றால் சிறிய அளவில் ஒரு Band Set ஐ அன்பளிப்புச் செய்யுங்கள் என்றேன். அவர் சற்றும் தாமதிக்காமல் நாளைக்கு காலையில் வாருங்கள். இருவரும் சென்று வாங்கலாம்” என்றார்.

அடுத்த நாள் காலை சென்றேன். மிக அவசியமான கருவிகளைக் கொள்வனவு செய்து கொண்டோம்.

கடல் மார்க்கமாக அதைக் கல்லூரிக்கு அனுப்பும் பொறுப்பையும் அவரே ஏற்றுக் கொண்டார். அனுப்பியும் வைத்தார்.

அதில் "அன்பளிப்பு இ.ச.பே கணேசலிங்கம் என்று குறிப்பிடப் போகின்றோம்" என்றேன்.

அப்படி எதுவும் தேவையில்லை கட்டாயமென்றால் அப்பாவின் பெயரை எழுதுங்கள் என்றார்.

அவ்வாறே செய்தோம்.

அவர் பாசத்தையும் பெருந்தன்மையையும் கண்டு வியந்தேன்.

புதிய கல்லூரியில் ஒலித்த முதல் வாத்தியம் அவருடைய வாத்தியக் கருவிகளில் பேரிகை - டும் டும் என்று எமது முகிழ்நிலை ஆசிரியர்களால் ஒலிக்கப்பட்டது.

ஆனால் அது எனக்கு கணேஷ் கணேஷ் என்றே ஒலித்தது. மகிழ்ந்தேன். அது இன்று உன் செய்தி கேட்டு மேலும் மேலும் சத்தமாக எனக்கு ஒலித்துக் கொண்டேயுள்ளது. கணேஷ் துயரத்தைத் தாங்க முடியவில்லை.

உன் பிரிவு என்னை வாட்டுகின்றது.

சென்ற வருடம் நல்லூர்த் திருவிழாவில் உனைக் கண்டேன்.

திருவிழா நேரம் அதிகம் கதைக்க முடியவில்லை நாளை சந்திப்போம் என்று பிரிந்தோம்

சற்றுத்தூரம் சென்று நான் திரும்பிப் பார்த்தேன். என்னையே பார்த்த வண்ணம் நீ நின்றாய் நாளை என்று சைகை காட்டி பக்தர் கூட்டத்தில் நீ கலந்தாய்

அடுத்த நாள் நீ வந்தாய் என்னைத்தேடி

நான் இல்லை வீட்டில் உனைத்தேடி நான் வந்தேன். அங்கே நீயில்லை

முருகனிடம் போயிருக்கின்றார் நல்லூர் கோயிலுக்கு என்றார் அங்கிருந்தவர் சந்திக்கவே முடியவில்லை

நேற்றே கடைசியாயிற்று எனக்கு அன்று தோன்றவில்லை முருகனிடம் இன்று நிரந்தரமான செய்தி கேட்டு தவிக்கிறது.

இத் தந்தை மனது முருகன் உனன ஏற்றுக் கொள்வான். இன்புறு அவனே உன் மனைவி குழந்தைகளைக் காப்பான் - சாந்தி பெறுக நானும் அவனையே பிரார்த்திப்பேன்.

சாந்தி சாந்தி சாந்தி

**கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன்**

தகைசார் ஓய்வுநிலைப் பீடாதிபதி யா.தே.க.க

# காரைநகர் மண் ஈன்றெடுத்த வணிக மாமணிக்கு யாழ். வர்த்தக தொழில்துறை மன்றத்தின் இரங்கல்

வர்த்தக உலகில் விருட்சம் ஒன்று வேரறுந்து விட்டது...
வியாபார கண்ணியத்தை இளைய சமூகத்திற்கு காட்டிய
ஒளிவிளக்கொன்று அணைந்துவிட்டது....
கணேசலிங்கம் எனும் அற்புதக் கலம் ஒன்று
காலக்கடலில் தன் பயணத்தை நிறுத்தி விட்டது....
நம்மை எல்லாம் சோக கடலில் நுழைத்து விட்டது....
சொல்லால் வேண்டுமானால் அவர் அமரர் ஆகிடலாம்...
செயலால் மக்கள் மனங்களில் என்றுமே அவர் அழியா அதிபதி....

பரம்பரை பரம்பரையாக வர்த்தக உலகில் தமக்கென ஒரு நாமத்தை பதித்து ESP எனும் மகுடத்தை உலகறியச் செய்து வர்த்தகதுறைக்கு இவர்களின் பங்களிப்பு அளப்பரியது.

அந்த வகையில் யாழ் - வர்த்தக தொழில்துறை மன்றத்தின் நீண்டகால உறுப்பினரும் வர்த்தக தூண்களில் ஒருவரும் காரைநகர் மண்ணின் பிதாமகனும் ESP & SONS. கஜமுகன் hardwares உரிமையாளருமான ESP நாகரட்ணம் அவர்களின் அன்புச் சகோதரர் ESP கணேசலிங்கம் (உரிமையாளர் ESP & COMPANY யாழ்ப்பாணம் கொழும்பு) அவர்களின் இழப்பானது அவரது குடும்பத்திற்கு மட்டுமன்றி வர்த்தக சமூகத்திற்கும் பேரிழப்பாகும்.

வியாபார புலமை, சமூக மேன்நிலை ஆகிய அனைத்தையும் புறம்தள்ளி எளிய நண்பனாய் அனைவருடனும் ஊடாடிய ஓர் உயரிய மனிதனை குறைந்த வயதில் இழந்து விட்டோம் நாம்.

தனது இறுதி நாள் வரை வர்த்தகதுறை வளர்ச்சிக்கு மட்டுமன்றி காரைநகரின் வளர்ச்சிக்காகவும் உள்ளன்போடு செயற்பட்டவர். வணிக மாமணி, இறைபணி செம்மல், சிவதொண்டன் போன்ற கௌரவிப்புகள் மட்டுமன்றி அகில இலங்கை சமாதான நீதவான் எனும் பெருமைக்குரியவர் அமரர் கணேசலிங்கம். அவரின் நேர்மையும் கண்ணியமும் அளப்பரிய சகிப்புத்தன்மையும் என்றென்றும் போற்றுதற்குரியவை. அமரர் ESP கணேசலிங்கம் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு யாழ்-வர்த்தக தொழில்துறை மன்றத்தின் சார்பில் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் மறுவாழ்வின் ஆன்ம ஈடேற்றத்திற்காய் எல்லாம் வல்ல சிதம்பரநாதரை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி... சாந்தி.. சாந்தி...

**V.K. விக்னேஸ்**

தலைவர், யாழ்- வர்த்தக தொழில்துறை மன்றம்

# அமரர் கணேசலிங்கம் மறக்க முடியாத ஒரு மாமனிதர்

E.S.P என்ற விலாசம் இலங்கையில் மிக்க பிரசித்தி பெற்ற ஒன்றாகும். அதே போல் ஈ.எஸ்.பி சகோதரர்கள் திருவாளர்கள். கணேசலிங்கம் நாகரத்தினம் ஆகியோரின் விலாசமும் நம் நாட்டில் மட்டுமன்றி நம் மக்கள் வாழும் அத்தனை நாடுகளிலும் பிரபல்யமானதே. எதுவித நியாயமான தேவைக்கும் பார்த்துப்பாராமல் வாரி வழங்கும் பண்பாடு இவர்களின் இரத்தத்தோடு கலந்த ஒன்றாகும். இக் குடும்பத்திற்கு பொருந்த கூடியதாக "வாரிவளவும்" இவர்களுடன் சேர்ந்து விட்டது. இச்சகோதரர்களின் அன்னையார் மாணிக்கம் அம்மா பற்றி ஒரு தடவை எழுத நேர்ந்தபோது நான் குறிப்பிட்டிருந்தேன் "வாரிவழங்கியதால் அவர்களின் வளவு வாரிவளவு என பெயர் பெற்றதா? அன்றேல் வாரிவளவில் வாழ்ந்தமையால் வாரி வழங்கினார்களா?" என்று.

அமரர் கணேசலிங்கம் எனது நீண்டகால நண்பரன்று. குறுகியகால நண்பராக இருந்தாலும் என்மீது மிக்க பாசம் கொண்டிருந்தார். நம் இருவருக்கும் அரசியலாலோ, வியாபார ரீதியாகவோ அல்லது வேறு ஏதாவது தொழில் முறை காரணமாகவோ ஏற்பட்ட உறவுவல்ல. உறவு முற்றிலும் மாறுபட்ட ஒன்றாகும். அவர் எனது பேனா நண்பர் என்று கூறினாலும் தப்பில்லை. எனது அரசியல் கட்டுரைகள் கடிதங்கள் முதலியவற்றை படித்துவிட்டு என்னைப் பாராட்டவும் செய்வார். என்னிலைப்பாட்டில் எதுவித குற்றமோ, கருத்து பிழையோ கூறாதமை எனக்கு பெருமையாக இருந்தது. அடிக்கடி தொலைபேசியில் பேசும் போதெல்லாம் என் வரலாற்றில் நான் மறந்தவை, மன்னித்தவை போன்ற விடயங்களைகூட ஞாபகமூட்டுவார்.

அமரர் கணேசலிங்கம் வயதால் என்னிலும் மிக சிறியவர். நான் பார்க்கும் போதெல்லாம் சுகதேகியாகவே காணப்பட்டார். அவருக்கா இந்த சிறுவயதில் இப்படியொரு மரணம் ஏற்பட்டதென நான் அதிர்ச்சியுற்றேன். எம்மைப் போன்றவர்களாலேயே தாங்க முடியாத இவ்விழப்பை அன்னாரின் மனைவி மக்கள் உறவினர்கள் ஆகியோருக்கு எத்தகைய ஆறுதல் வார்த்தைகளை எம்மால் வழங்க முடியும்? உங்கள் கணவர், "ஓர் உத்தமர்" என்றும் உங்கள் தந்தை "ஓர் சமூக தொண்டர்" என்ற ஆறுதல் வார்த்தைகள் அவர் மனைவிக்கோ, பிள்ளைகளிற்கோ உறவினர்களிற்கோ போதிய திருப்தியை கொடுக்காது என நான் அறிவேன். நிலைமை இவ்வாறு இருக்கும் போது அன்னாரின் ஆத்மா எவ்வாறு சாந்தியடையும்? இருப்பினும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் பிரார்த்திப்போமாக.

அவர் எனது அண்ணனோ, தம்பியோ அல்லது நண்பனோ அல்ல. என் பிள்ளைகளில் ஒருவருக்கு சமமானவர். அவருக்கு ஒரு வேடிக்கையான ஆசை உண்டு. எக்காலத்திலும் தன் ஸ்தாபனத்தால் விநியோகிக்கப்படும் நாளேடு எனது காரியாலயத்தில் தொங்க விடப்படவேண்டும் என்பதே. அதில் நான் கண்ட உண்மை யாதெனில், தன்னுடைய பெற்றோரில் மிக்க பாசம் கொண்டிருந்தார் என்பதேயாகும். ஏனெனில் அவரின் நாளேட்டில் அவரின் பெற்றோரின் படம் தோன்றுவதை குறிப்பிடலாம். அன்னார் அமரத்துவம் அடையும் சில நாட்களிற்கு முன் நான் தொலைபேசி அழைப்பை எடுத்து "எங்கே உங்கள் வரபிரசாதம்" என்று கேட்ட போது தான் தனது உடல் நிலை பற்றியும், குறிப்பிட்ட வரப்பிரசாதமான நாளேட்டினையும் நாட்குறிப்பினையும் உடன் அனுப்பி வைப்பதாகவும் கூறினார். இதுவே நம் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட இறுதி சம்பாசணை. வரப்பிரசாதம் வரவில்லை. ஆனால் அன்னாரின் மரண செய்தியே வந்து சேர்ந்தது. நாம் அன்னாருக்கு செய்யவேண்டிய ஒரு முக்கிய கடமை உண்டு.

அவரது சகோதர சகோதரிகள் உறவுகள் நண்பர்கள் அனைவரும் இணைந்து அரை குறையாக விட்டு சென்ற குடும்ப பொறுப்பு, பிள்ளைகளை வழிநடத்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தினால் அவரது ஆத்ம சாந்திக்கு அது பெரும் உதவியாக அமையும் இறுதியாக அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, மக்கள், உறவினர்கள் யாவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து நிற்கின்றேன்.

**வீ.ஆனந்தசங்கரி**

செயலாளர்நாயகம், தமிழர் விடுதலை கூட்டணி

මනෝ ගනේසන්
ජාතික සහජීවනය,
සංවාද හා රාජ්‍ය භාෂා අමාත්‍ය

மனோ கணேசன்
தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல்
மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர்

MANO GANESAN
Minister of National Coexistance,
Dialogue and Official Languages

## தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு

40, புத்கமுவ வீதி,
இராஜகிரிய
14-02-2017

# எனக்கும் எனது கட்சிக்கும் பேரிழப்பு

அன்பர் E.S.P.கணேசலிங்கம் அவர்களுடைய இழப்பு எவரும் எதிர்பாராத பேரிழப்பு. இவர் எவருடனும் இனிமையாகப் பழகும் பண்பினர். எமது ஜனநாயக மக்கள் முன்னனியில் நீண்ட கால ஆதரவாளராக கட்சிக்கு ஆதர வளித்து நின்ற உண்மைத் தன்மை மிக்க ஒரு தொண்டர். இவரது பிரிவுச் செய்தி அறிந்து அதிர்ச்சி அடைந்தேன். இன்னும் பல வருடங்கள் மக்கள் மத்தியில் வாழ்ந்து நிற்க வேண்டிய ஒரு தமிழ்ப் பற்றாளன் மறைவு அவர் அருமைத் துணைவியார் மற்றும் மக்கள் மூவர் உடன்பிறப்புகள் அனைவருக்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு.

**மனோகணேசன்**

# ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

அருமை தம்பி கணேசலிங்கத்தின் பிரிவு அவரை நன்கறிந்த ஆலய அறங்காவலர்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் பேரிழப்பான செய்தியாகும். இவர் ஒரு உண்மைத் தன்மை மிக்க ஒரு தர்ம வள்ளல். இவர் தனது தந்தையார் வழியில் ஆலயங்களுக்கு வாரி வழங்குவதில் அவருக்கு அவரே நிகர் தனது கண் போல் துணைவியாரையும் இரு பெண் மக்களையும் ஏக புதல்வனையும் கண்கள் என அவர்கள் மீது பாசம் சொரிந்து காத்து நின்ற ஒரு சிறந்த தலைவனும் தந்தையுமாக விளங்கி நின்றார். தன் ஒரே சகோதரன் E.S.P நாகரட்ணம் மற்றும் சகோதரிகளின் பாசமிகு சகோதரனாக விளங்கி நின்றார்.

இவரது பிரிவால் தெஹிவளை ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமான் நிர்வாகி. ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகள் பெருங்கொடை வள்ளல் என கணேசலிங்கம் பிரிவுத் துயரை கண்களில் நீர் மல்கக் கூறினார். இப்படிப் பல ஆலய தர்மகர்த்தாக்களும் கூறினார்கள்.

*"நெருதல் உளனொருள் இன் றில்லை என்னும்*
*பெருமை உடைத்து இவ்வுலகு "* எனும்

வள்ளுவப் பெருமான் வாக்குக்கு ஏற்ப தம்பி கணேஸ் மறைந்து விட்டாரே என அறிந்து என் கண்கள் பனித்தன.

*"உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு"* - எனும்

அவரது இறுதி ஊர்வலம் பல நூற்றுக்கணக்கான அன்பர்கள் கலந்து கொண்ட காட்சியைப் பார்த்து அவரின் பெருமைகளை உணர்ந்தேன். பெருமைகளை கணேசலிங்கத்தின் தூய நல் ஆத்மா இறையடியில் நிலையான நித்திய ஆத்ம சாந்தி பெறக் கண்ணீரோடு பிரார்த்திக்கின்றேன்.

அன்பன்

**வேலணை வேணியன்**

# வேதனையில் தவிக்கும் உங்களுக்கு தேவ சமாதானம் உண்டாவதாக

கர்த்தருக்குள் அன்பானவர்களே.

பத்திரிகையில் தங்களுக்கு ஏற்பட்ட இழப்பை வாசித்தோம். மரணத்தில் எமக்கு அன்பான ஒருவரை இழப்பது தாங்கமுடியாத சோகத்தை உண்டாக்கும்.என்றாலும், மனிதர்களால் ஆறுதல் சொல்ல முடியாது. ஆனால், உங்களைப் படைத்த தேவனால் மட்டும் உங்களுக்கு ஆறுதல் தரமுடியும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார். எல்லோரைப் போலவும் அடக்கம்பண்ணப்பட்டார் ஆனால் இயேசு மூன்றாம் நாள் மரணத்தை ஜெயித்து உயிர்தெழுந்தார் இன்றும் எம்முடன் வாழுகின்றார். ஆகவே நீங்கள் பயப்படாதிருங்கள்.வேதாகமம் இப்படி கூறுகின்றது.

சங்கீதம் 48:14 இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களில் நம்முடைய தேவன். மரணபரியந்தம் நம்மை நடத்துவார்.

வெளிப்படுத்தல் 21:4: அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை.துக்கமுமில்லை.

எபிரெயர்13:8இயேசுகிறிஸ்துநேற்றும்இன்றும்என்றும்மாறாதவராயிருக்கிறார்.

ரோமர் 6:23: பாவத்தின் சம்பளம் மரணம். தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.

கொலோசெயர் 2:14-15 நமக்கு எதிரிடையாவும் கட்டளைகளாகவும் நமக்கு விரோதமாகவும். இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து,சிலுவையின்மேல்ஆணியடித்து.துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்.

கொரிந்தியர் 15:26 பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்.

தெசலோனிக்கேயர் 4:14 இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே. அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூட கொண்டு வருவார்.

மத்தேயு 11:28: வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

யோவான் 14:1 உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். நாமும் உங்கள் துக்கத்தில் பங்கெடுக்கிறோம். இந்த துக்கத்தை தாங்கிக் கொள்ள கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களுக்குரிய பெலனைத் தரவேண்டும் என்று பிரார்த்தனை செய்கின்றோம். தைரியமாயிருங்கள்! உங்களை நாங்களும் நேசிக்கின்றோம். உங்களின் துயரில் பங்கெடுக்கும்,கல்வாரி குடும்பம்.

**கர்த்தரின் பணியில்**

# உடன் பிறவா சகோதரன், வணிக மாமணி கணேஸ் அவர்களுக்கென் உளம் நெகிழ்வார் அஞ்சலி

யாழ்ப்பாணம் ESP நிறுவனத்துடனும் அமரராகி விட்ட கணேஸ் அவர்களோடும் சிறுவயது முதல் அன்புடன் பழகும் வாய்ப்புப் பெற்றவன்.

தம்பி கணேஸ் அவர்கள் யாழ் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற காலத்தில் இருந்து சிவபதம் அடையும் வரை எனக்கும் தம்பி கணேஸ் குடும்பத்தினருக்கும் இருந்த அன்பு பற்றி கல்விக் காருண்யன் அவர்கள் நன்கு அறிவார்.

பெரிய கொடை வள்ளல். கொடுக்க வேண்டுமென முடிவெடுத்தால் உடனே கொடுப்பார். வலதுகரம் கொடுக்கும் பொழுது இடதுகரம் தடுக்க முற்படும் முன் கொடுக்க வேண்டும் என அடிக்கடி சொல்வார்.

இடம்பெயர்வின் பின் ஆலய அன்னதான அறப்பணிக்கு பாத்திரங்கள் இல்லையெனக் கூறியவுடன் தம்பி விஜயனை அனுப்பி தேவையான பாத்திரங்களை பல ஆயிரம் ரூபா பெறுமதியில் வாங்கித் தந்தார். இன்றும் அதே பாத்திரங்களில் தான் அன்னதானப் பணி நடைபெறுகின்றது.

எங்கள் ஆலயம் கோமாதாக்களைப் பேணி வளர்ப்பதில் முன்னிற்பதை உணர்ந்து வருடாவருடம் அவைகளின் முக்கிய உணவான தவிட்டினை வாங்கி அனுப்பத் தவறுவதே இல்லை.

மூளைக்காய்ச்சல் நோயினால் நான் பாதிக்கப்பட்டு கொழும்பு சுலைமான் வைத்தியசாலையில் 1995 ஆம் ஆண்டு உயிருக்காகப் போராடிய காலத்தில் என் உறவினர்களில் சிலர் கூட என் சரித்திரம் முடிந்துவிட்டது. இவன் முடிந்துவிட்டான் என்று பார்க்க வராத அந்த வேளையிலும் வணிக மாமணி கணேஸ் அவர்கள் வைத்தியசாலைக்கு வந்து என்னை பார்வையிட்டது மட்டுமல்ல நிர்வாகத்திடம் "எவ்வளவு பணம் செலவானாலும் நான் தரத் தயாராக இருக்கிறேன். உரிய சிகிச்சையை அளியுங்கள்" என்று கேட்டுக்கொண்டார் என்பதை நான் மீண்டு வந்து அறிந்துகொண்ட போது அவரின் அன்பை நினைத்து பெரும் நெகிழ்வடைந்தேன். அந்நிகழ்வை எப்படி மறக்க முடியும். என் செய்வேன். அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பது ஒன்றே நான் செய்யற்பாலதாகும்.

வாரிவளவுப் பிள்ளையார் ஆலய உற்சவத்தின் போது பெருந்தொகைப் பணத்தை செலவழித்து இந்தியாவில் இருந்து பிரபலமான பக்திப் பாடகர்களை வரவழைத்து திருவிழாச் செய்து ஊரைப் பெருமைப்படுத்தியவர்.

தேர்த் திருவிழா காலங்களில் இரவு எட்டுமணிக்கு மேல் தான் வருவேன். அந்த நேரத்திலும் தனக்கும் தனது குடும்பத்திற்கும் உணவு தயாரித்து வைக்கும் படி சொல்லுவார். சில வேளைகளில் பத்து மணிக்கும் வந்ததுண்டு. நான் காத்திருந்து உணவு பரிமாறுவேன். சாப்பிட்ட பின் அன்பு செலுத்துவது மாத்திரமன்றி பணமும் தந்து செல்வார்.

இக்கட்டான காலகட்டத்தில் சிறுவயதிலேயே கல்விக்காருண்யனுடன் இணைந்து பாடசாலைப் பிள்ளைகளுக்காய் ESP நிறுவனத்தினூடாக துவிச்சக்கர வண்டிகளை வரவழைத்து நியாயமான விலைக்கு வழங்கி வந்தார். அதுமட்டுமல்லாது அந் நிறுவனத்தினூடாக வசதி குறைந்த பிள்ளைகளுக்கு துவிச்சக்கரவண்டிகளை இலவசமாகக் கொடுத்ததையும் நான் அறிவேன். இப்படிப்பட்ட பரோபகாரிக்கு வணிக மாமணி பட்டம் வழங்கியதில் வியப்பேதும் இல்லை.

